
கல்கி
KALKI 4-4-1976
75 காசு

மலரும் பூவெனப் பிள்ளை வளர்ந்திடப் பலமான துணை—

இன்க்ரிமின்*



இளமைப் பருவம்—பூவாய் மலரும் நாட்கள்—மலர்ந்து சிரித்து உங்கள் மனத்தை அள்ளி வளரும் பருவம்—இப்பருவத்தில் அவளுக்குக் கட்டாயம் தேவை—இன்க்ரிமின். பின்னர் பாருங்களேன் அவள் வளர்ச்சியை! பசித்துப் புசிப்பாள்—உண்ணும் உணவெல்லாம் ஓங்கிய வளர்ச்சியாக மாறும். நலம் தரும் வைட்டமின்கள், இரும்புச் சத்து இவற்றோடு உங்கள் மகளின் வளர்ச்சிக்கு மிகமிக அத்தியாவசியமான அமினோ அமிலம், லைசின் யாவும் நிறைந்தது இன்க்ரிமின.



இன்க்ரிமின்* டானிக்

டிராப்ஸ்—2 மாதங்கள் முதல் 2 வயது வரையில்
சிரப்— 14 வயது வரையில்

உணவையெல்லாம் ஓங்கிய வளர்ச்சியாக்கும்
உங்கள் பிள்ளை பூவாய் மலர்ந்து சிரிக்கும்!

டாக்டர்கள் நம்பிக்கைக்குப் பாத்திரமான பெயர்— Lederle சயனமிட் இந்தியா லிமிடெடின் ஒரு பிரிவு

*அமெரிக்கன் சயனமிட் கம்பெனியின் ரெஜிஸ்டர்டு டிரேடு மார்க்

Sista's-INC-363 C-R/76 Tam

கல்கி

ராக்ஷஸ, பங்குனி 22
ஏப்ரல் 4, 1976



“கல்கி”யில் வெளியாகும் கதைகளி
லுள்ள பெயர்கள் எல்லாம்
கற்பனைப் பெயர்களே ; சம்ப
வங்களும் கற்பனையே.

சீடர்கள்

நாடறிந்த தலைவர்
நாம் போற்றும் உத்தமர்
நான் சமைப்பேன் அவர் சரிதை
நன்கு வெளியிடுவீர்

வாழ்வெல்லை நிற்குமவர்
வரலாறு — இன்று
யார் படிப்பார்
நாளையோ நாலு மாதமோ
தம்முலகு நீங்குமுயிர்
அடுத்த நாள்
அச்சிடுவோம்
அள்ளிடுவோம்
எடுத்து வையும்.

— ‘தேவமகன்’



OBM 5080—TM



மீராவுக்குக் காயம் படும்போது

நோய் தொற்றாமல் தம்மைப் பாதுகாக்க, அவர் BAND-AID BRAND டிரஸ்ஸிங்குகளையே நம்புகிறார்.

காயங்கள் திறந்திருந்தால், தொற்று நோய் பரவக்கூடும். பாண்டு–எய்ட் பிராண்ட் டிரஸ்ஸிங்குகளால் அவற்றைப் பாதுகாருங்கள்.

பாண்டு–எய்ட் பிராண்ட் டிரஸ்ஸிங்குகள் நோய்க் கிருமி தொற்றாமல் காயங்களைக் காக்கின்றன. அவற்றிலுள்ள நிருபணமான ஆன்டிசெப்டிக் மருந்து மெர்க்கியூரோக்–ரோம், பிளவுபட்ட சருமத்துக்கு இதமளித்து ஆற்ற உதவுகிறது.

பாண்டு-எய்ட் பிராண்ட் டிரஸ்ஸிங்குகளைப் பயன்படுத்தி, முன்ஜாக்கிரதையுடன் இருங்கள். எப்பொழுதும் சில டிரஸ்ஸிங்குகள் கைவசம் இருக்கட்டும்.

பாண்டு-எய்ட் பிராண்ட் டிரஸ்ஸிங்குகளை ஜான்ஸன் & ஜான்ஸன் மட்டுமே தயாரிக்கிறார்கள்.

Johnson & Johnson*



மெர்க்கியூரோக்ரோம் மருந்து கலக்கப்பட்டது.

கூட்டுறவு மோசடி!

பஞ்சாப் மாநிலத்தில் பல்வேறு கூட்டுறவு சங்கங்களில் 109 கோடி ரூபாய் வரை மோசடிகள் நடந்துள்ளன என்று கணக்குத் தணிக்கையாளர் அறிவித்திருக்கிறார்கள். பிரமிக்க வைக்கும் தொகைதான்.

தேசத்தின் வடமேற்குக் கோடியில் மட்டுமில்லை; நம்மிடையேயும்கூடக் கூட்டுறவுக் கொள்ளை சக்கைப் போடாகத்தான் நடக்கிறது. தமிழகத்தில் மோசடிகள் காரணமாகவோ திறம்பட இயங்காததாலோ பதினாறு கூட்டுறவு சங்கங்களை மூடிவிடுமாறு அரசு உத்தரவிட்டிருக்கிறது. மற்றும் பல கூட்டுறவு சங்கங்களின் நடவடிக்கைகளைப் பரிசீலனை செய்து வருகிறது.

எல்லா மோசடிகளுமே மோசமானவைதாம் என்றாலும் கூட்டுறவு மோசடி போல் மோசமானது வேறில்லை. கூட்டுறவுச் சங்கங்கள், அங்கத்தினர்களுக்கு நன்மை செய்யவே ஏற்பட்டவை. மக்கள் தங்களுக்கு மலிவான விலையில் தரமான பொருள்கள் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் அங்கத்தினர்களாகிறார்கள். அனைவரும் பொருளாதார ரீதியில் அடி மட்டத்தில் இருப்பவர்கள். இவர்கள் வயிற்றில் அடிப்பதுபோல் மோசடிகள் நடப்பதென்றால் அதைவிட அநியாயம் என்ன இருக்க முடியும்?

பாரத அரசு கூட்டுறவு முயற்சியில் ரொம்ப நம்பிக்கை வைத்து இதுவரை நாட்டில் மூன்று லட்சம் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்க அனுமதியும் உதவியும் அளித்துள்ளது. கூட்டுறவுச் சங்கங்கள் பெருகிய வேகத்தில் மோசடிகளும் வளர்ந்துள்ளன. இவற்றைத் தடுத்து நிறுத்த முடியவில்லையென்றால் கூட்டுறவுத் துறையையே குழி தோண்டிப் புதைத்து விடலாம்!

கல்கி

மலர் 35

இதழ் 36

வதைக்கும் வட்டி!

தொழில் வர்த்தக நிறுவனங்களுக்கு பாங்குகள் கடன் தரும் போது 16.5 சதத்துக்கு மேல் வட்டி வாங்கக் கூடாது என்று ரிஸர்வ் பாங்கு உச்ச வரம்பு விதித்திருக்கிறது. ஆக, இந்த உத்தரவுக்கு முன்னால் இதை விடவும் அதிகமாக வட்டி வாங்கிக் கொண்டிருந்தன பாங்குகள் என்பதைக் கடன் வாங்கி அறியாத புண்ணியவான்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

பாங்கில் பணம் போட்டு வைப்பவருக்கு அவை தரும் வட்டி அதிகபட்சம் ஏழு அல்லது எட்டு சதவீதம்தான். ஆக லாபம் எவ்வளவு சதவீதம் என்பதை உங்கள் வீட்டுப் பையன்கூடக் கணக்குப்போட்டுச் சொல்வான்.

நிர்வாகச் செலவினங்கள் இருக்கவே செய்கின்றன. அவற்றையும் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டியதுதான். ஆனால் இந்த நிர்வாகச் செலவினங்களைக் கணிசமாகக் குறைக்க வாய்ப்பிருக்கிறது என்பதே தொழில் வர்த்தகத் துறையினரின் வாதம்.

மூலைக்கு மூலை பாங்குக் கிளைகளைத் திறப்பது, திரும்பி வருவது சந்தேகம் என்ற நிலையிலும் சோஷலிஸ சித்தாந்தத்தின் அடிப்படையில் கடன்கள் தருவது, தேவையற்ற அளவில் ஊழியர்களின் எண்ணிக்கையைப் பெருக்கிவிடுவது போன்ற காரியங்களைக் கட்டுப்படுத்தினால் யோக்கியப் பொறுப்புடன் பாங்கில் கடன் வாங்குவோருக்கு வட்டி விகிதங்கள் மேலும் குறைவதற்கு நிறைய வாய்ப்புண்டு.

அரசுடைமையான பாங்குகள் வசதிகளைப் பெருக்க வேண்டுமேயன்றி அபரிமித வட்டியால் வதைக்கக் கூடாது.

தமிழ்த்திருநாடு தன்னைப் பெற்ற - எங்கள் தாயென்று கும்பிடடீ பாப்பா -- பாரதியார்

பகைவனின் பலம்

எதிரியை வெற்றிகொள்ள முதல் தேவை அவன் பலத்தைத் தெரிந்துகொள்வதே. அதைச் சரியாகக் கணித்துவிட்டால் பாதி யுத்தத்தை ஜெயித்த மாதிரிதான். அந்த அளவில் திரு சி. சுப்பிர

மணியம் பண வீக்கப் பகைவனின் பலத்தைக் கச்சிதமாக உணர்ந்து பேசியிருப்பது நிம்மதி தருகிறது.

''பற்றாக்குறை பட்ஜெட் தயாரித்திருப்பது அல்ல உண்மையான ஆபத்து; ஒரே ஆண்டில் திட்ட இனங்களுக்காக ஏழாயிரம் கோடி ரூபாய்க்கு மேல் செலவழிக்கப் போகிறோமே அதுதான் பெரிய ஆபத்து. பண வீக்கம் இதனால் ஏற்படாமலிருக்க ஏழாயிரம் கோடி ரூபாயையும் நற்பயன் தருமாறு செலவிட வேண்டும்'' என்று கூறியுள்ளார்.

இது தொடர்பாக திரு ஆர். வேங்கட ராமன் சுயராஜ்யாவில் எழுதியுள்ளது கவனத்துக்கு உரியது.

பெரிய அளவில், நிதி ஒதுக்கீடு செய்து விட்டால் மட்டும் சாதனைகளைப் புரிந்துவிட்டதாகாது. செலவினங்களைக் கண்டிப்புடன் கண்காணித்துத் திட்ட இனங்கள் காலக் கெடு தாண்டாமல் முன்னேற்றம் காண்கின்றனவா என்பதையும் கவனித்து வந்தாலன்றிப் பண வீக்கப் பகைவனின் பலம் மீண்டும் ஓங்கும்.

ஆண்டின் கடைசி மூன்று மாதங்களில் அவ்வாண்டுக்கு ஒதுக்கப்பட்ட பணத்தை முழுமையாகச் செலவிட்டு விட வேண்டும் என்ற எண்ணத்தில் வாரி விடுவது பல அரசாங்க இலாக்காக்களில் வழக்கமாக இருந்து வருகிறது. இச்சந்தர்ப்பங்களில் செலவுக்கு ஏற்பக் காரியங்கள் நடந்துள்ளனவா என்பது கவனிக்கப்படுவதில்லை.

திட்டம் தீட்டுவது மட்டுமே திட்டக் கமிஷன் வேலை; அதை நிறைவேற்றுவது அரசாங்க இலாகாக்கள் பொறுப்பு என்றில்லாமல், திட்டக் கமிஷனே பணிகள் நன்கு நிறைவேறுகின்றனவா என்று பார்க்கும் அதிகாரமும் பெற்றிருக்க வேண்டும்.

பட்ஜெட் தற்போது சமர்ப்பிக்கப்படும் முறையில் உள்ள ஒரு குறைபாட்டையும் சுட்டிக் காட்டியுள்ளார் திரு ஆர். வி. பட்ஜெட் தயாரிக்கப்படும்போது பற்றாக்குறை இத்தனை ரூபாய் என்று நிர்ணயிக்கிறார்கள். ஆனால் ஆண்டுக் கடைசியில் பற்றாக்குறை திட்டமிட்டதை விட அதிகமாக வளர்ந்து விட்டிருப்பதைப் பார்க்கிறோம். எதனால் இப்படி வளர்ந்தது, எந்தச் செலவினங்கள் உயர்ந்தன என்ற விவரங்கள் தரப்படுவதில்லை.

மக்களுக்கு இதனை விளக்கிக் கூறவேண்டிய கடமை ஆட்சிக்கு உண்டு.

பறவையின் ஆசை புலிக்குமா?

வாஷிங்டன் மிருகக் காட்சி சாலையிலிருந்து நாலு இந்தியப் பறவைகள் தப்பித்துக் கொண்டதில் வியப்பில்லை. அவை சொல்லி வைத்தாற்போல் இந்தியத் தூதரகத்தில் வந்து ''சரண''டைந்ததுதான் ஆச்சரியம். மிருகக்காட்சி சாலை நிர்வாகிகள் அவற்றைத் தாஜா செய்து திரும்ப அழைத்துப் போயிருக்கிறார்கள்.

காட்சி சாலை காப்பாளர், இந்திய தூதர் திரு டி. என். கால் அவர்களுக்கு எழுதினார்:

இந்தியப் பறவைகளுக்கு இந்தியத் தூதரகத்தில் இருக்கவே பிடித்திருக்கும். என்றாலும் அவற்றைத் திரும்பப் பெற்றதில் மகிழ்ச்சி அடைந்தேன்.

திரு கால் பதில் எழுதினார்: ரொம்ப சரி, ஆனால் என் கவலையெல்லாம் உங்கள் மிருகக் காட்சி சாலையில் உள்ள வங்கப் புலிகளுக்கு இதே போன்ற ஆசை ஏற்பட்டுவிடக் கூடாதே என்பதுதான்!

அர்த்தமுள்ள பதில்!

ராஜாஜி சிந்தனை

ஆச்சரியமான அண்டம்

நாம் இரவில் வானத்தில் பார்க்கும் நட்சத்திரங்கள் எல்லாம் நம்முடைய சூரியனைப் போன்றவையேயாகும். அவைகளில் சில நம் சூரியனை விடப் பல கோடி மடங்கு பெரியன. வானத்தில் சில இடங்களில் மங்கலாக வெண் மேகம் போன்று தோன்றுவது பல்லாயிரக் கணக்கான நட்சத்திரங்களின் கூட்டமேயாகும். தூரம் பருமன், ஓட்டம் ஆகியவற்றை ஆராய்ந்தால் அண்டத்தில் காண்பவையெல்லாம் அச்சமும் ஆச்சரியமும் ஒருங்கே தரக்கூடியவையாக இருப்பதை அறியலாம். இத்தகைய ஆராய்ச்சியில் நம் கற்பனை சக்தியைப் பயன்படுத்துவது நல்லது. அப்படி செய்தால் நம்மிடம் செருக்குக் குறைந்து பணிவு உண்டாகும். அன்புணர்ச்சி தோன்றும். துக்கத்தையும் துன்பத்தையும் சகித்துக் கொள்ள வேண்டிய பலம் உண்டாகும். துக்கத்தையே இன்பமாக மாற்றக்கூடிய சக்தியும் பிறக்கும்.

— **நட்சத்திரமும் அணுவும் என்ற கட்டுரையில்**



வாய் குரைக்குது! வால் குழையுது!!
முரசொலி
டில்லிக்கு தூது
எம்.ஜி.ஆர் டபுள் ரோல்லே நடிக்கிறாரு!
அ.தி.மு.க கட்சிக்காரர்கள்
எம்.ஜி.ஆர் விசாரணை
கொள் முதல் விலையில் 20% வெட்டு
விவசாயி
அரசு நெல் கொள்முதல் கொள்கை

குவாலியர் ரேயானின் மகத்தான 26 ஆண்டு காலப் பணி



தன்வலிமை பெறும் கனவை நனவாக்கி வரும் பணி.

ரேயான் துணிகள், ஸ்டேபிள் இழை, ரேயான்-கிரேடு பல்ப் (கூழ்), ரேயான் ஸ்டேபிள் நூலிழைத் தொழிற்சாலைகளுக்-கான எந்திர சாதனங்கள் ஆகிய எல்லா-வற்றையும் நம் நாட்டிலேயே உற்பத்தி செய்து கொள்வதற்கென குவாலியர் ரேயான் செய்துவரும் முயற்சிகள், நாடு சுதந்திரம் எய்திய நாளிலேயே தொடங்கிவிட்டன.

மூங்கில் மற்றும் இதர கெட்டி மரங்களிலிருந்து கரை திறனுள்ள ரேயான்-ரகக் கூழ் தயாரிப்பு, மற்றும் ரேயான், பல்ப், இவை சார்ந்த தொழிற்சாலைகள் ஆகியவற்றுக்கான நுட்பாவீனமான எந்திர சாதனங்களின் உற்பத்தி முதலியவற்றிலே குவாலியர் ரேயான் முன்னோடியாக விளங்குவதனால், ரேயான் தொழிலிலே நம் நாடு தன்வலிமை பெற வழியமைந்துள்ளது.

இன்று, குவாலியர் ரேயானின் ஸ்டேபிள் நூலிழை உற்பத்தியளவு, 520 லட்சம் பேருக்கு ஆடை வழங்கப் போதுமானதாக உள்ளது. மரக் கூழ் உற்பத்தியோ, ஆண்டு தோறும் ஒரு லட்சம் டன்களுக்கு மேல்; இது செல்லுலோஸ் இழையளவிலே கணக்கிட்டால், 5.2 லட்சம் பருத்தி பேல்களுக்கு ஈடாகும்.

கடந்த பத்தாண்டுகளில், குவாலியர் ரேயான் நம் நாட்டின் பொக்கிஷத்திற்கு, வரிகளும் தீர்வைகளுமாக ரூ. 90 கோடி செலுத்தியுள்ள-தோடு, அதே காலத்தில் ரூ. 360 கோடி அந்நியச் செலாவணியை மிச்சப்படுத்தியுள்ளது; இதை நோக்கும்போது, தன்வலிமை வாய்ந்த பொருளாதார அமைப்புக்கு குவாலியர் ரேயான் செலுத்திவரும் மகத்தான பணியின் பெருமை தெளிவாக விளங்கும்.

குவாலியர் ரேயான்—

தேச முன்னேற்றமே முதன்மை எனக் கருதுவோர்.

தி குவாலியர் ரேயான் ஸில்க் மானுபாக் (வீவிங்.) கோ. லிட்., பிர்லாகிராம், நாக்தா (ம.பி.)

Sobhagya GR 74-2-Tam.


வேதமதத்தின் விசேஷ அம்சங்கள் ②


ஜகத்குரு ஸ்ரீகாஞ்சிகாமகோடி சங்கராசாரிய ஸ்வாமிகள்

பாரம்பரியமாகத் தொழிலைப் பிரித்துத் தராத மற்ற தேசங்களின் பழைய கதை என்ன, புதுக் கதை என்ன என்று பார்க்கலாம். பழைய காலத்தில் அங்கெல்லாம் கிரீஸ் நாகரிகம், எகிப்து நாகரிகம் என்பது போன்ற பெரிய பெரிய பண்பாடுகள், civilizationகள் தோன்றின. ஆனால் இப்போது அவை ஏதாவது உயிரோடு இருக்கிறதா என்றால், இல்லவே இல்லை. வித்தியாசமே இல்லாமல் ஒரே சமுதாயமாக இருந்த அத்தனை பெரிய இதர கலாசாரங்களும் இன்று அடியோடு மறைந்து போய்விட்டன. வித்தியாசங்கள் உள்ள நம் ஹிந்து கலாசாரம் மட்டும் அலை அலையாக எத்தனையோ அந்நியப் படையெடுப்புக்கள், ஆக்கிரமிப்புக்கள் வந்தும் கூட யுகாந்தரமாக இன்னும் மூச்சைப் பிடித்துக் கொண்டு சாகாமலே அமரமாக இருக்கிறது. மேற்போக்கில் பார்த்தால், பேதங்கள் இருக்கிற சமூகம்தான் கலபத்தில் உடைந்து போய், அதன் தனி மதம், நாகரிகம் எல்லாம் அழிந்து போய்விடும் என்று தோன்றுகிறது. ஆனால் சரித்திரபூர்வமான வாஸ்தவ நிலைமை (historical fact) பார்த்தாலோ, இதற்கு நேர் மாறாக, தொழில் பேதங்களும் அதிகார பேதங்களும் கொண்ட ஒரே கலாசாரமான ஹிந்து நாகரிகம்தான் பதினாயிரம் ஆண்டுக் காலமாக ஜீவசக்தியுடன் இருந்து வந்திருக்கிறது; இப்படிப்பட்ட பேதங்கள் இல்லாத நாகரிகங்கள் – உலகமே பிரமிக்கிற பிரமிட்களைக் கட்டிய நாகரிகம், ஸாக்ரடீஸ் மாதிரி மகா பெரிய அறிவாளிகளின் தத்துவங்கள் வளர்ந்த நாகரிகம் எல்லாம் – பழங்கதையாக மங்கி மறைந்தே போய்விட்டன.

சரி, இப்போது மகத்தான ஸயன்ஸ் அபிவிருத்தி அடைந்து சுகபோக சாதனங்களை ஏகமாகப் பெருக்கிக் கொண்டிருக்கிற தேசங்களின் சங்கதி என்ன என்று பார்த்தால், அங்கெல்லாமும் ஏதோ வெளி வாழ்க்கையில் பெரிய முன்னேற்றம் இருக்கிறாற் போல் தோன்றுகிறதே ஒழிய உள்ளே ஒரே தத்தளிப்பாகவும், கொந்தளிப்பாகவும்தான் இருக்கிறது. மேல்நாட்டு அறிவாளிகள் எல்லாரும் ஒரு முகமாகத் தங்கள் ஜனங்கள் அடியோடு நிம்மதியிழந்து விட்டார்கள் என்றுதான் சொல்கிறார்கள். இக்காலத்தையே (age of unrest) என்று ஏகமனதாக வர்ணிக்கிறார்கள். இந்த அமைதி இழந்த வெளிநாட்டார்களில், அந்நிய மதஸ்தர்களில் ரொம்பப் பேர் உண்மையான நிறைவுக்காக, திருப்திக்காக இந்தியாவின் ஆத்மிகத்துக்குத்தான், நம்முடைய ஞான விசாரம், யோகம், பஜனை இவற்றுக்குத்தான் திரும்புகிறார்கள். 'எல்லாம் ஒன்று' என்று வைத்த சமுதாயங்களிலெல்லாம் புரட்சி, தனி மநுஷ்யர்களின் தார்மிகச் சீர்குலைவு, கொலை, கொள்ளை, விபசாரம், பொய், புனைச்சுருட்டு இவைதாம் நாளுக்கு நாள் ஜாஸ்தியாகி வருகின்றன.

வெளியிலே பேதங்கள் உள்ள நம் சமுதாயத்திலோ என்றால், ஆதி காலத்திலிருந்து ஸ்திரத் தன்மை (stability) இருந்து வந்திருக்கிறது. யுகம், யுகமாக இப்படிப்பட்ட stability இருந்ததால்தான், எத்தனையோ ஆயிரம் வருஷங்களாக நம் தத்வங்கள், கலைகள், அறிவு நூல்கள், பக்தி, ஞானம் யாவும் மங்காமல் மேலும் மேலும் வளர்ந்து கொண்டே வந்திருக்கின்றன. இது விசித்திரமாக இருந்தாலும்,





நிஷ்பட்சபாதமாகப் பார்த்தால் எவருக்கும் தெரியும். நம் தேசத்தில்கூடப் பண்புக் குறைவான போக்குகள், கிளர்ச்சிகள், டெமான்ஸ்ட்ரேஷன்கள், திருட்டு, புரட்டு ஆகிய எல்லாம் (இவை எல்லாமே மனசின் சாந்தி போய்விட்டதற்கு அடையாளங்கள் தான்) கடந்த நாற்பது, ஐம்பது வருஷங்களாகத்தான் உண்டாகியிருக்கின்றன—அதாவது, மற்ற தேசங்கள் மாதிரி நாமும் வெளியிலே சமத்துவம் கொண்டாட வேண்டும் என்று ஆரம்பித்த பிறகுதான் உண்டாகியிருக்கின்றன.

தர்க்கப்படி (logical) பார்த்தால் சமத்துவம் இருக்கிற சமூகத்தில்தான் சாந்தியும் சந்துஷ்டியும் இருக்க வேண்டும். ஆனால் நடைமுறையோ இதற்கு நேர்மாறாக இருக்கிறதே என்றால், இதற்குக் காரணம் இயற்கையின் போக்கைக் கவனிக்காமல் எத்தனை நல்ல எண்ணத்தோடு, உத்தமமான நோக்கத்தோடு சில காரியங்களைச் செய்தாலும் அவை நடைமுறையில் பலன் தருவதில்லை.

எல்லாம் சமம் என்றாலும் ஒரு சமூகம் நடக்க வேறு வேறு விதமான காரியங்கள் நடக்கத்தான் வேண்டியிருக்கின்றன. புத்தியால் செய்யும் காரியம், ராஜாங்க நிர்வாகம், வியாபாரம், விவசாயம், சரீர உழைப்பு எல்லாம் எந்த சமூகத்திலும் நடக்கத்தான் வேண்டியிருக்கிறது. இவற்றில் எதற்கும் எவரும் போகலாம் என்று சமத்துவ சமுதாயமாக வைக்கிற போது என்ன நடக்கிறது? அவரவரும் தங்கள் மனோபாவப்படி, தங்கள் யோக்யதைப்படி, தங்கள் தேவைப்படி எந்தத் தொழிலுக்கு ஏற்றவர்களோ, அப்படி அவர்களாகவே அந்தந்தத் தொழிலுக்கு வரட்டும் என்ற நல்ல எண்ணத்தில் தான் இப்படி சமவாய்ப்பு (equal opportunity) தந்திருக்கிறார்கள். ஆனால் நடைமுறையில் மனுஷ்ய இயற்கை எப்படியிருக்கிறது?

ஒவ்வொருவருக்கும் தங்கள் யோக்யதையையும், தேவையையும் பற்றி அதிகப்படியான அபிப்பிராயம் (over-estimate) தான் இருக்கிறது. பிரத்தியான் பணம் முழுவதும் தன் பர்ஸுக்குள் வர வேண்டும் என்பது ஒன்றுதான் சகலருக்கும் ஒரே மனோபாவமாக இருக்கிறது.

எல்லாரும் நிறையப் பணம் கிடைக்கிற தொழில், சௌகரியமான தொழில் இவற்றுக்குத்தான் போட்டி போடுகிறார்கள். எல்லோருக்கும் அப்படியே இஷ்டப்படி கிடைக்க முடியுமா? சமூகம் நடக்க வேண்டுமானால் மற்ற தொழில்களும் நடக்கத் தானே வேண்டியிருக்கின்றன? ஆகவே ஏதோ ஒரு ரீதியில் ஜனங்களை வெவ்வேறு தொழில்களில் கட்டுப்படுத்தத்தான் வேண்டியிருக்கிறது. இந்த ஏற்பாட்டில் சௌக்யமான தொழிலைப் பலர் பெற முடியாமல்தான் போகிறது.

இதனால் எப்போது பார்த்தாலும் போட்டியும், பொறாமையும், பரஸ்பரச் சண்டையுமாக ஆகிறது. வெளியிலே சமத்துவம் என்றாலும் உள்ளுக்குள்ளே பரஸ்பர பேதம்தான் வளருகிறது. (தொடரும்)

[1932ம் வருஷத்திலிருந்து பெரியவர்கள் வழங்கிய உரைகள், ஸ்ரீமுகங்கள், கட்டுரைகளிலிருந்து தொகுத்தது]

காப்பி அடிக்க முடியாதது!



ஜீவனுள்ள ஒரே காபி

நரசூஸ்


"தெர்மலோ" காபி

''தெர்மலோ'' முறை தயாரிப்பு
நரசூஸ் காபியின் தனிச் சிறப்பு.

நற்சுவை மிகுந்தது.
நறுமணம் கொண்டது.
நாளும் புதியது.
நரசூஸ் காபி!

தயாரித்த 24 மணி
நேரத்திற்குள்
தமிழகத்தில் உள்ள எங்கள்
எல்லா கிளைகளின் மூலம்
வினியோகம்
செய்யப்படுகிறது.

ADWAVE/NCC 410 TAM



நரசூஸ் காபி கம்பெனி.
சேலம் - 636 007
கிளைகள் :- பாண்டிச்சேரி &
தமிழகமெங்கும்.

நகர் வலம்: வங்கக் கடல்-சங்கத் தலம்

ரா. வீழிநாதன்

மனிதன் தன் ஆயுளில் 'சார் தாம்'களை ஒரு முறையாவது தரிசனம் செய்ய வேண்டும் என்பார்கள் வடவர்கள். 'தாம்' என்றால் புனிதத் தலம் என்று பொருள். வடக்கே பத்ரி, தெற்கே ராமேசுவரம், மேற்கே துவாரகை, கிழக்கே பூரி இவையே அந்தத் திருத்தலங்கள்.

மஹோததி என்னும் பெருங்கடலையும், வார்கவி என்னும் ஆற்றையும் இரு எல்லைகளாகக் கொண்டு கோவில்களையும் குளங்களையும் சங்க வடிவில் உள்ளடக்கிக் கொண்டிருப்பதால் பூரிக்குச் சங்க க்ஷேத்திரம் என்ற பெயரும் பொருத்தமாகவே அமைந்துள்ளது.

இத்தலத்தின் கோயில்களையும் குளங்களையும் வலம் வருவது என்றால் ஒரு நாள் போதாது. அதனால்தான் போலும், ஏராளமான தர்ம சத்திரங்களும் மடங்களும் இங்கே கட்டிப் போடப்பட்டிருக்கின்றன. அவற்றையும் விஞ்சிவிட்டன நவீன வசதிகள்கொண்ட ஹோட்டல்கள்! இவ்வூரைச் சுற்றி வருவதற்கு ஏற்ற வாகன வசதி சைக்கிள் ரிக்ஷாதான். காரணம், சின்னஞ் சிறு சந்து பொந்துகளில் எல்லாம்கூடப் புகழ்பெற்ற பல கோயில்கள் உள்ளன. அவற்றுள் பிரதானமான ஜகந்நாதர் பற்றிய கதை இதுதான்:



ஆரியர், திராவிடர் பேதமறியாது வாழ்ந்து வந்த ஆதிவாசிகள் – வேடுவ குலத்தில், சபரியின் பரம்பரையில் வந்த சபரர்கள்–எல்லை காண இயலாத நீல வானையும் நீலக் கடலையும் கண்டு இயற்கையின் வழி சென்று ஆண்டவனை நீல மாதவனாக வழிபட்டு மகிழ்ந்திருக்கிறார்கள்.

இந்திரத்யும்னன் என்னும் மன்னன் அளப்பற்கரிய பக்தி காரணமாக நீலமாதவனைச் சபரர்களிடமிருந்து கவர முயன்றிருக்கிறான். தன் காரியம் ஈடேற வித்யாபதி என்னும் அந்தணனை ஏவியிருக்கிறான். இளம் பிராயத்தினனான வித்யாபதி சபர மங்கை லலிதாவைக் கண்டதும் காதல் கொண்டிருக்கிறான்; கல்யாணமும் செய்து கொண்டுவிட்டிருக்கிறான். அதன் பலனாக லலிதாவின் தந்தை விசுவாவசு மருமகன் வித்யாபதிக்கு நீலமாதவனைக் காட்டச் சம்மதிக்கும்படி ஆகிவிட்டது. இருந்தாலும் அவனைக் கண்ணைக் கட்டித்தான் காட்டுக்கு அழைத்துப்போனான்.

கண்ணைக் கட்டினாலும் கெட்டிக்காரத்தனம் செய்தான் மருமகன். வழி நெடுகக் கடுகை விதைத்துக் கொண்டே சென்றிருக்

□ மாக் கல்லில் சிற்பக்கலை.



கிறான். கடுகு வெடித்து வளர்ந்து வழி காட்டி விடும் என்ற நம்பிக்கையோடு. அவன் தட்டியில் புகுந்தால், நீலமாதவனுக்குக் கோலத்தில் புகத் தெரியாதா? இந்த்ரத்யும்னனை அவன் அழைத்துச் சென்றபோது நீலமாதவன் இருந்த இடத்தில் மணல் திட்டுத்தான் இருந்தது. அதற்காக இந்திரத்யும்னன் மனம் இடிந்து விடவில்லை. அசுவமேத யாகம் புரிந்து அவரை வழிபட்டிருக்கிறான்.


திரை கடலில் மூன்று மரங்கள் மிதந்து வந்து சக்ர தீர்த்தத்தில் ஒதுங்கின. அவற்றை எடுத்து வந்து சிலை செய்து கொள்ளுமாறு ஆணை பிறந்தது. கிழத் தச்சன் ஒருவன் இருபத்தொரு நாட்களில் சிலை செதுக்கித் தருவதாகக் கூறினான். ஆனால் ஒரு நிபந்தனை விதித்தான், இருபத்தொரு நாட்கள் ஆவதற்கு முன் யாரும் கதவைத் திறந்து தன் வேலையைப் பார்க்கக் கூடாது என்று!

ஆனால் பதினைந்து நாட்களுக்குள் தச்சு வேலை செய்யும் ஓசை நின்று விடவே, அரசி குண்டிசாவுக்குப் பயமாகப் போய்விட்டது, கிழம் எங்கே உயிரை விட்டு விட்டதோ என்று! அந்தத் துடிப்பில் கதவைத் திறந்து விட்டாள்! கிழவனைக் காணோம். அரை குறை வேலைப்பாட்டுடன் மூன்று வடிவங்கள் மட்டும் இருந்தன. முக்குணங்களுக்கும் முச்செயல்களுக்கும் பிரதிநிதியாக விளங்கிய அவ்வடிவங்கள் பலபத்ரர், சுபத்ரை, ஜகந்நாதர் என்று போற்றப்பட்டுத் தெய்வங்களாயின. அருவமும் உருவமும் கலந்த இச்சிற்பங்கள் உருவ வழிபாட்டின் தொடக்கம் என்பதற்கு அறிகுறியோ?

இருபத்திரண்டு படிகள் ஏறி ஜகந்நாதர் கோயிலை அடைய வேண்டும். மனிதனிடம் படிந்துள்ள தீய குணங்களை இப்படிக் கணக்கிட்டு அவற்றை வெற்றி கொண்டாலே மனிதன் ஆண்டவனை நெருங்க முடியும் என்று கோடிகாட்டியுள்ளார்கள்.

ஆண்டவனுக்குப் படைக்கப்படும் நிவேதனம், விமலா தேவிக்கும் மறு நிவேதனம் செய்யப்பட்டுப் பக்த கோடிகளுக்கு மகாப் பிரசாதமாக வழங்கப்படுகிறது. பாகசாலையில் இந்தப் பிரசாதங்கள் தயாராகும் விதத்தைக் கேட்டால் வியப்புறுவோம். ஐம்பத்தாறு வகை உணவுகள் விசேஷ காலங்களில் தயாராவதுண்டாம். அன்றாடம் புதிய புதிய மண்பாண்டங்களில்தான் உணவு சமைக்கிறார்கள். ஓர் அடுப்புத் தீயில் பல பாத்திரங்களில் நீர் வைத்து ஆவி முறையில் வேகவைத்து விடுகிறார்கள். இந்தக் காலத்துப் பிரஷர்குக்கர் கூடச் சில முறை ஏமாற்றி விடும்.

□ புகழ்பெற்ற புரித் தேர் விழா.




□ ஜகந்நாதர் ஆலயம்.



இங்கே காரியம் கன கச்சிதமாக முடிகிறது. சமைப்பவர்களும் சரி, எடுத்துச் செல்பவர்களும் சரி, வாயைத் துணியால் கட்டிக் கொண்டு காவடியில் ஆண்டவனுக்குப் படைக்க எடுத்துச் செல்கிறார்கள்.

'போக்' என்னும் நிவேதனம் முடிந்து இறைவனுக்கு ஆரத்தி எடுப்பதைக் காணும் பொழுது மெய்சிலிர்த்துப் போவோம்; ஆதி சங்கரர் ஜகந்நாதரில் திளைத்துப் பாடிய அஷ்டக வரிகள் நினைவுக்கு வருமானால், நாமும், 'ஹே ஜகந்நாதா! விழி வழியே உள்ளம் புகுந்து மகிழ்வித்தருள்வாயாக!' என்று வேண்டிக் கொள்வோம்.

□ பலபத்ரர், சுபத்ரை, ஜகந்நாதர்.



ஆதிசங்கரர் நிறுவிய மடங்களில் ஒன்றான கோவர்த்தன பீடம் புரியில்தான் இருக்கிறது. ஜகந்நாதர் கோயிலிலும் இம் மடத்திலும் ஆதி சங்கரரின் மூர்த்தங்கள் இருக்கின்றன. ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகள் ஆதி சங்கரருக்கு அற்புதமானதோர் ஆலயம் எழுப்பியுள்ளார்கள். கடற்கரைச் சாலையில் கடலைப் பார்த்தாற் போல் ஸ்ரீ சைதன்ய மகாப் பிரபுவுக்கும், பத்மாவதி ஜய தேவருக்கும் ஒரே மேடையில் பக்கத்தில் பக்கத்தில் உள்ள மூன்று கோயில்களும் வங்காள, உத்கல, கேரள — பல்லவக் கலை மரபுகளைச் சித்திரிப்பதாக உள்ளன. இங்கே அதர்வ வேதப் பாடசாலையும் இயங்கி வருகிறது.

புரியின் கடற்கரை வெகு அழகானது. அலைகள் சீறி வந்து கரையை மோதிப் பார்ப்பவர்களை அச்சுறுத்தினாலும், ஆழம் இல்லாத கடல்தான். சுற்றுலா வரும் அயல் நாட்டு நங்கைகளும் இங்கு இறங்கிக் குளிப்பதுண்டு. அவர்களுக்கு உதவித் துணையாக மீனவர்கள் நிற்பார்கள். சில சமயம் அவர்களுக்குக் கை கொடுத்துக் கரையேற்றவும் செய்வார்கள். அவர்களைப் போல நாமும் தான் உதவுவோமே என்று நீங்கள் போனால், தங்கள் பிழைப்பில் மண் விழாமல் உங்களுக்கும் உதவ வந்து விடுவார்கள்.

ஜகந்நாதர் கோவிலின் வெளிப் பிராகாரச் சுவரை ஒலி ஊடுருவ முடியாது! கடலோசை கோவிலைத் தாக்குவதில்லை. இதற்கும் ஒரு கதை உண்டு. ஆனால் கதையை விட அந்தக் காலத்துச் சிற்பக் கலைஞரின் ஆற்றலே வியப்பளிக்கும் விஷயம்.

ஜகந்நாதர் ஆனி மாதத்துப் பௌர்ணமி அன்று ஆனந்தபஜாரை அடுத்துள்ள தேவஸ்நான மண்டபத்தில் வந்து அமருவார். அதிகம் நீராடி அறியாத அவர் அன்று நீராடி மகிழ்வார். எங்கிருந்தோ தெற்கே இருந்து வந்த ஒரு கணேச உபாசகர் கணேசரைத் தவிர வேறு கடவுளர்களைப் பார்ப்பதில்லை என்று வீம்பாக இருந்ததால், அன்று அவருக்காகக் கணேச வேஷம் போட்டவர் இன்று நமக்காகப் போடுகிறார். இப்படி பக்தர்களை மகிழ்விப்பவர் மறுநாள் காலை பார்த்தால் ஜுரம் என்று படுத்து விடுவார். பதினைந்து நாட்களுக்குத் தரிசனம் தர மாட்டார்! 'மரத்தால் ஆனவர் சரியாக இருக்கிறாரா?' என்று பார்ப்பதற்கே இந்த 'ஜுர வேஷம்!

இந்தப் பதினைந்து நாட்களுக்குள் ரதம் ஜோடித்துத் தயாராகி விடும். 'ரத ஜாத்ரா' என்னும் தேரோடும் விழாவுக்கு ஆடி மாத சுக்கிலத் துவிதியை அன்று புறப்பட்டு விடுவார். ஆண்டுதோறும் காலோடு தலை புதிய தேர்கள் தயாராகும். ஜகந்நாதர் தேர் நாற்பத்தைத்தடி உயரம் இருக்கும். பதினாறு சக்கரங்களும், பதினாறு கலசங்களும் கொண்ட இதன் நிறம் மஞ்சள். 'நந்தி கோஷ்' அல்லது 'கருடத்வஜ' என்று இதற்குப் பெயர். பலபத்ரரின் தேர் நாற்பத்து நான்கு அடி உயரமும் பதினான்கு சக்கரங்கள் கொண்டதாகவும் இருக்கும். நிறம் நீலம். சுபத்ராவின் தேர் நாற்பத்து மூன்றடி உயரமும் பன்னிரண்டு சக்கரங்கள் கொண்டதாகவும் இருக்கும். நிறம் சிவப்பு. விஷ்ணு, சிவ, சக்திக்கு அடையாளம் இவை.

இவர்கள் தேரில் அமர்ந்த பின்னர் புரி மன்னர் தங்கத் துடைப்பத்தால் தேர்த் தட்டைத் துப்புரவு செய்வார். ஆண்டவனுக்கு எதிரே அரசனும் ஆண்டியும் ஒன்றுதான் என்பதை விளக்குவதாகும் இந்தச் செயல்.

அந்தக் காலத்தில் புரி மன்னரின் இந்தச் செயலைக் குறைத்துப் பேசியிருக்கிறான் காஞ்சி மன்னன். அந்தச் சொல் தாளாமல் புரி மன்னன் அவன் மீது படையெடுத்துப் புறப்பட்டிருக்கிறான். கடவுளரான அண்ணனும் தம்பியும் அவனுக்கு உதவ முந்திக் கொண்டிருக்கிறார்கள். கறுப்புக் குதிரையிலும் வெள்ளைப்புரவியிலும் ஏறிக்காஞ்சி நோக்கிச் சென்றவர்களுக்கு வழியிலே தாகம் எடுத்திருக்கிறது. மாணிக்கம் என்ற ஆயர்குல நங்கையிடம் தயிர் வாங்கிச் சாப்பிட்டிருக்கிறார்கள். கையில் காசு இல்லாமற் போகவே, மோதிரத்தைக் கழற்றிக் கொடுத்து, 'புரி மன்னர் இவ்வழியே வருவார், அவரிடம் இம் மோதிரத்தைக் காட்டி உனக்குக் கிடைக்க வேண்டிய தொகை வாங்கிக்கொள்' என்று கூறிச் சென்றிருக்கிறார்கள். தனக்கு உதவ வந்த தெய்வத்தை நினைத்து மகிழ்ந்த மன்னன் மாணிக்கத்துக்கு ஓர் ஊரையே இனமாக எழுதி வைத்தான். மாணிக்கப் பாடனு என்ற அந்த ஊர்த் தயிர் இன்றும் நன்றாயிருக்கிறதாம்.


மானிட வேடம் பூண்டு மனிதனாக நடித்துக் காட்டிய தெய்வம் மரத்தினால் ஆனது அல்லவா? மனிதனைப் போல் மரமும் நாளடைவில் சேதப்படக் கூடிய பொருள்தானே? எனவே, புதிய சிலை செதுக்கிப் பிரதிஷ்டை செய்வதுண்டு; பழையதற்கு சமக்கிரியை நடத்தி 'விசர்ஜனம்' செய்து விடுவார்கள். பொதுவாகப் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை இப்படி நிகழலாம். அதாவது எந்த ஆண்டு ஆடி மாதத்தில் இரண்டு அமாவாஸ்யைகள் வந்து அதி மாசம் ஆகிறதோ, அந்த ஆண்டு கடவுள் புத்துடல் பெறுகிறார். புது சிலைக்கான மரத்தைத் தேர்ந்தெடுப்பதற்கு எத்தனையோ விதிமுறைகள்! புத்துடல் பெறும் இவ்விழாவுக்கு 'நவகலேவர' என்று பெயர்.

இங்குள்ள லோகநாதர் கோவிலில் உள்ள லிங்கம் திருவானைக்காவைப்போல நீரில் மூழ்கியுள்ளது. சுரைக்காயை லிங்கமாக வைத்து ஸ்ரீ ராமர் வழிபட்டார் என்றும், சிவபெருமானின் தலையில் உள்ள கங்கை பெருகி லிங்கத்தை முழுக வைக்கிறாள் என்றும் கூறுகிறார்கள். சிவராத்திரி அன்று இவரை நீரினின்றும் வெளிப்பட்டவராக தரிசிக்க முடியும். இக்கோயிலின் உற்சவரான லோகநாதர் ஜகந்நாதர் கோயிலைக் காவல் புரிபவர். எனவே வருஷம் முந்நூற்றி அறுபத்தைந்து நாளும் ஜகந்நாதர் ஆலயத்தில் அவருக்கு வாசம். சிவராத்திரி அன்று மாத்திரம் தம் கோயிலுக்கு எழுந்தருளுகிறார். இப்படி ஒரு நாள் வேலையை விட்டுச் சென்று விட்டதற்காக ஒன்றே கால் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டு, அது கட்டப்பட்ட பின்னரே மீண்டும் வேலைக்குச் சேர்த்துக் கொள்ளப் படுகிறார். என்ன கண்டிப்பு!

புரி நகரத்தைப் பார்க்கும்போது தெற்கு வடக்கு பேதத்துக்கு இடமின்றி மானிடம் வாழ வழி வகை செய்யும் திருத்தலமாகவே தோன்றுகிறது.



கற்கண்டு கானம்!



கனரா பாங்க்

எஸ். வேங்கடராமன்

சென்னை சங்கீத வித்வத் சபையில் தமிழக ஆளுநரின் ஆலோசகர் திரு ஆர். வி. சுப்பிரமணியம் சங்கீத மும்மூர்த்திகளில் ஒருவரான தீக்ஷிதர் தபால் தலையை வெளியிட்டார்.

ஒரு பெரிய வாக்கேயகாரரின் முதல் கிருதியும், அதை சிருஷ்டித்த நேரமும் மறக்க முடியாதவை. இடம்: திருத்தணி. ஒரு மகாபுருஷர் தீக்ஷிதர் வாயில் கற்கண்டைப்போடுகிறார். அடுத்த நிமிஷம் வருகிறது முதல் பாட்டு :

''ஸா, ரீ கா ம/ ப த நிஸ் – நி த ப ம க ரி //

ஸ்ரீ நா தா தி / குருகுஹோ / ஜய தி ஜயதி //

ஆவேசமில்லை. உத்வேகமில்லை: பரபரப்பில்லை. ஆனால் நம் மனத் திரையில் வருவது : வாழையடி வாழையாக வந்த பிராசீன சங்கீத பரம்பரை. ஆம், கர்நாடக சங்கீதத்தின் பிதாமகரான புரந்தரதாஸர்; அவர் வகுத்துக் கொடுத்த ஸரளி வரிசை : அதே மூணுகாலம்; அதே சங்கீத முதற் படிக்கட்டு— மாயாமாளவ கௌள ராகம். பிதாமஹருக்கு, சங்கீத தேவதைக்கு, பிராசீன சம்பிரதாயத்துக்கு, தொடர்ந்து லக்ஷண கிரந்தங்களைக் காப்பாற்றி வந்திருக்கும் குரு பரம்பரைக்கு — எல்லோருக்கும் அஞ்சலி செலுத்தும் முறையில் முதல் கிருதி அமைந்திருக்கிறது.

மேலே குறிப்பிட்ட வகையில் நடந்ததற்குக் காரணம் இல்லாமலில்லை. ''ஸங்கீத ரத்னாகரம்'' எழுதிய சாரங்க தேவருக்குப் பிறகு இசைக் கலைக்கு உயிர் கொடுத்தவர் கோவிந்த தீக்ஷிதர். இவர்தான் நாயக்கர் ஆட்சியில் தஞ்சையில் மந்திரியாக இருந்தவர்: 'ஸங்கீத ஸுதை' என்ற நூலின் ஆசிரியர்: பத்து கமகங்களும் பேசும் ''ரகுநாத வீணையை'' அமைத்தவர். தஞ்சையில் வீணைத் தொழிலுக்கு ஆதரவு அளித்தவர். இவர் மகன்தான் வேங்கடமஹி. இவர்தான் மிகப் பிரசித்தி பெற்ற ''சதுர்தண்டிப் பிரகாசிகை''யை இயற்றியவர் : எழுபத்திரண்டு மேளகர்த்தாக்களை அமைத்து விவரித்தவர். வேங்கடமஹியின் பேரன் வேங்கட வைத்தியநாத தீக்ஷிதர்தான் நமது (முத்துஸ்வாமி) தீக்ஷிதர் தந்தையான ராமஸ்வாமி தீக்ஷிதருக்கு சங்கீத குரு. வாழையடி வாழையாக வந்த சாஸ்திரீய சங்கீத மரபுதான் தீக்ஷிதரின் சங்கீத சாதனைக்கு வித்திட்டது. அந்த நாதோபாஸனையில் ஊறினதால்தான் முதல் கிருதியிலேயே ஸங்கீதத்தின் ஆணி வேரை நினைவுகூருகிறார்.

மேல்நாட்டு சங்கீதத்தில் இல்லாது — இந்திய சங்கீதத்துக்கு, அதிலும் கர்நாடக சங்கீதத்துக்குப் பொக்கிஷமாக இருப்பது — ராக வடிவம். இதுதான் கர்நாடக சங்கீதத்தின் ஜீவநாடி. இதைப் பூர்ணமாக உணர்ந்தவர் தீக்ஷிதர். அதனால்தான் அவர் கிருதிகளில் ராகஸ்வரூபத்துக்கு முக்கிய ஸ்தானம் அளித்திருக்கிறார். விளம்ப காலத்தைக் கையாண்டிருப்பதற்கும் அதுவே காரணம். அதனால்தான் அவர் கிருதிகளில் ராகபாவம் கொட்டுகிறது; சொட்டுகிறது. ராக வர்ணனையே குறிக்கோளாக வைத்து சங்கீத சாஸ்திரத்தில் வரையறை செய்யப்பட்டபடி பிரயோகங்கள், ஸஞ்சாரங்கள் வருமாறு கிருதிகளை அமைத்திருக்கிறார். அவர் கிருதிகளில் ராகங்களின் சொரூபம் சுருக்கமாக, தெளிவாக, முழுமையாகக் காட்டப்பட்டிருக்கிறது.

அதே சமயம் நமது இசையை எப்படி மேலும் மேலும் வளப்படுத்தலாம் என்று ஆராய்ந்து பல வழிகளைக் கையாண்டிருக்கிறார். அவைகளில் ஒன்று ஸ்வராக்ஷர வழி. பல இடங்களில் ஸ்வரங்களைக் காட்டும் முறையில் சாஹித்தியத்தை அமைத்திருக்கிறார். ''தீக்ஷிதர் கிருதிகளில் ஸ்வாஸம் போனாலும், பிராஸம் போகாது'' என்பது பழமொழி. இதற்கும் எவ்வளவோ உதாரணங்கள் சொல்லலாம்.

இதோடு அவர் ஆசை தீரவில்லை. சங்கீத தேவதை அந்த அளவுக்கு அவரை ஆட்கொண்டிருந்தாள். கிருதிகளின் வடிவங்கள் இன்னும் சோபிக்க அவர் சில அலங்கார வழிகளைக்

கையாண்டிருக்கிறார். இதே கோபுச்ச அலங்காரம், ச்ரோதோவாற அலங்காரம் இரண்டையும் காணலாம்.

தியாகராஜ யோகவைபவம்
அகராஜ யோகவைபவம்
ராஜ யோகவைபவம்
யோக வைபவம்
வைபவம்
பவம்
வம்

சம்
பிரகாசம்
ஸ்வரூப பிரகாசம்
தத்வ ஸ்வரூப பிரகாசம்
ஸகல தத்வ ஸ்வரூப பிரகாசம்
சிவசக்த்யாதி ஸகல தத்வ ஸ்வரூப ப்ரகாசம்

இம்மாதிரி அலங்காரங்களை "ஸ்ரீ வரலக்ஷ்மி", "மாயே" போன்ற கீர்த்தனைகளிலும் காணலாம்.

கர்நாடக சங்கீதம் பூவும் காயுமாகப் பூத்துக் குலுங்க தீக்ஷிதர் எடுத்த முயற்சிகளில் அடுத்தபடியாகக் குறிப்பிட வேண்டியது ஹிந்துஸ்தானி ராக — கர்நாடக சங்கீத ஐக்கியத்துவம். ஸ்ரீரங்கமும் பக்கத்திலிருக்கும் திருவானைக் கோயிலும் இதை நமக்கு ஞாபகப்படுத்திக் கொண்டேயிருக்கும்! ஆமாம்: ஸ்ரீரங்கபுரவிஹாரா (பிருந்தாவன சாரங்கா) அகிலாண்டேச்வரி (ஜுஜாவந்தி)— இவைகளைத்தான் சொல்கிறேன். இதே ரீதியில் சில மேல்நாட்டு இசைகளுக்கும் ஸம்ஸ்க்ருத ஸாஹித்யம் வகுத்துக் கொடுத்திருக்கிறார்.

ஸங்கீதத்தின் சக்தியை நிதர்சனமாகக் காண்பித்தவர் தீக்ஷிதர். அமிருதவர்ஷிணி கிருதி மூலம் எட்டயபுரத்தில் மழையை வரவழைத்தது, குரு, சனி பகவான் கிருதிகள் ("பிருஹஸ்பதே, திவாகர தனுஜம்") மூலம் தம்பியப்பனின் வயிற்று வலியைப் போக்கினது இவைகளெல்லாம் இதற்குச் சான்று. இந்தச் சம்பவங்களும் இசையைப் பரப்ப உதவியுள்ளன.

தீக்ஷிதர் வேதாந்தியாக வாழ்ந்தவர். இறுதி வரை தினசரி பூஜை செய்தவர். ஆசார சீலராயிருந்தும் கலைத் தொண்டு, இசை வளர்ச்சி என்று வரும்போது சம்பிரதாயத்துக்கு அடிமையாயிருக்கவில்லை. தாசி கமலத்தை சிஷ்யையாக ஏற்றுக் கொண்டதுமல்லாமல் அவளுடைய நாட்டிய அரங்கேற்றத்துக்காக "ரூபமுஜூசி" என்ற தோடி ராகப் பதவர்ணமும் ஸ்ரீ ரஞ்சனி ராகத்தில் "நீ ஸாடி தெய்வமந்துலேதனி" என்ற தருவும் இயற்றிக் கொடுத்தார். நாட்டியத்தைப் பார்த்த அந்தக் கலையைச் சேர்ந்த தஞ்சை சகோதரர்களாகிய பொன்னையா, சின்னையா, சிவானந்தம், வடிவேலு தங்களை சிஷ்யர்களாக ஏற்றுக் கொள்ளும்படி சொன்னார்கள். அதை ஏற்றுக் கொண்டு தீக்ஷிதர் நான்கைந்து வருஷங்கள் தஞ்சை போய் அவர்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுத்தார். தீக்ஷிதருக்கு மரியாதை செலுத்தும் வகையில் பொன்னையா ஒன்பது பாடல்களை இயற்றியிருக்கிறார். சங்கீத நாட்டியத் துறையில் இந்நால்வரும் முக்கியமான மார்க்கதரிசிகள். பொன்னையா தஞ்சையில் ஆஸ்தான வித்துவானாக ஆனார். அவ்வண்ணமே வடிவேலுவும் திருவாங்கூரில் ஆனார்.

எந்தக் கலையும் கிணற்றுத் தவளைபோல் சற்றும் மாறாமல் இருந்தால் அதற்கு ஆயுசு கெட்டியிராது. சமய சந்தர்ப்பம் வரும்போதெல்லாம் அடிப்படை இலக்கணம் கெடாமல், அழகு குன்றாமல், நூதனத்தைப் புகுத்த வேண்டும். இசையில் உள்ள ஈடுபாட்டால் தீக்ஷிதர் இதைத்தான் செய்தார். மேல்நாட்டு வாத்தியமான பிடிலைக் கர்நாடக சங்கீதத்துக்குக் கொண்டு வந்தது தீக்ஷிதர் குடும்பந்தான். ஆம், முத்துஸ்வாமி தீக்ஷிதரின் தம்பி பாலுசாமி தீக்ஷிதர்தான் இந்த மகத்தான கைங்கரியத்தைச் செய்தது. அதன் பின் வடிவேலுவும் இதில் தேர்ச்சி பெற்றார்.

தீக்ஷிதருக்கு முழு மூச்சே சங்கீதந்தான். இது குடும்ப சொத்து. குரு மூலம் வந்த ஆஸ்தி. பரம்பரை வழி வந்த நிதி. அதுவும் சாதாரண குரு பரம்பரை அல்ல. ஈடு இணையற்ற வேங்கடமஹியின் நேர் வழித்தோன்றல். எந்த அளவுக்கு அடித்தளத்தில் கலையைப் பரப்பப் பாடுபட்டாரோ, எந்த அளவுக்குச் சாதனைகளைப் புகுத்தினார்களோ, அதே அளவு சங்கீத சாஸ்திர லக்ஷண ஞானத்தில் ஊறிப் போன குடும்பம். இதற்கு ஒரு விசேஷ சான்று. இந்திய சங்கீத சரித்திரத்தில் கடந்த நூறு ஆண்டுகளில் இசை ஆராய்ச்சி மேதைகளில் தனி இடத்தைப் பிடித்துக் கொண்டவர்கள் நால்வர் — ராஜா ஸர் சௌரீந்திர மோஹன் டாகூர், பாட்கண்டே, சின்னஸ்வாமி முதலியார், சுப்பராம தீக்ஷிதர் (முத்துஸ்வாமி தீக்ஷிதரின் தம்பி பாலுஸ்வாமி தீக்ஷிதரின் பேரன்). இவரை சின்னஸ்வாமி முதலியார், *"Direct representative of one of the most scientific of our Beethoven and Mendelian familes"* என்று குறிப்பிட்டிருக்கிறார். கர்நாடக சங்கீதக் கலை பொக்கிஷத்தைப் புத்தக ரூபத்தில் கொண்டு வரவேண்டும் என்று கங்கணம் கட்டிக் கொண்டு உழைத்தவர் முதலியார். இதை சுப்பராம தீக்ஷிதர்தான் செய்ய முடியும் என்று முடிவு கட்டி எட்டயபுரம் சென்று அவரை வற்புறுத்திச் சென்னைக்கு அழைத்து வந்தார். நான்கு வருஷ முயற்சியில் இந்த நூற்றாண்டு ஆரம்பத்தில் வெளி வந்தது "ஸங்கீத சம்பிரதாய பிரதர்சினி". சங்கீத லக்ஷண கிரந்தங்களில் இதற்குத் தனி இடம் உண்டு.

தீக்ஷிதர் அளித்த பொக்கிஷத்தையும், அவர் குடும்பம் சங்கீதத்துக்குச் செய்துள்ள சேவையையும் வேதமுள்ளளவும் வேத. கீதமுள்ளளவும் மறக்க முடியாது.



"உன் அத்தை கடைசிவரை திருமணம் செய்து கொள்ளவில்லையாமே?"


"ஆமாம். சாகும்போது எழுபது வயது அவளுக்கு. ஆனாலும் சந்தோஷமாகவே மண்டையைப் போட்டாள்."

"அப்படியா?"

"ஆமாம். யாரோ அவளுடைய சின்ன வயதில் 'திருமணம் சொர்க்கத்தில்தான் நிர்ணயிக்கப்படுகிறது' என்று சொன்னார்களாம்."

ஆர். எம்.

வளர்ச்சியின் ஒவ்வொரு கட்டத்திலும் உடம்புக்குத் தேவை கால்ஷியம்-ஸாண்டோஸ்®




கர்ப்பத்தின் ஆரம்பக் கட்டத்திலேயே குழந்தையின் பற்களிலும் எலும்புகளிலும் அமையத் தொடங்குகிறது கால்ஷியம். கருவிலுள்ள குழந்தைக்கு அதிகப்படி கால்ஷியம் அவசரமாகத் தேவை. எனவே, வழக்கத்தைவிட இருமடங்கு தேவைப்படும் உங்களுக்கு முன்னதாகவே சாப்பிடத் துவங்குவீர், கால்ஷியம்-ஸாண்டோஸ்.



பாப்பாவின் பற்களுக்கும் எலும்புகளுக்கும் கால்ஷியம் வழங்குவது பாலூட்டும் தாயன்றி வேறில்லை. அவளுக்கு வழக்கத்தைவிட மும்மடங்கு கால்ஷியம் தேவை.

வளரும் குழந்தைக்கு வலுவான எலும்புகளும் கல்முள்ள பற்களும் அமைய இன்றியமையாதது கால்ஷியம். எனவே, பெரியோரைவிட குழந்தைக்கு அதிகக் கால்ஷியம் தேவைப்படும்.





ஒவ்வொரு கட்டத்திலும், ஒவ்வொரு வயதிலும், மனித உடம்புக்கு அத்யாவசியம் கால்ஷியம். மிகச் சிறந்த வடிவிலுள்ள கால்ஷியம்: கால்ஷியம்-ஸாண்டோஸ். ராஸ்ப்பெர்ரி சுவையூட்டிய இனிமையான கால்ஷியம்-ஸாண்டோஸ், நாள் ஒன்றுக்கு 2 அல்லது 3 வில்லைகள் போதும், உங்கள் கால்ஷியம் தேவையை நிறைவுசெய்யும், வைட்டமின் C, D, B 12 சத்துக்களோடு.

நம்பிக்கைக்குரியோர் ஸாண்டோஸ்-கால்ஷியம் துறையிலே உலக முன்னோடிகள்.

SANDOZ

கால்ஷியம்-ஸாண்டோஸ்®
வில்லைகள் தினமும் தேவை எவருக்கும்

CA/CS/15 I TAM.



காமாக்ஷி கடாக்ஷி

ரா. கணபதி

[முப்பத்திரண்டாண்டுகளுக்கு முன், காமாக்ஷியின் நடமாடும் உருவேயாம் ஸ்ரீ சந்திரசேகரேந்திர ஸரஸ்வதி பெரியவாள் அம்பாளுக்குக் கும்பாபிஷேகம் செய்து, ஸ்ரீ சக்ராகாரமான வெள்ளி ரதமும் செய்து வைத்தார்கள். அவர்களின் அடியொற்றிய அறப்பணிகளை அளப்பறப் புரிந்து வரும் ஸ்ரீ ஜயேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகளும், பரம புண்ணியமான வாஸந்த நவராத்ரிப் பஞ்சமியன்று, (ஏப்ரல் 5உ) கும்பாபிஷேகத்தின் மூலம் உலகையெல்லாம் அருளில் முழுக்காட்டப் போகிறார்கள். இச்சமயத்தில், காமாக்ஷி மகிமை என்ற மகா சமுத்திரத்திலிருந்து ஒரு கும்பத்தை முகர்ந்தெடுத்து இங்கு கட்டுரையாகத் தருகிறோம். மேலட்டை வண்ண ஓவியம்: விஜு.]

"அம்மா, அம்மா!"

"அலறுவது யார்?"

கண்ணுக்குத் தெரியவில்லை.

அனங்கன் எப்படிக் கண்ணுக்குத் தெரிய முடியும்? அங்கங்களே இல்லாதவன்தானே அனங்கன்? பரமேச்வரனால் பஸ்மமாக்கப்பட்டு அரூபமாக உள்ள அந்த மன்மதன்தான் அலறுகிறான்.


அரூப மன்மதப் பிள்ளையிடம் அரூப பிலாகாச அம்மா பேசினாள்!


"குழந்தாய்" என்று குழைந்தழைத்து "என்ன வேண்டுமப்பனே?" என வினவினாள்.

"தாயே! நான் ஆணவத்துடன் ஈச்வரனை நெருங்கியதற்குத் தண்டனையாக, என் ஆணவத்துக்குக் காரணமான பேரெழில் உடலையே அவர் பொசுக்கி விட்டார். என் உயிரே போகாமல் நீதான் ரக்ஷித்து என்னை ஆவியாக வைத்திருக்கிறாய். அது மட்டுமின்றி, உன் எல்லையற்ற கருணையால் ரதிக்கு இரங்கி, அவளது கண்களுக்கு மட்டும் என் உருவமும் தெரியுமாறு தயை கூர்ந்தாய். இதெல்லாவற்றுக்கும் மேலாக அடியேன் கைக்கொண்டிருந்த அதே கரும்பு வில்லையும், மலரம்புகளையும் நீ உன் அபயவரதத் திருக்கரங்களில் தரித்து நின்றாய். என்னைப்போல் ஆணவமாக இன்றி, அன்பு மயமாய், விநய உருவாய் நின்று, பிரேமை பொங்கப் பரமேச்வரனைப் பார்த்துக் கொண்டு நின்றாய்! என் ஆணவம் சாதிக்காததை உன் அன்பு சாதித்து விட்டது. என்னை எரித்த அதே பரமன் பின்னர் சிரித்து, இதழ் விரித்து, "காமாக்ஷி!" என்று உன்னை அழைத்தார். காமனான நான் தமது பரம விரோதி என்பதையும் மறந்து, தமக்குக் கண் பார்வையாலேயே பிரேமையூட்டிய உன்னை "காமாக்ஷி" என்று அவர் அழைக்கச் செய்தாயே, அதுவும் உனக்கு என்னிடமுள்ள அபார கருணைதான்.

"பிறகு அவர் உன்னைத் திருக்கல்யாணமும் செய்து கொண்டு விட்டார். உன்னோடு கூடியிருப்பதே தமக்குப் பெருமை என்பது போல் சரீரத்திலேயே ஒரு பாதியை உனக்குத் தந்து அர்த்தநாரீச்வரராகி விட்டார். அது தவிர, உமாமஹேசன், ஸாம்பசிவன், ஸாம்பமூர்த்தி என்றெல்லாமே பெயர் கொண்டு விட்டார். பிள்ளையையும் பெற்றெடுத்து ஸோமாஸ்கந்தர் என்று வேறு திருநாமம் பெற்றிருக்கிறார். மக்களும், பக்தரும், ஞானியருங்கூட இப்படிக் குடும்பஸ்தராகி விட்ட உமாமஹேச்வரனை, ஸோமாஸ்கந்தனை, அர்த்தநாரீச்வரனை வணங்கித் துதிக்கிறார்கள்.

"ஆனால், அம்மா, என்னை இன்னமும் அவர்கள் இழிவாக எண்ணித் தூற்றித் தானே வருகிறார்கள்? செருக்குற்று ஈசனின் நெற்றிக்கண் நெருப்பில் நான் புகைந்து தோல்வி கண்டதைத்தான் இன்னமும் உலகு பேசி வருகிறது. ஆனால் பிறகு அவரும் உன்னிடம் பிரேமை கொண்டார், உன்னை மணந்தார், குமரனைத் தோற்றுவித்தார் என்பதிலிருந்து, என் பணி தோல்வியுறவில்லை, வெற்றியே என்றுதானே ஆகிறது? ஈச்வரபுத்திரன் ஒருவனே சூரனையும், தாரகனையும் அழிக்க முடியும் என்பதால், ஈசனுக்குப் புத்திர உற்பத்தியில் மனத்தைத் திருப்ப வேண்டும் என்ற தேவர் பணிக்காகத் தானே நான் அவர் மீது பாணம் எய்தேன்? என்னை அவர்







பஸ்மமாக்கி விட்டாலும், என் நோக்கம் பஸ்மமாகி விடவில்லையே? அவர் குமரோத்பத்தி செய்து, அக்குமரப் பெருமான் சூராதி அவுணரை ஸம்ஹரித்து, அமரர்களுக்குப் பழைய பெருமைகளையும், பதவிகளையும் மீட்டுத் தந்து விட்டார். கடைசியில், தேவ காரியத்துக்காக என்னையே பலியிட்டுக் கொண்ட நான் மட்டும் உலகம் முழுவதன் பழிப்புக்கும் ஆளாகி, என் அழகு சரீரத்தையும் இழந்து நிற்கிறேன்...''

''த்ஸொ, த்ஸொ'' என்று காருண்ய மாதா அங்கலாய்த்தாள்.

அனங்கனுக்கு அது மேலும் ஊக்கம் தந்து விட்டது.

''நீ என்ன செய்வாயோ, எப்படிச் செய்வாயோ, இந்த உன் குழந்தை சிவபெருமானையே வென்றவன் என்ற உலகப் பிரக்கியாதியை நீதான் இப்போது உண்டாக்க வேண்டும். 'நானும் அவருமாகச் சேர்ந்து உனக்கு அநுக்கிரகம் செய்கிறோம்!' என்று நீயே கொடுத்துவிட்ட மணி வாக்கினை நீ காப்பாற்றித் தான் ஆக வேண்டும்''— விடாப்பிடியாக இருந்தான் மதனன்.

அம்பாளின் குரல் பரம இரக்கத்தில் இளக்கம் பெற்று ஒலித்தது: ''அப்பனே குழந்தாய்! என் லீலா விநோதத்தில் உனக்கு மிகமிக அவப் பெயர் வாங்கித்தான் கொடுத்துவிட்டேன். இதற்கு அவசியம் பிராயச்சித்தம் செய்துவிடுகிறேன். உனக்கே அதி என்று தோன்றுமளவுக்கு அதிசயக் கருணை புரிந்து விடுகிறேன்!''

அம்பிகைக்கு அருள் வெறி வந்து விட்டால் கேட்க வேண்டுமா? அவலக் குழந்தை மன்மதனிடம் இப்போது காட்டாறாக அவளது கருணை பிரவகித்து விட்டது.

உடனே, கைலாசத்தில் பரமன் அன்பு செய்து கொண்டிருந்த பரதேவி ஜீவ கலைகளையெல்லாம் இழந்து ஜடமாகி விட்டாள்! ''ஹாஹா'' என்று பரமன் பரிதவித்தார். உலகுக்கெல்லாம் ஜீவன் தரும் சைதன்ய ஜோதியானவள் உரையும், உணர்வும் அற்று மரத்து விட்டாள். இனி தன் அன்பை அவள் ஏற்க மாட்டாள், தன்னிடம் அவளது பேரன்பைப் பொழிய மாட்டாள் என்று கண்டதும், ஆலகாலத்துக்கும் நடுங்காத நீலகண்டனும் பதைபதைத்து விட்டார்! விரகத்தில் உருகலானார்.

கயிலையில் மட்டும்தான் இந்த உற்பாதமா? இல்லை. பரதக் கண்டம் முழுவதிலும் பல ஆலயங்களில் சிவபெருமான் எழுந்தருளி அங்கெல்லாம் அம்பாளைத் தமது போக சக்தியாகக் கொண்டிருக்கிறார் அல்லவா? இவ்வாறு அனைத்துத் தலங்களிலும் உள்ள அத்தனை அம்பிகை மூர்த்தங்களின் ஜீவசக்தியும் இன்று அவற்றை விட்டு நீங்கி விட்டன. அங்கங்கும் உள்ள ஈச்வர மூர்த்தியும் விரக தாபத்தில் துடித்தார்.

அப்படியானால் இந்த ஜீவ கலைகள் யாவும் என்னவாயின?

காஞ்சிபுரத்தில் பிலாகாசத்துக்கு மேல் உள்ள அந்த நாபிஸ்தானத்தில்தான் அவை அனைத்தையும் அம்பாள் ஆகர்ஷித்து அடைத்து வைத்துக் கொண்டு விட்டாள்.

ஆயினும் விந்தை, தன் ஆற்றலைக் கொட்டி லீலை புரியாமல், தன் ஆத்மனில் அடங்கித் தபஸ்வினியாகி விட்டாள்!

தன் பிரிய ஸதி மன்மதனுக்குக் கொடுத்த வாக்கை நிறைவேற்ற வேண்டும் என்பதற்காகவே ஸர்வக்ஞரான மஹாதேவனும் மன்மத அவஸ்தைக்கு ஆளானது போல் நடித்தார். தியாகராஜப் பெருமான் என்றே பெயர் பெற்றவர் அல்லவோ? அதனால் தமது துறவுக்கும் துறவு தந்து, சிறு குழந்தை மதனனுக்கு மதிப்புத் தரவே தாம் மதியிழந்தாற் போல் பரிதவித்தார் மதிசேகரர். பரமேசனின் விரகப் பித்து தேவருக்கெல்லாம் தெரிந்தது. சூரனைக் கொல்ல கந்தனைத் தந்து தம்மை ரக்ஷித்த மஹாதேவனின் விரகத்தைத் தீர்க்க தேவர்கள் பிரம்மாவை பிலாகாசத்துக்குத் தூது அனுப்பினார்கள்.

பரமேசுவரி கொளுத்தும் ஐந்தழல்களுக்கு மத்தியில் ஒற்றைக் காலில் நின்றபடி தவம் இருந்தாள்.

''ஸர்வ சைவாலயேச்வரி!''* என்று பிரம்மா உள்ளம் உருகி அழைத்தவுடன், அந்த ஒரு முனைப்பட்ட அடர்ந்த தவத்திலும் தாய் இதயம் துடிப்புற்று, அவளை விழிப்புறவைத்தது.

''என்ன சதுர்முகா?'' என்றாள்.

''அம்மா, நீ புரியும் சதுர்தான் என்ன? ஈசுவரன் மன்மதாக்னியால் அவதியுறுவதைச்

---

* அனைத்துச் சிவாலய சக்திகளும் ஒன்று கூடிய இந்த ''ஸர்வ சைவாலயேச்வரி'' இன்றும் தபஸ் காமாக்ஷி என்ற பெயரில் மூல விக்ரஹ காமாக்ஷிக்கு வலத்தே விளங்குகிறாள். படம்: அடுத்த பக்கம்.



சகல தேவர்களும் அறிந்துவிட்டோம். அதாவது, நீ வரம் தந்தபடி, காமன் ஈசுவரனை வென்றுவிட்டதாக ஆகிவிட்டது. இனியும் இறைவனைச் சோதிக்காமல் நீ ஜீவ கலைகளைக் கயிலைக்கும் மற்ற அம்பாள் சந்நிதானங்களுக்கும் அனுப்பி வைக்க வேணுமம்மா !'' என வேண்டினார் விதாதா.

அம்பிகை நகைத்தாள். ''எனக்கு—ஏன், எங்கள் இருவருக்குமே — இன்னம் கொஞ்சம் விளையாட்டு வேண்டியிருக்கிறது. என் மன்மதக் குழந்தை ஜயசாலி என்று இப்போது தேவர்களுக்கு மட்டும்தானே தெரிந்திருக்கிறது ? ஆனால் அவன் அபஜயம் அடைந்ததோ மண்ணுலகினரும் அறிந்ததாயிற்றே ! நரர்களும் அவன் வெற்றியை அறிய இன்னமும் லீலை நடக்க வேண்டும். நீ போய், அந்தப் பரமேசுவரனையே இங்கே அனுப்பு. எங்கள் விவகாரத்தை நாங்களே நடத்திக் கொள்கிறோம். நீ என்ன இடைத் தூது ? நான் அன்போடு அழைத்தேன் என்று அவரிடம் சொல்லு'' — ராணி பராசக்தியும் இங்கு நாணிப் பேசினாள்.

அம்பாள் அன்போடு அழைத்தாள் என்ற மாத்திரத்தில் ஈச்வரன் அங்கு ஆவல் மீதூற ஓடி வந்தார். இப்போது ஜகன்மாதா, கரும்பு வில்லும் மலர் பாணங்களும் தரித்து அக்கரும்பினும் இனியவளாக, மலரினும் மென்மையும் மணமும் பொருந்தியவளாக நின்றாள்.

இதுகாறும் மூர்த்தி இல்லாதிருந்த பிலாகாசக்கரவறையில், பதினாலுலகிலும் காணக் கிடைக்காத திவ்யமூர்த்தியாக அம்பாள் தோன்றி விட்டாள்.

மிடுக்கிலும் அடங்கிய பதிவ்ரதையாகப் பேசினாள் : ''பிரபோ ! தங்களுக்குத் தெரிந்ததையேதான் சொல்கிறேன். நாம் உலக மக்களை உலகியல் வாழ்விலிருந்து—மோக்ஷத்துக்குக் கைதூக்கி விடுபவர்கள் மட்டுமல்ல. இந்த உலக வாழ்க்கையையே அவர்கள் நெறிப்படி வாழ வழி காட்ட வேண்டியவர்களும் நாம்தான்! எனவே, பெரும்பாலான மக்களுக்காக ஏற்பட்ட இல்லறத்தை நடத்திக் காட்ட நாமும் தம்பதியாக நடிக்கத்தானே வேண்டும் ? ஆனாலும் ஏதோ விளையாட்டாக, பிரபஞ்ச வாழ்வின் ஒரு முக்கிய அம்சமான தாம்பத்தியத்தையே மறுதலிப்பது போல் தாங்கள் மதனனை எரித்தீர்கள். இப்போது அதற்குக் கழுவாய்போல் தாங்களே மதனுவல்லதை எய்தியது போலவும் நடிக்கிறீர்கள். சரி, வந்ததுதான் வந்தீர்கள். என் குழந்தை காமனுக்கு வெற்றி விருதை மனமுவந்து தாருங்கள். நான் மீளவும் கயிலைக்கும் மற்ற தலங்களுக்கும் போக சக்திகளை அனுப்பி வைக்கிறேன்.''

இவ்வாறு கூறிய அம்பாள், ''காமா, வா, வெற்றிப் பட்டயம் பெற வா'' எனக் கூறித் தனது திவ்விய கடாக்ஷத்தை அனங்கனின் ஆவி மீது தாவினாள்.

கடைக்கண் பிரபாவத்தில் ஆவியானது பழைய வடிவைப் பெற்றுவிட்டது—பழைய வடிவையா ? அல்ல; அதைவிடவும் வனப்பு மிகு வடிவமாகப் புத்துருப் பெற்றுவிட்டான் மன்மதன் !

அருவ அம்மா அழகுரு பெற்றது போல் அருவப் பிள்ளையும் எழிலுரு பெற்றுவிட்

"இதுவரை மாதம் ஐந்து நாட்கள் நான் உலகத்தின் கண்களில் படாது ஒதுங்கியிருந்தேன்.




இப்போது, நான் 'கேர்ஃப்ரீ' ஸானிடரி நாப்கின்களைக் கண்டு பிடித்து விட்டேன். அதனால் மாதம் 30 நாட்களும் ஒன்று போல் கழிக்கிறேன்!"



ஒண்டர்ராப் இணைந்த புதிய 'கேர்ஃப்ரீ' பெண்களுக்கு முழுமையான சௌகரியத்தையும் முழுமையான பாதுகாப்பையும் அளிக்கிறது.

மாதத்தில் அந்த ஐந்து நாட்கள் பெண்களின் உடற்கூற்றைப் பற்றித் தனிப்பட்ட கவனம் செலுத்த வேண்டியது அவசியம். இப்போது 'கேர்ஃப்ரீ' அப்பொறுப்பை ஏற்கிறது.

'கேர்ஃப்ரீ'யின் வெளிப்புறத்தில் உள்ள தன்னிகரற்ற ஒண்டர்ராப் ஈரத்தை நாப்கினின் உட்பாகத்திற்குள் விரைவில் உறிஞ்சி விடுகிறது. அதனால் சருமம் எப்பொழுதும் உலர்ந்து சௌகரியமாக இருக்கிறது.



'கேர்ஃப்ரீ' மட்டுமே சிறந்த முறையில் சுரப்பவைகளை உறிஞ்சும் பொருள் கொண்டு தயார் செய்யப் பட்டுள்ளது. அது, ஈரம் நாப்கின் முழுதும் சீராகப்பரவ உதவுகிறது. எனவே ஒரே இடத்தில் ஈரம் படியாமல் தடுக்கிறது. நாப்கினின் அடிப் பரப்பிலும், பக்கப் பரப்புகளிலும் ஒரு கிலேப்பூச்சு உள்ளது. எனவே கறை படியும் பயம் இல்லை.

'கேர்ஃப்ரீ' எளிதில் கரைவதற்கேற்றது: காரணம், அதனை 'ஃப்ளஷ்' செய்து விடலாம். வெளியில் செல்லும் போதோ, பிரயாணத்தின் போதோ இது மிகவும் வசதியானது. உங்கள் உடலில் கச்சிதமாகப் பொருந்தும்படி மாற்றத் தக்க சைஸில் உருவாக்கப் பட்டுள்ளது. 'கேர்ஃப்ரீ', அதோடு ஒவ்வொரு பாக்கெட்டுடனும் ஒரு 'கேர்ஃப்ரீ' பெல்ட் இலவசம்.

இனி கவலையில்லை!
மாதம் 30 நாட்களும்
ஒன்று போல்
கழிக்கலாம்.

'இப்பொழுது
புதிய
கைக்கடக்கமான
பாலிபேகுகளிலே!

தனி, சௌந்தர்யமான பொருட்களையே விரும்பும் பெண்களுக்கென்றே புதிய, உயர்ரகமான, தேவைக்கேற்றவாறு பொருத்தக் கூடிய பெல்ட் தனியாக கிடைப்பதிக்கு. 'கேர்ஃப்ரீ' ஸானிடரி நாப்கின் விற்கும் கடைகளில் இவற்றைக் காணுங்கள்

ஜான்ஸன் & ஜான்ஸன்*
பெண்மைக்கொரு தூய பாதுகாப்பு.

டான். விருடன் நின்றான் காமன், ஈசன் தரும் வெற்றி விருதைப் பெற.

குன்றினர் கயிலயங்குன்றினர்! காம நடிப்பு நடித்தது போதாது எனக் குரோத நடிப்பும் நடித்து மகாகவியான பராசக்தியை மகிழ்விக்க எண்ணினர் போலும்!

''மன்மதா! வெற்றி விருதா வேண்டும்? இதோ வா, 'என்னோடு போருக்கு! அதில் மெய்யாலுமே என்னை வெல்'' என்று கூறி உடலை உதறினர்.

உடனே கோடி ருத்திரர்கள் படையாகக் குதித்தனர்.

''ஒருத்தனை வெல்லக் கோடி சைனியமா? நல்லது! இனி உம்மை நான் சேரப் போவதே யில்லை'' என்று கோபித்துக் கூறிய தேவி, ஓர் இமைக் கொட்டிலிருந்தே கோடி வீரர் களை சிருஷ்டித்துவிட்டாள். ஆஹா! ஒவ்வொரு வீரனும் ஒரு காம வேளாக இருந்தான்!


காம கோடியருக்கும் ருத்ர கோடியருக்கும் போர் நடந்தது. காமர்கள் மகா சூரர்களாகவும் இருந்தார்கள். மூல மஹாசக்தியே சிருஷ்டித்தவர்கள் பேராற்றல் படைத்திருந்ததில் வியப்பென்ன? ருத்ர கோடி தோற்றது.

இப்போது வியக்தமாகவே பரமேச்வரன் தோற்றதாக ஆயிற்று. பத்தினிக்கும், மன்மதக் குழந்தைக்கும் பிரீதி ஊட்டிவிட்டார் ஐயன்!

நேருக்கு நேர் அவர் மீது யுத்தம் தொடங்கினன் மதனன். அன்று பஞ்ச பாணங்களை ஏவியபோது அக்னி வெள்ளத்தை நெற்றிக் கண்ணால் வெளியிட்டு வெற்றி கொண்டவர், இன்று கைலாயப் பனிக் கட்டி போல் குளிர்ந்து வெறுமே நின்றார்.

தன் முதல் அம்பான கமலத்தை எய்தான் காமன். அதையே தமக்கு ஆசனமாக்கிக் கொண்டு பத்மாசனத்தே அமர்ந்தார் பரமன். அடுத்து அசோக மலர்ப் பாணம் வர, அதனை அ—சோகமாக, ஆனந்தமாக ஏற்றுத் திருமாலின் கௌஸ்துபம் போல் தமது வக்ஷஸ்தலத்தில் அணிந்து கொண்டார். மூன்றாவது பாணம் மாந்தளிர். அதனைப் பீதாம்பரம் போல் இடையில் புனைந்தார் ஐயன். மல்லிகையம்பு மலர்ந்து வர, முல்லையாக மலரச் சிரித்து அதனைக் கழுத்தில் மாலையாக ஏற்றார். கடைசியாக நீலோத்பலத்தைப் பிரயோகித்தான் புஷ்ப பாணன். அன்று எந்த நெற்றிக் கண்ணைச் செக்கர் கோணமாகத் திறந்து இவனை எரித்தாரோ, அதே நெற்றிக் கண்ணின் மீது திலகமாக வந்து படிந்தது அக்குருங்குவளை. நீல வானில் பூர்ணசந்திரன் திகழ்வதற்கு அற்புத மாற்றுகப் பிரானின் வெள்ளை வெளேர் என்ற நெற்றியில் நீல சந்திரனாக இலங்கியது நீலோத்பலம். மஹா த்ரிபுர ஸுந்தரனாக இருந்தார் ஐயன். அன்பு, அளவுகடந்த மன்னிப்பு, தியாகம் இவையே தந்த சௌந்தரியம் அது!

இத்தனை அழகைக் கண்டும் அம்பாள் அவரிடம் வசப்பட்டுவிடவில்லை. ஊடியே நின்றாள். ஆதியில் தக்ஷிணாமூர்த்தியாக இருக்கையில் தமக்குத் தொழும்பு செய்த பார்வதியை அவர் ஏறெடுத்தே பார்க்காமலிருந்ததற்குப் பழி தீர்த்துவிட்டாள் அம்பாள்!



புலியும் நரியும் இச்சகமாக நட்புக் கொண்டது போல் நடித்தன. நரி தன் தந்திரத்தால் புலி வாயில் விழாமல் எச்சரிக்கையுடன் இருந்து வந்தது. சமயம் பார்த்து அந்தக் கொழுத்த நரியைத் தீர்த்துக் கட்ட யோசித்திருந்தது புலி.

இதை அறிந்த நரி, புலியைத் தன் அருகில் வராமலேயே - தன்னைக் கொல்லாமலே இருக்கும்படி செய்யத் திடீரென்று புது வழி ஒன்றைத் தீர்மானித்தது.

அதன்படி ஒருநாள் சூரிய உதயத்தில் ஆர்வத்தோடு இச்சக நண்பனும் புலியின் குகையை நோக்கி வேகமாகச் சென்று புலியை அழைத்தது.

ஓடி வந்த புலி சேதி கேட்கவும், ''புலியே, புலியே! நேற்றிரவு சர்வ சக்தியுள்ள இறைவன் என் கனவில் தோன்றி, 'இன்று முதல் காட்டு மிருகங்கள் எல்லாமே உனக்குப் பயந்து நடக்கும். உனக்கு எந்த மிருகமுமே தீங்கு செய்ய முடியாது' என்று கூறி மறைந்தான். அதைச் சொல்லத் தான் ஓடோடி வந்தேன்'' என்று கூறியது.

''ஹ!'' என்று ஏளனம் செய்தது போல் புலி நகைக்கவும்....

''நீ அப்படி நினைப்பாய் என்பது தெரியும். கடவுள் வாக்குப் பொய்யாகாது. வா, நீயே என்னோடு கூட. உண்மை புரியும்'' என்று அழைத்தது காட்டுப் பகுதிக்கு.

வேண்டா வெறுப்பாக நரியோடுகூடப் புலி போயிற்று வேடிக்கை பார்க்க....

என்ன அதிசயம்! எதிரே தென்பட்ட அனைத்து மிருகங்களும் நரியைக் கண்டு ஓட்டம் எடுத்ததைப் புலி கண்கூடாகப் பார்த்தது. கடவுளின் சொல்லை ஒப்புக் கொண்டும் விட்டது.

நரி பெருமையோடு சிரித்தது... எத்தனை புலிகள் இப்படிப்பட்ட நரிகளின் எதிரில் தன் சக்தியை இழந்து நிற்கின்றனவோ! —''தேஜ்''

''பகவானே! அம்மா எனக்கு வெற்றி வாங்கித் தந்துவிட்டாள். இப்போது அவளுக்கு நான் வெற்றி வாங்கித் தருகிறேன். தாங்கள்தான் தோல்வியிலும் வெற்றிஇன்பம் காண்கிறீர்களே! என்னிடமே அபஜயமுற்ற தாங்கள் இப்போது ஸ்ரீ மாதாவிடம் தோல்வி யுறத் தயங்க வேண்டாம். பிக்ஷா பாத்திரத்துடன் அம்பாளிடம் சென்று, 'பிரேமைப் பிச்சை தா' என வேண்டுங்கள். அம்மா இரங்குவாள்'' என்று ஈசனுக்கு உபாயம் சொல்லிக் கொடுத்தான் காமன்.

ஸ்வாமி அவ்வாறே செய்ய, தேவி நெக்குருகிவிட்டாள்.

ஊடல் ஓட்டம் பிடித்தது.

''தந்தேன் தங்களுக்கு என் பிரேமை முழுவதையும்'' என்று தாம்பூல நாக்குத் தழுதழுக்க அவள் கூறிய மாத்திரத்தில் பேரற்புதம் நிகழ்ந்தது.

பரமேசுவரனே உருமாறி விட்டார். சாக்ஷாத் அந்த தேவியின் அச்சான புது வடிவம் பெற்றுவிட்டார். அவரது பால் வெண் மேனி அவளது உடலின் குங்குமப் பூஞ்சிவப்பைப் பெற்று விட்டது. அன்பின் நிறம், கவிதையின் நிறம் அதுதான். அவரது கரங்களில் உள்ள மானும் மழுவும், சூலமும் கபாலமும் அம்பிகையின் கைகளில் உள்ள பாசமும் அங்குசமும் கரும்புவில்லும் மலர்ப் பாணமுமாக மாறிவிட்டன ! இந்த வில்லும் அம்பும் காமனுடையவே!

'' காமேச்வரா வாருங்கள் '' என்று பரமேசுவரனுக்குப் புதுப் பெயரிட்டு அழைத்தாள் அம்பிகை..

''வந்தேன் காமேச்வரி'' என்று அவரும் பிலாகாசத்துக்கு மீதான புண்ணியக் கருவறையில் நுழைந்து, பஞ்சப் பிரம்மாஸனத்தில் அமர்ந்தார். அவரது இடது தொடையில் பரதேவி பாங்கே வீற்றாள் ! வர்ணனைக் கெட்டாத அழகும் அருளும் கொழிக்கும் காட்சி !

தேவாதியர் கூடிவிட்டனர் இத்திவ்ய தரிசனம் காண. முன்னே புளகித்து நின்றான் காமன்.

''காமாக்ஷி, காமாக்ஷி'' என்ற திவ்ய நாமத்தைச் சொல்லி அவளை அழைத்து, மெய்மறந்தான்.

காமனுகிய தன்னை அக்ஷம் என்ற கண் பார்வையால் புத்துருப் பெற வைத்ததால் ''காமாக்ஷி'' எனப் பெயரிட்டான்.

ஜகன்மாதா நறுஞ்சாருக நவின்றாள் :

''மதனனின் அம்பும் வில்லும் கட்டுப்பாடு மீறிப் பிரயோகமானதாலேயே, மக்களின் மனமும் புலன்களும் அலைக்கழிக்கப்பட்டு, உலக வாழ்வெனும் இசையில் அபஸ்வரமும் அலயமும் உண்டாகின்றன. இதே தநுர் பாணங்களைக் கைவசப்படுத்திவிட்ட எங்களை தியானித்தால், அன்பு என்ற சுருதியிலும், அறம் என்ற லயத்திலும் வாழ்விசை கனிந்து நின்று, அது தானுகவே ஞான மோனத்துக்கு இட்டுச் செல்லும். பாசம் கட்டுப்பட்டு நிற்கவே நாங்கள் கையிலே பாசம் ஏந்தினேம். துவேஷம் கட்டுப்படவே அங்குசத்தைத் தரித்தோம். உலகையே ஒதுக்கி ஆத்மவிசாரத்தில் ஈடுபட்டு மோக்ஷம் பெற இயலாதவர்கள், உலகிலேயே தர்மக் கட்டுப்பாட்டுடன் நடந்து, எங்களிடம் பக்தி செய்வதாலேயே அந்த மோக்ஷத்தைப் பெறும் பொருட்டு இப்படித் திருக்கோலம் கொண்டோம்.

''இப்போது இங்கே அடைத்து வைத்துக் கொண்டுள்ள அனைத்து க்ஷேத்ர சக்திகளையும் மீண்டும் அந்தந்த க்ஷேத்திரத்துக்கே அனுப்பி, ஆங்காங்குள்ள இறைவனின் விரகத்தைத் தீர்க்கத்தான் போகிறேன். ஆயினும், தேவர்கள் மட்டுமின்றி மக்களும் அறியுமாறு இக்காஞ்சியில் மட்டும் மதனனின் வெற்றி சாசுவதமாக நிற்பதன் பொருட்டு, இக் கச்சியம்பதியின் எல்லைக்கு உட்பட்ட 108 சிவாலயங்களுக்கு மட்டும் அம்பாளின் ஜீவ கலைகளைத் திருப்பி அனுப்பப் போவதில்லை. அவை என்றென்றும் அம்மன் சந்நிதியின்றியே இருக்கும். மதனன் சிவனை ஜயித்ததால் இந்த க்ஷேத்ரத்துக்கு ''சிவஜித்'' என்று ஒரு பெயரும் இடுகிறேன். இங்கு என் ஒரு பிம்பமே எல்லா சிவாலயங்களுக்கும் அம்மனுகும். தற்போது என் பக்கத்தே காணும் காமேச்வரரையும் நானே என்னுள் கொண்டு இங்கு அற்புத சிலா வடிவில் ஏகநாயகியாக விளங்குவேன்.

''நான் இப்போது இங்கே படைத்த காம கோடியர் இதோ என் விமானத்தில் இடம் கொள்வராதலால் இது காமகோடி எனப் பெயர் பெறும்.

''இங்கே சிவசக்தி அவதாரமான சங்கர பகவத்பாதர் ஸர்வக்ஞ பீடம் ஏறி, பந்தகனை வென்று நான் ஜய ஸ்தம்பம் எழுப்பியிருந்த அதே இடத்தில் அத்வைதத்தின் இறுதியான வெற்றிக்கு ஜயஸ்தம்பர் எழுப்பப் போகிறார். ஸ்ரீசக்ர யந்திரத்தைப் பிரதிஷ்டை செய்யப் போகிறார். எட்டிலடங்காப் புனிதம் பெற்ற அந்த ஸ்ரீ சக்ரமே காமகோடி பீடம் எனப் புகழ் பெறும்.

''என்னுள்ளேயே ஐக்கியமாகி, இக்கோயிலின் பிரதான கற்றுத் தெய்வமாகப் போகும் சங்கர பகவத்பாதரின் வழியே தோன்றவிருக்கும் காமகோடி பீடாதிபதியர் என் திருப்பணிகளை எந்நாளும் செய்து, உலகம் முழுதும் என்னிடம் பக்தியைப் பெருக்கி, இக பர நலன்களைக் கூட்டுவிப்பர். நானும் ''காமாக்ஷி கடாக்ஷி'' என்று வேண்டி வந்தவர்களுக்கு எந்நாளும் அநுக்கிரகம் புரிந்து ரக்ஷித்து வருவேன்.''

சர்வ லோகத்துக்கும், சகல காலத்துக்குமாக அம்பிகை இப்படி சத்தியப் பிரமாணம் செய்து தந்திருக்கிறாள். நமது எல்லா காமனைகளும் பூர்த்தியாகவும், எந்தக் காமனையும் எழாத ஆத்மாநுபூதி சித்திக்கவும் காமாக்ஷியின் கழலிணைகளே நமக்குக் கதி.

திருக் காமக் கோட்டியம்மை சேவடிப்
போது
எப்போதும் சிந்திப்பாமால்

(காஞ்சிப் புராணம்)

சேரமான் காதலி

கண்ணதாசன்

அத்தியாயம் 25

மயக்கமும் கலக்கமும்

கொங்கு நாட்டுப் படைகள் வஞ்சியின் ஒரு பக்கத்தில் பாடி இறங்கின.

பாண்டிய நாட்டுப் படைகள் மறு பக்கத்தில் பாடி இறங்கின.

நேரடியாக அறிவித்து நடக்கும் போரில்லை ஆதலால், வஞ்சியில் இருந்த அவை உத்தரவை எதிர்பார்த்தன.

ஒரு நாட்டின்மீது படை எடுக்கும் எதிரிப் படைகள், அந்த நாட்டிலிருந்தே கட்டளையை எதிர்பார்க்கும் போர்த் தருமம் அங்கேதான் நடந்து கொண்டிருந்தது.

கொங்கு நாட்டுப் படைகளோடு கூட வந்த மாதவி, படைகள் பாடி இறங்கியதும் ஒரு குதிரையில் ஏறி வஞ்சிக்குள் நுழைந்தாள்.

பாண்டிய நாட்டுப் படைகளோடு வந்த பூஜியாளு, ஏதும் அறியாதவள் போல், ஒரு ரதத்தில் பொன் முடிப்புக் களை அள்ளிப் போட்டுக் கொண்டு தன் இல்லம் நோக்கி விரைந்தாள்.

இரண்டு திசைகளிலும் இரண்டு நாட்டுப் படைகள் — இடையிலே உள் நாட்டுக் கலவரம் — ராஜ விசுவாசப் படைகளின் எண்ணிக்கை தெரியாத நிலை. கை பிசைந்த நிலையில் இருந்தார் நாராயண நம்பூதிரி.

எந்தத் தளபதிக்கு ஆணையிடுவது? யாரை நம்புவது? கூட இருப்பவர்களில் குழி பறிப்பவன் யார், துணை இருப்பவன் யார்? எதையும் அவரால் நிர்ணயிக்க முடியவில்லை.

ஜகந்நாத நம்பூதிரியையும், சங்கர நம்பூதிரியையும் நம்பூதிரிகள் சபையில் விட்டுவிட்டு அவர் அரண்மனையை நோக்கி விரைந்தார்.

வஞ்சிக்குள் புகுந்த மாதவி நகருக்குள் பரபரப்பாக அலைந்து கொண்டிருந்த ரவிவர்மனைச் சந்திக்க முந்தினாள்.



அவனது புரவி இடம் மாறி இடம் மாறிப் போய்க் கொண்டிருந்தது. மாதவியும் அவனைத் தேடித் தேடிப் பின்தொடர்ந்தாள்.

கொல்லிநகர் சேனை இருக்கை காலியாகக் கிடந்தது. அங்கே வந்து சேர்ந்த மாதவி ரவிவர்மனின் ஆதரவுச் சேனைகள் அரண்மனை நோக்கிச் சென்றிருப்பதை அறிந்து கொண்டாள். அவளும் அரண்மனை நோக்கி விரைந்தாள்.

ராஜ விசுவாசப் படைகளுக்கும் ரவிவர்மனின் சேனைகளுக்கும் அரண்மனையின் முன்னால் கடும் மோதல் நடைபெற்றது.

வஞ்சி நகரத்துச் சாதாரணக் குடிமக்கள் யாவரும் இல்லங்களை விட்டு வெளியில் வரவில்லை.

வணிகச் சந்தைகள் வெறிச்சோடிக் கிடந்தன.

நகருக்குள் போர் நடைபெற்றதை அந்நாட்டு மக்கள் பார்த்ததே இல்லை. போர்க் களம் நகரத்தின் எல்லையில் அமைந்திருப்பதே பழக்கமானது. அதன்றியும் பிற நாடுகளுடன் போர் பற்றி மட்டுமே கேள்விப்பட்டிருந்த வஞ்சி மக்கள் உள்நாட்டுப் போர் எப்படி இருக்கும் என்பதையும் அறிந்ததில்லை.

வஞ்சியின் கோட்டை வெளி ரணகளமாகிக் கொண்டிருந்தது. ராஜ விசுவாசச் சேனைகள் மரண பயமின்றிப் போராடிக் கொண்டிருந்தன. போர்த் திறமைமிக்க ரவிவர்மன் தலைமை தாங்கியும் வெற்றி தோல்வி நிர்ணயிக்கப்பட முடியாமல் இருந்தது.

எண்ணிக்கையில் ராஜ விசுவாச சேனைகள் அதிகமாகவே இருந்தன. ஒருவரை யொருவர் நன்றாக அறிந்த இரண்டு பேர் போராடும்போது போர் விரைவாகவும் முடிவதில்லை.

ரவிவர்மனுக்கும் வெளிநாட்டுச் சேனைகளோடு மோதிய அனுபவம் உண்டே தவிர உள்நாட்டுப் போர் அனுபவம் இல்லை.

இதனைத் தூரத்திலிருந்து கண்ணுற்ற மாதவி, ரவிவர்மன் தோல்வியுற்றால் உடனே கொல்லப்படலாம் என அஞ்சினாள். கொலையல்லாமல் வெறும் தோல்வியாக அது இருக்குமானால் உடனடியாகக் கொங்கர் படையும் கூடற் படையும் உள்ளே புகுந்து அவனை விடுவித்து வெற்றி கொண்டாட முடியும்.

ஆனால் ரவிவர்மன் கொல்லப்பட்டு அதன் பிறகு இரண்டு நாட்டுப் படைகளும் வெற்றி பெறுமானால், சேர நாடே அடிமையாகி விடக்கூடும்.

இங்கே போர் நடந்து கொண்டிருக்கும்போதே மாதவி எல்லைக்குச் சென்று அங்கிருந்த கொங்கர் படைகளை அழைத்து வந்து விட்டாள். ரவிவர்மன் தோல்வியுற இருந்த தருணத்தில் கொங்கர் படைகள் வந்து விட்டன. ரவிவர்மனின் வெற்றி சுலபமாகி விட்டது.

வெற்றி பெற்றதும் கொங்கர் படைகளை வெளியே நிறுத்தி விட்டுத் தனது படைகளில் இறந்தவர்கள் போக எஞ்சி இருந்தவர்களோடு அரண்மனைக்குள் நுழைந்தான் ரவிவர்மன்.

அந்த அரண்மனை ரவிவர்மனை வரவேற்பது போலிருந்தது.

வெற்றி பெற்றவனைச் சுற்றிக்கொள்கிறவர்களும் சிலர் இருப்பார்களே! சில காவலர்கள் அவன் காலைத் தொட்டு வணங்கினார்கள்.

யார் ஆட்சிக்கு வந்தால் என்ன? அவர்கள் பதவி நிலைக்க வேண்டுமே!

குதிரையில் உட்கார்ந்தபடியே அரண்மனை உள் மண்டபத்துக்குள் நுழைந்தான் ரவிவர்மன்.

மா பெரும் மண்டபத்தின் நடுவில் இடது கையை இடுப்பில் வைத்தவாறு வலது கையால் ருத்ராட்சத்தைப் பிடித்தவாறு அமைதியாக நின்று கொண்டிருந்தார் நாராயண நம்பூதிரி.

ரவிவர்மன் குதிரையை விட்டிறங்கி அவர் அருகில் வந்தான். நம்பூதிரி இடையில் செருகியிருந்த குத்துவாளைத் தன் கையில் எடுத்தான். தன்னைக் கொல்லப் போகிறான் என்றே நாராயண நம்பூதிரி நினைத்தார்.

ஆனால் எதிரி வரும் சட்டிக்கும் இமை கொட்டாத கண்கள் அவர் கண்கள். அவர் அசையவில்லை. உடல் நடுங்கவில்லை. முகத்திலே வியர்வை இல்லை. மனத்திலே மரண பயம் இல்லை.

சலனமற்ற அவரது பார்வை ரவிவர்மனையே திகைக்க வைத்தது.

கையிலிருந்த குத்துவாளைப் பின்னாலிருந்த சேனைகளிடம் வீசினான். அவர்களில் ஒருவன் அதைக் கைகளிலே பிடித்துக் கொண்டான். 'என்ன செய்யப் போகிறானோ' என்று சேனைகள் எதிர்பார்த்துக் கொண்டிருந்தன.

யாரும் — ஏன் நாராயண நம்பூதிரியே எதிர்பாராத வண்ணம் அவரது கால்களைத் தொட்டு வணங்கினான், ரவிவர்மன்.

''தம்பிரான் சுவாமிகள் என்னை ஆசிர்வதிக்க வேண்டும்!'' என்றான்.

நம்பூதிரி மெதுவாகச் சிரித்தார்.

''கடியுண்டவன் நாகத்தை ஆசிர்வதிக்க மாட்டான்!'' என்றார்.





மோசடி! மோசடி!

சமீபத்தில் தில்லியில் ஹெரால்ட் ராபின்ஸ் எழுதிய 'ஸ்காண்டல்' என்ற புத்தகமும், ஜேம்ஸ் ஹாட்லி சேஸ் எழுதிய 'லவ், கில்' என்ற புத்தகமும் அந்த ஆசிரியர்களின் ' நெடுநாளைய வாசகர்களுக்குப் பெரும் ஏமாற்றத்தை ஏற்படுத்தின. நாவல் இரண்டும் வெறும் குப்பை; அவர்களது வழக்கமான நடையே இல்லை. சந்தேகித்து விசாரித்தபோது அவ்விரு நாவலாசிரியர்களும் அந்தப் புத்தகத்தை எழுதவில்லை என்றும், டில்லி எழுத்தாளர் ஒருவர் எழுதி டில்லியிலேயே அச்சிடப்பட்ட புத்தகங்கள் அவை என்றும் குட்டு வெளிப்பட்டது.

டைம்ஸ் ஆஃப் இந்தியா - முத்து

''நாகம் தங்களைக் கடிக்கவில்லை!'' என்றான் ரவி வர்மன்.

''அது என்னைக் கடிப்பதைத்தான் எதிர்பார்க்கிறேன்'' என்றார் நம்பூதிரி.

''நாம் அமைதியாகப் பேச வேண்டும். அதற்கு இது நேரமல்ல'' என்றான் ரவி வர்மன்.

''வார்த்தைகள் கொல்லப்பட்டு விட்டன. பாஷை ஊமையாகி விட்டது. என் வாய்க்கு இனி என்றுமே வேலை இல்லை'' என்றார் நம்பூதிரி.

''நல்லது. மார்த்தாண்ட வர்மன் எங்கே?''என்று கேட்டான் ரவிவர்மன்.

''ஸ்ரீரங்கநாதன் அவனைக் காப்பாற்றி, அவனையும் அவன் மனைவியையும் அழைத்துப் போயிருக்கிறார்'' என்றார் நம்பூதிரி.

ஏதோ யோசித்தபடி தன் சேனைகளைத் திரும்பிப் பார்த்தான் ரவிவர்மன்.

சேனைகள் அரண்மனை முழுதிலும் தேடிவிட்டு வந்து, 'மார்த்தாண்ட வர்மன் இல்லை' என்பதைத் தெரிவித்தன.

ரவிவர்மன் நம்பூதிரியைப் பார்த்து, ''மிக்க நன்றி. தங்களை எப்படி நடத்த வேண்டும் என்று விரும்புகிறீர்கள் ?'' என்று கேட்டான்.

அவர் தமது இரு கைகளையும் ஒன்றாக இணைத்து அவன் முன்னே நீட்டினார். 'என் கைகளுக்கு விலங்கிடு' என்பது அதன் பொருள்.

''தம்பிரான் சுவாமிகள் போகலாம். பிறகு நாம் சாவகாசமாகச் சந்திக்கலாம்'' என்றான் ரவி வர்மன்.

நம்பூதிரிகள் அதிர்ச்சி யடையவும் இல்லை; ஆச்சரியப்படவும் இல்லை. கைது செய்யப் பட்டால் எப்படி இருப்பாரோ அப்படியேதான் அப்போதும் இருந்தார்.

''நீங்கள் வணங்கும் ஸ்ரீமந் நாராயணன் மீது ஆணையாகவும், நான் வணங்கும் பகவதி அம்மன் மீது ஆணையாகவும் கூறுகிறேன். நீங்கள் போகலாம்'' என்றான் ரவி வர்மன்.

அவர் தமது வலது கையை நீட்டினார்.

வீரனிடம் இருந்த குத்துவாளை வாங்கி அந்தக் கையில் வைத்தான் ரவி வர்மன்.

அந்தக் குத்துவாளை ஓங்கித் தம் மார்பை நோக்கிப் பாய்ச்சினார் நாராயண நம்பூதிரி.

பனிச்சென்று அவர் கையைப் பற்றிக் கொண்ட ரவி வர்மன், ''நான் செய்யாத வேலையை நீங்கள் செய்யக் கூடாது!'' என்றான்.

''கர்மத்தைச் செய்ய முடியாதவனும், தர்மத்தைக் காக்க முடியாதவனும் வாழ்வதில் அர்த்தமில்லை. என்னை விடு!'' என்றார் நாராயண நம்பூதிரி.

''இவ்வளவு நன்றியும் திறமையும் உள்ள உங்களைச் சாகும்படிவிட நான் தயாராக இல்லை. உங்களைப் பாதுகாப்பதற்காகச் சிறை செய்கிறேன்'' என்ற ரவிவர்மன் அவர் கையிலிருந்த குத்து வாளைப் பறித்துக் கொண்டான்.

இரண்டு சேனைவீரர்கள் நாராயண நம்பூதிரியின் இரண்டு பக்கங்களிலும் வந்து நின்றார்கள். அவர்கள் வழிகாட்ட நாராயண நம்பூதிரி நடந்தார்.

அவர் பல்லக்கில் ஏற்றப்பட்டார். நால்வர் அதைச் சுமந்தார்கள். அந்த இரண்டு வீரர்களோடு மேலும் சில வீரர்கள் பின் தொடர்ந்தார்கள். அவர்கள் அவரைச் சிறைச் சாலைக்குக் கொண்டு போகவில்லை. நேராக நம்பூதிரிகள் சபைக் கட்டிடத்துக்கே கொண்டு போனார்கள்.

பல்லக்கில் இருந்து இறங்கிய நம்பூதிரிகள் உள்ளே நுழைந்தார். சபை மண்டபத்தில் இருந்த ஆயுதங்களை வீரர்கள் அப்புறப்படுத்தினார்கள். அங்கு இருந்த காவலாளிகளிடமிருந்து ஆயுதங்களையும் பறித்துக் கொண்டனர்.

''எப்போதும் போலவே தம்பிரான் சுவாமிகளுக்கு உபசாரங்கள் நடக்கட்டும்''என்று ஆணை பிறப்பித்தார்கள்.

நான்கு சேனைவீரர்கள் அங்கேயே நிற்க மற்றவர்கள் அரண்மனையை நோக்கி நடந்தார்கள்.

அரண்மனையில் ஒரே குதூகலம்.

கொங்கர் தளபதிகள் சிலரும், கூடல் தளபதி அரச மாணிக்கமும், நாற்படை முன்னோடிகளும் அரண்மனை மண்டபத்தில் வெற்றி விழாக் கொண்டாடினார்கள். விருந்து தயாராயிற்று.

வஞ்சியின் அரண்மனையில் ஒரு நூறாண்டுகள் இல்லாத வகையில் 'நறவு' (மது) பரிமாறப்பட்டது.

ரவிவர்மன் ஒன்றையும் தொட வில்லை. அதிகார வெறி ஒன்றைத் தவிர, மற்ற வகையில் அவனிடம் ஒரு கட்டுப்பாடு இருந்தது.

மாதவியும் மற்றும் சில பெண்களும் அந்த வீரர்களுக்குப் பரிமாறினார்கள்.

மாதவி நாட்டியமாடினாள். வீரர் களும் கூடவே ஆடினார்கள்.

அந்த நேரத்தில் சிங்காரச் சிலையாக யூஜியானாவும், அவள் தந்தை யோகோவாவும் அங்கே வந்து சேர்ந்தார்கள்.

எல்லையற்ற மகிழ்ச்சியில் திளைத் திருந்த ரவிவர்மன் அவளைத் தனியாக அழைத்துக் கொண்டு போனான். வெப்பம் மிகுந்த அரவணைப்பில் தன்னை மறந்தாள் யூஜியானா.

''உனக்கு எவ்வளவு தொல்லையைக் கொடுத்து விட்டேன்...!'' என்றான் ரவி வர்மன்.

''இது உங்களுடைய ஜீவன். எந்தத் தொல்லையும் எனக்குச் சம்மதமே'' என்றாள் யூஜியானா.

''அங்கே யாரும் உன்னிடம் தவறாக நடக்கவில்லையே..?'' என்று கேட்டான் ரவிவர்மன்.

''இல்லை. தளபதி அரசமாணிக்கம் மிகவும் உத்தமமானவர். என்னைப் பத்திரமாகக் காப்பாற்றினார்'' என்றாள் யூஜியானா.

''நீ அந்த அறையில் இரு'' என்று ஓர் அழகான பள்ளியறையைக் காட்டினான் ரவிவர்மன்.

அவள் உள்ளே போய்க் கதவைத் தாளிட்டுக் கொண்டாள்.

மண்டபத்துக்குள் வந்த ரவிவர்மன் மயங்கிய நிலையில் கிடந்த அனைவருக்கும் உணவு பரிமாறச் செய்து, அவர்களை அவரவர் படை முகாம்களுக்கு அனுப்பினான்.

மறுநாள் காலையில் கொங்கு நாடும் பாண்டிய நாடும் சேர நாட்டிலிருந்து விடுதலை பெறும் ஓலையில் கைச்சாத்திடுவதாக வாக்குறுதி அளித்தான்.

மாதவியும் பிற பெண்களும் அவர்களுடனேயே சென்று விட்டார்கள்.

யூஜியானா இருந்த பள்ளியறைக்குத் திரும்பினான் ரவிவர்மன்.

அந்த நேரத்தில் அவன் குளித்தான். ஆடை மாற்றிக் கொண்டான். சேர மரபுப்படி யூஜியானாவுக்கு ஒரு வெள்ளை முண்டு வழங்கினான். நெற்றியில் பகவதியம்மனின் திருச்சூரணம் (குங்குமம்)



தெருவில் தனியாகப் போய்க் கொண்டிருந்த பெண்ணிடம் ஒருவன் வம்பு செய்தான்: ''வாயேன், பீச்சுக்குப் போகலாம்; வீட்டுக்குப் போய் நீ என்ன தான் செய்யப் போகிறாய்?''

''வீட்டுக்குப் போனால் நான் ஜூடோ, கராத்தே போட்டிகளில் பரிசாக வாங்கிய மெடல்களைப் பார்த்து ரசித்துக் கொண்டிருப்....''

அவள் பதிலை முடிப்பதற்குள் அவன் அங்கிருந்து ஓடியேவிட்டான். -ராமு

அணிவித்தான். தனது கணையாழியை இடது கைவிரலில் அணிவித்தான்.

கைத்தாங்கலாக அவளைப் பஞ்சணையில் உட்கார வைத்தான். அவள் மேனி அழகு முழுவதையும் ரசித்தான். பொங்கிப் பூரித்து நின்ற அவள் பருவம் துடியாய்த் துடித்தது. கதகதப்பான அவனது அணைப்பில் அவளது சரீரம் புல்லரித்தது. எத்தனை இரவுகள் ஏங்கியபிறகு வந்தது அந்த முதலிரவு!

யூஜியானா இன்ப சாகரத்தில் நீந்தினாள். அவள் உள்ளமும் உடலும் சாந்தி பெற்றன.

நாராயண நம்பூதிரியும், ரவிவர்மனும் வாதாடிக் கொண்டிருந்தபோது, ரவிவர்மனின் இல்லத்தில் தாவளி சகோதரிகளும் பத்மாவதியும் நிம்மதியின்றித் தவித்துக் கொண்டிருந்தனர்.

அப்போது கதவு தட்டும் சத்தம் கேட்டது.

ரவிவர்மனை எதிர்பார்த்து ஓடிப் போய்க் கதவைத் திறந்தாள் சாவித்ரி தாவளி. முழுக்கத் தங்களை மூடியபடி இரண்டு உருவங்கள் உள்ளே நுழைந்தன. அனைவரும் திகைத்தனர்.

வந்தவர்கள் மார்த்தாண்ட வர்மனும் மெல்லிளங் கோதையும்!

தாவளி சகோதரிகளையும், பத்மாவதியையும் பார்த்துக் கைகூப்பியபடி ''அடைக்கலம்'' என்றாள் மெல்லிளங்கோதை.

அவள் கண்களிலிருந்து மாலை மாலையாகக் கண்ணீர் வடிந்தது.

அவள் மட்டுமா அழுதாள்?

அங்கிருந்த அத்தனை பேருமே அழுதார்கள். (தொடரும்)



சினிமா கதைச் சுருக்கம்

சினிமாப் படம் தயாரிப்பது ஒரு கலை என்ருல், சினிமா பாட்டுப் புத்தகத்தில் கதைச் சுருக்கம் எழுதுவது அதைவிடப் பெரிய கலை என்று கூறலாம். "மீதியை வெள்ளித் திரையில் காண்க" என்று ஒரு 'சஸ்பென்ஸ்'டன் முடிக்கிருர்கள். ஆனல் அந்த வாக்கியத்துக்கு முன்பு எத்தனை சுருக்கமாகத் திரைக் கதையை விவரிக்க முயலுகிருர்கள்.

ராமாயணம், மகாபாரதம் போன்ற பிரபல கதைகளைப் படமாக்கும்போது இந்தப் பாணியில் கதைச் சுருக்கம் எழுதினல் எப்படி இருக்கும்?

சம்பூர்ண ராமாயணம்

பிள்ளை இல்லாமல் வருந்திக் கொண்டிருந்த அயோத்தி மன்னன் தசரதன் செய்த வேள்வியின் பயனக அவருக்கு நான்கு குழந்தைகள் (ராமன், லட்சுமணன், பரதன், சத்ருக்னன்) பிறக்கிருர்கள். மனைவிக்குக் கொடுத்த வரத்தைக் காக்க வேண்டி ராமனைக் காட்டுக்கு அனுப்புகிருர் மன்னன். தனது தம்பி லட்சுமணன், மனைவி சீதாவுடன் ராமன் செல்கிருன். ராமன் வேட்டையாடச் சென்ற சமயம் இலங்கை மன்னன் ராவணன் வஞ்சகமாகச் சீதையை அபகரித்துச் செல்கிருன்.

சீதையை ராமனல் மீட்க முடிகிறதா?

ராமன் மறுபடியும் ஆட்சி பீடத்தில் அமர முடிகிறதா?

ராவணனின் மோகம் வெற்றி பெறுகிறதா? அல்லது சீதையின் கற்பு பலம் வெற்றி பெறுகிறதா?

இக்கேள்விகளுக்கு விடைகளை வெள்ளித் திரையில் காண்க.



மகா பாரதம்

பஞ்ச பாண்டவர்களுக்கும் துரியோதனுதியருக்கும் என்றும் பகை. யாருக்கு ராஜ்யம் என்பதில் போட்டி. மாமன் சகுனியின் நய வஞ்சக யோசனையின்படி துரியோதனன், பஞ்சபாண்டவர்களில் மூத்தவரான தருமனைப் பகடை ஆட அழைக்கிருன். தருமன் ஒவ்வொன்ருகத் தோற்றுத் தன் அழகிய மனைவி பாஞ்சாலியையும் இழக்கிருன். பாஞ்சாலியைச் சபையில் இழுத்து வந்து துச்சாதனன் துகில் உரிக்கிருன்.


பாஞ்சாலியின் மானம் காப்பாற்றப்படுகிறதா?

இழந்த ராஜ்யத்தைத் தருமன் மீட்கிருரா?

துரியோதனனுக்கும் பாண்டவர்களுக்கும் ஏற்படும் போரில் யாருக்கு வெற்றி?

சகுனியின் கதி என்ன?

விடைகளை அளிக்க வருகிறது எமது மகத்தான தயாரிப்பு மகாபாரதம்!



பக்த குசேலர்

வறுமையால் அவதிப்படும் குசேலர், தம் மனைவியின் யோசனையின்படி, உடன் படித்த கிருஷ்ண பிரானைச் சந்திக்கச் செல்கிருர். வெறும் கையுடன் போவது நல்லதல்ல என்ற எண்ணத்தினல் சிறிது அவல் எடுத்துச் செல்கிருர்.

கிருஷ்ணன் அவலை வாங்கிக் கொள்கிருனு? வாங்கிக் கொண்டால் சாப்பிடுகிருனு? சாப்பிட்டால் ஜீரணிக்கிருனு?

குசேலன் தனது வறுமையைச் சொல்கிருனு?

அவனது துயரங்கள் தீர்கின்றனவா? . . . . பாருங்கள், வெள்ளித் திரையில்!

வள்ளி கல்யாணம்

தினைப்புனம் காவல் காக்கும் கட்டிளம் பெண்ணின் மேல் வேலனுக்குக் காதல் ஏற்பட்டது. ஆனல் அவளுக்கு?

வேலன், வேடனுகவும், விருத்தனுகவும் வேடம் போட வேண்டி வந்தது.

கடைசியில்?

வேலனின் காதல் வெற்றி பெற்றதா? கிழவனை வள்ளி ஏன் கட்டி அணைத்துக் கொண்டாள்?

யானையாக யார் வந்தார்கள்?

வேங்கையாக மாறியது யார்?

விடைகளை வெள்ளித் திரையில் கண்டு களியுங்கள்!

பாலாஜி

பொன்னியின் புதல்வர்



சுந்தா

27. பாத்திரமும் பெயரும்

**கொடுத்தவையென்றும் கொண்டவையென்றும்
எடுத்தவை என்றும் பலவாம் பெயர்கள்**

சொந்தப் பத்திரிகை போட ஆசைப்பட்ட கற்பனைத் தம்பிக்கு, எந்த விதமான கதைகளை எப்படித் தேர்ந்தெடுக்க வேண்டும் என்பது பற்றிக் கல்கி யோசனை கூறுகையில், ''ஒரே விஷயத்தில் மட்டும் நீ எச்சரிக்கையாய் இருக்க வேண்டும்'' என்றார்.

அதாவது, கதைகளில் வரும் கதா நாயகர்கள், கதாநாயகிகளின் பெயர்களை ஜாக்கிரதையாகச் சோதனை செய்ய வேண்டும். இந்தச் சோதனை செய்யாத காரணத்தினால் ஒரு பத்திரிகாசிரியர் அடைந்த கஷ்டத்தைக் கேள். அவர் இப்படித்தான் கதைகளில் வரும் பெயர்களைக் கவனியாமல் அச்சுக்குக் கொடுத்து விட்டார். பத்திரிகை வெளியானதும் ஒருமுறை புரட்டிப் பார்த்தார். எட்டுச் சிறுகதைகள் அந்த இதழில் வெளியாகி இருந்தன. அவை ஒவ்வொன்றிலும் கமலாதான் கதாநாயகியாக இருந்தாள். அன்றிரவு அவருடைய தூக்கத்தில், மாமியாருடன் மயிரைப் பிடித்துக் கொண்டு சண்டையிட்ட கமலாவும், குழந்தையைக் காப்பாற்றுவதற்காகத் தன் உயிரை விட்ட கமலாவும், சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டுச் சிறை புகுந்த கமலாவும், விவாக ரத்துச் செய்து பெண் குலத்தின் சுதந்திரத்தை நிலைநாட்டிய கமலாவும், மாதர் சங்கத்தின் காரியதரிசியான வாயாடி கமலாவும், பிச்சைக்காரனை விளக்குமாற்றால் அடித்துத் துரத்திய கமலாவும், காதல் கமலாவும், கற்பரசி கமலாவும், தாசி கமலாவும் மாறி மாறி அவருடைய கனவிலே வந்து அவரைப் படுத்திய பாடு, அந்தக் கமலாசினியின் பதியாகிய கருணாகரக் கடவுளுக்கே வெளிச்சம்!

(ஆனந்தவிகடன் 8-4-34)

இவ்வாறு, ''போடு பத்திரிகை'' என்ற கட்டுரையில் வேடிக்கையாய் எச்சரிக்கை செய்யும் கல்கி, அந்தக் காலத்தில் கதைகள் எல்லாம் கமலமயமாய் இருந்தன என்பதையும் கேலியாய்ச் சுட்டுக் காட்டுகிறார். கமலா இல்லாவிட்டால் விமலா; விமலா இல்லாவிட்டால் வனஜா.

''பெயரில் என்ன இருக்கிறது?'' என்பது ஒரு பழைய கேள்வி. ''ஏதும் இல்லை'' என்றும் இதற்குப் பதில் சொல்லலாம்; ''எல்லாம் இருக்கிறது'' என்றும் சொல்லலாம். பெற்றோர்கள் தமது குழந்தைகளுக்கு இடும் பெயர்களில் ''ஏதும் இல்லை'' என்றே சொல்லி விடலாம்; ஏனெனில் அவற்றைப் ''பாத்திரப் பொருத்தம்'' பார்த்து அவர்கள் இடுவதில்லை. ஆனால், கதாசிரியர்கள் தமது பாத்திரங்களுக்குப் பெயர்கள் சூட்டுகையில் பொருத்தம் பார்த்தே சூட்டுவதால், அவற்றில் ''எல்லாம் இருக்கிறது'' எனலாம்.

கல்கி சூட்டிய பெயர்களில் மிகப் பொருத்தமானது ''பொன்னியின் செல்வன்.'' பின்னால் பொன்னி நாட்டின் புகழைப் பாரெல்லாம் ஓங்கச் செய்து இராஜராஜ சோழனாய்த் திகழப்போகிறவனுக்கு, அந்தப் பொருத்தமான பெயர் எப்படி வழங்கலாயிற்று என்பதற்கு, அவர் புனைந்துள்ள கதைதான் எவ்வளவு அற்புதமானது!

ஒருநாள் அரண்மனைப் படகில் சக்கரவர்த்தியும் ராணிகளும் குழந்தைகளும் உட்கார்ந்து காவேரியில் உல்லாசப் பிரயாணம் செய்து கொண்டிருந்த போது, திடீரென்று, ''குழந்தை எங்கே? அருள்மொழி எங்கே?'' என்று ஒரு குரல் எழுந்தது. இந்தக் குரல் குந்தவையின் குரல்தான் ... எல்லோரும் கதிகலங்கிப் போனார்கள். படகில் அங்குமிங்கும் தேடினார்கள். படகோட்டிகள் சிலர் காவேரி வெள்ளத்தில் குதித்துத் தேடினார்கள். சுந்தர சோழரும் அவ்வாறே குதித்துத் தேடலுற்றார். ஆனால் எங்கே என்று தேடுவது? ஆற்று வெள்ளம் குழந்தையை எவ்வளவு தூரம் அடித்துக் கொண்டு போயிருக்கும் என்று யார் கண்டது?

சட்டென்று ஓர் அற்புதக் காட்சி தென்பட்டது. பெண் உருவம் ஒன்று இரண்டு கைகளிலும் குழந்தையைத் தூக்கிப் பிடித்துக் கொண்டு நின்றது.... எல்லாரையும் போல் சுந்தர சோழரும் அந்தக் காட்சியைப் பார்த்தார். உடனே பாய்ந்து நீந்தி அந்தத் திசையை நோக்கிச் சென்றார். கைகளை நீட்டிக் குழந்தையை வாங்கிக் கொண்டார். இதற்குள் படகும் அவர் அருகில் சென்று விட்டது. படகிலிருந்தவர்கள் குழந்தையைச்

கந்தர சோழரிடமிருந்து வாங்கிக் கொண்டார்கள். சக்கரவர்த்தியையும் கையைப் பிடித்து ஏற்றி விட்டார்கள். குழந்தையைக் காப்பாற்றிக்கொடுத்த மாதரசி என்னவானாள் என்று யாரும் கவனிக்கவில்லை.... ''குழந்தையைக் காப்பாற்றியவள் நான்'' என்று பரிசு கேட்பதற்கு அவள் வரவும் இல்லை. ஆகவே, காவேரி நதியாகிய தெய்வந்தான் இளவரசர் அருள்மொழி வர்மரைக் காப்பாற்றிக் கொடுத்திருக்க வேண்டும் என்று அனைவரும் ஒருமுகமாக முடிவு கட்டினார்கள்.... அதுவரை அரண்மனைச் செல்வனாய் இருந்த அருள்மொழி வர்மன், அன்று முதல் ''பொன்னியின் செல்வன்'' ஆனான். அச்சம்பவத்தை அறிந்த அரச குடும்பத்தார் அனைவரும்—பெரும்பாலும் '' பொன்னியின் செல்வன்'' என்றே அருள்மொழி வர்மனை அழைத்து வந்தார்கள்..

(பாகம் 2, அத்தியாயம் 13)

இராஜராஜ சோழனுக்கு எத்தனையோ சிறப்புப் பெயர்கள்! சோழ மார்த்தாண்டன், இரவிகுல மாணிக்கம், நித்த விநோதன், மும்முடிச் சோழன் முதலிய அப் பெயர்கள் கல்வெட்டுக்களிலும் செப்பேடுகளிலும் பொறிக்கப் பட்டுள்ளன. அவற்றுடன், ''பொன்னியின் செல்வன்'' என்ற பெயரை நவீன இலக்கிய ஏட்டில் கல்கி பொறித்துள்ளார். இது ஒன்றுக்காகவே அவர் தனிப் பெருமைக்கு உரியவர்.

பொன்னியின் செல்வனுக்கு ஏற்ற காதலி, பொற்பாவை வானவன் மாதேவிக்கு, மறு பெயர் எதையும் கல்கி புனைந்து சூட்டவில்லைதான். ஆயினும், அவளுடைய பெயரை ''வானதி'' என்பதாக எளிமையும் இனிமையும் பொருந்தச் சுருக்கி, அதற்கும் நிலையான இலக்கியப் புகழ் அளித்து விட்டார். வானதி என்பதை யொட்டியே அவளைப் பற்றிய வர்ணனை:

கொடும்பாளூர் இளவரசியின் அழகை வர்ணிக்கும்படி கவிஞர்களைக் கேட்டால், அவர்கள் அந்த மங்கை நல்லாளின் அழகை அந்தி மாலையின் சௌந்தர்யத்துக்கு ஒப்பிடுவார்கள். பகற்பொழுது சென்று மாலை



காவேரித் தெய்வம் காப்பாற்றிக் கொடுத்த ''பொன்னியின் செல்வன்''.

அந்தி மாலையின் சௌந்தரியத்துக்கு ஒப்பான அழகுடைய வானதி.


நஞ்சினும் கொடிய நந்தினி.

நஞ்சே உருவான நாகநந்தி.




சிறுமி சாருவின் பெயரை ஆயிரக்கணக்கான பெற்றோர்கள் தமது குழந்தைகளுக்கு இட்டார்கள்.

கல்கிதாசன் என்று பெயர் சூடிக் கொண்ட பலருள் ஒருவர் - பி. எஸ். ரங்கநாதன்.









மர்மச் சிறுகதைப் போட்டி

இந்த மர்மச் சிறுகதைப் போட்டியில் அறிமுக எழுத்தாளர்கள் மட்டுமே கலந்து கொள்ளலாம். அதாவது போட்டிக்குக் கதையை அனுப்பும்போது இவர்களது எழுத்து அச்சில் வந்திருக்கக் கூடாது. இதற்கான உறுதிமொழியுடன் தழுவலோ மொழிபெயர்ப்போ அல்ல என்பதற்கான உறுதிமொழியையும் சிறுகதையுடன் இணைக்க வேண்டும்.

முதல் பரிசு	... ...	ரூ. 250.00
இரண்டாவது பரிசு	... ...	ரூ. 150.00
மூன்றாவது பரிசு இரு கதைகளுக்கு ரூ. 100 வீதம்	...	ரூ. 200.00

முடிவு தேதி : ஏப்ரல் 30உ

பிரசுரத்துக்கு ஏற்கப்படாத கதைகளைத் திரும்பப் பெறப் போதிய தபால் தலைகள் இணைக்க வேண்டும். கடிதப் போக்குவரத்து இடையாது. ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.

ஆசிரியர், கல்கி, சென்னை - 600 031

மங்கி வரும்போது மனத்தில் ஒரு சோகம் ஏற்படுகிறது; கூடவே ஓர் அமைதியான இன்பமும் தோன்றுகிறது. ஆதவனின் இறுதிக் கிரணங்கள் மெலிந்து மறைந்த பிறகு, இரவின் இருள் நாலாபுறமும் கவிந்து வருகிறது. இதனால் மனத்தில் தோன்றும் சோர்வைப் போக்கிக் கொள்வதற்கு வானத்தை நோக்கினால் போதும். கண்ணிமைக்கும் நேரத்தில் வானமாதேவி ஏற்றி வைக்கும் கோடானு கோடிச் சுடர் விளக்குகள் எவ்வளவு ஆனந்தத்தை அளிக்கின்றன!...

கொடும்பாளூர் இளவரசி வானதியின் அழகில் இப்படியே சோகத்தின் சாயலும் களிப்பின் மெருகும் இனம் தெரியாதபடி கலந்து போயிருந்தன.

(பாகம் 3, அத்தியாயம் 23)

''இதே ''பொன்னியின் செல்வன்'' நாவலில், இன்னொரு விதமான எழிலரசி நந்தினி! 'சிவகாமியின் சபதம்' நாவலில் வரும் நாகநந்திக்குப் பெண்பால் நந்தினி; இரண்டும் பாத்திரம் அறிந்து இட்ட பெயர்கள். ''நெஞ்சிலும் நாவிலும் நஞ்சுடையவர்'' என்று சிவகாமியைக் கொண்டு நாகநந்தியை வர்ணிக்கச் செய்கிறார் ஆசிரியர். அதே போல நந்தினியை ''நஞ்சினும் கொடியவள்'' என்றும், ''என் உள்ளத்தில் அவளுடைய மோக விஷம் ஏறி விட்டது'' என்றும், ஆதித்த கரிகாலனின் சொற்களில் வர்ணிக்கிறார்.

வெளித் தோற்றத்தில் அழகும்—உளத் தன்மையில் கோரமும் கொண்டவள் நந்தினி என்றால், ''சிவகாமியின் சபதம்'' நாவலில் வரும் ரஞ்சனி இரண்டிலும் கோரமானவள். அப்படி அவளை ஆக்கியவர், நஞ்சே உருவான நாகநந்தி. ''அந்தக் கோர ராட்சஸியின் பெயர் 'ரஞ்சனி' என்று அறிந்து நமக்கு வியப்பு உண்டாகிறதல்லவா?'' என்று ஆசிரியர் கூற்றாகக் கல்கி கேட்டு அதற்கு விடையும் தருகிறார்: ''ஆயினும், அந்தப் பெண் ஒரு காலத்தில் 'ரஞ்சனி' என்னும் அழகிய பெயருக்கு உரியவளாய், பார்த்தவர் கண்களை ரஞ்சிக்கச் செய்பவளாய், அவர்கள் உள்ளத்தை மோகிக்கச் செய்பவளாய்த்தான் இருந்தாள்.''

இப்படியே, கல்கி படைத்த பாத்திரங்களின் பெயர்களைப் பற்றியும், அவர்கள் உலவும் கதைகளின் பெயர்களைப் பற்றியும் எவ்வளவோ சொல்லிக் கொண்டே போகலாம். பண்டையச் சரித்திர காலத்திலிருந்து அண்மைச் சரித்திர காலத்துக்கு வந்தால், ராமநாதபுரம் மாவட்டத்தில் ''மாடத் தேவன் சுனை'', அப்படிப் பெயர் அடைந்த வரலாற்றைக் கல்கி சொல்கிறார். இன்னும் சமீப காலத்துக்கு வந்தால், சேலம் மாவட்டத்தில், ''பொய்மான் கரடு'' என்ற பெயர்



Creative Unit-A 1981-Tam

எப்படி உண்டாயிற்று என்பதை வர்ணிக்கிறார்.

இந்தப் பொய்மான் கதையின் நாயகி ''ஓயாத தரித்திரத்துக்கும் ஒழியாத கூச்சலுக்கும் மத்தியில்'' வளர்ந்த நாட்டுப்புறப் பெண். அவளுக்குச் ''செம்பவளவல்லி'' என்ற மிக அழகான பெயரை ஆசிரியர் கொடுத்திருக்கிறார். கொடுத்து விட்டு, அது பொருத்தமானதே என்பதை நிரூபிக்கும் வகையில், ''சேற்றுத் தவளைகளுக்கு மத்தியில் செந்தாமரையைப் போலவும், குப்பைக் கோழிகளுக்கு மத்தியில் தோகை மயிலைப் போலவும், சப்பாத்திக் கள்ளிகளுக்கு மத்தியில் செம்பருத்திச் செடியைப் போலவும் அவள் பிரகாசித்து வந்ததாக'' அவள் மீது மையல் — கொண்ட செங்கோடன் நினைத்ததை எடுத்துச் சொல்கிறார்.

இந்தக் கதையில் வரும் திருடர்களுக்கு எவ்வளவு வேடிக்கையான பெயர்கள்! — கூழைக்காலன், செவிட்டுக் காதன், நொண்டிக் கையன், குருட்டுக் கண்ணன்.

மற்றொரு கதையின் நாயகன், காதறுக் கள்ளன். பெண்களின் கழுத்திலும் கையிலும் உள்ள நகைகளை மட்டுமே அந்தக் கள்ளன் கழற்றிக் கொள்வானே தவிர, பாம்படங்களைத் திருடிக் கொள்வதற்காகக் காதுகளை அறுக்க மாட்டானாம். அதனால்தான் அவனுக்கு அந்தப் பெயர். திருநெல்வேலிச் சீமையில், அந்தக் கதை நிகழும் ஊர், ''பரி உயிர் காத்த நல்லூர்''. எப்படி அதற்கு அப்பெயர் வந்தது என்பதே கதை. அந்த ஊருக்குப் பக்கத்து ஊர், கோழி கூவாப்புத்தூர்! அந்த ஊரில் ஏன் கோழி கூவுவதில்லை? ஆசிரியர் சொல்லாததால் நமக்குத் தெரியவில்லை.

ஊரின் பெயருடன் ஆளின் பெயரைச் சேர்த்து கல்கி படைத்தவற்றில், பலருக்கும் தெரிந்தது, மிகவும் இனிமையானது, ''திருவழுந்தூர் சிவக்கொழுந்து.'' கம்பன் பிறந்த ஊர் திருவழுந்தூர். சிவக்கொழுந்து என்ற பெயருடைய நாதசுர வித்வான் ஒருவர் உண்மையிலேயே இருந்தார். ஆனால் திருவழுந்தூரில் அல்ல; கும்பகோணத்தில். அந்த இரண்டையும் ஒன்றாக இணைத்து, அதன் தமிழ் மணத்தையும் இசை நயத்தையும் ஒருங்கே நுகரச் செய்து விட்டார், தஞ்சைக் கல்கி.

கணவனுக்கும் மனைவிக்கும் பொருத்தமான பெயர்களில், ''அலைஓசை'' நாவலில் வரும் ராகவனையும் சீதாவையும் சொல்லலாம். ஆனால், பெயர்ப் பொருத்தத்துக்கு ஏற்றபடி அவர்களிடையே மனப் பொருத்தம் இல்லை. அந்தப் பொருத்தம் இன்மையே முக்கோணங்களையும் நாற்கோணங்களையும் தோற்றுவித்துக் கதையை நடத்துகிறது.

பொருந்தும் பெயர்களில் நகைச்சுவையுடன் சிலவற்றைக் கல்கி புனைந்துள்ளார். ''புஷ்பப் பல்லக்கு'' என்னும் ஆரம்ப காலக் கதை ஒன்றில், ஒரு தாசில்தாரின் பெயர், லஞ்சநாத சாஸ்திரி; இன்னொரு தாசில்தாரின் பெயர் பெத்தப் பேராசைப் பிள்ளை. ஒரு தாசில்தாரின் கீழ் அவதிப்படும் ரெவின்யூ இன்ஸ்பெக்டரின் பெயர், திராத்துயரம் அய்யங்கார்.

''அபலையின் கண்ணீர்'' என்னும் நெடுங் கதையில் சிவராஜ், துரைராஜ், தனராஜ், என ஒரேவிதமாய் முடியும் மூன்று பேர்களைக் கல்கி வளையவிட்டு, விளையாட்டாக நம் மனத்திலும் வினையாகக் கதையிலும் குழப்பம் உண்டாக்கித் திகைப்பூட்டுகிறார்.

கல்கியின் பெரும்பாலான கதைகள், அவருக்குப் பழக்கமான சோழ நாடு, கொங்கு நாடு, தென்பாண்டி நாடு ஆகியவற்றில் நிகழ்பவை. அவற்றில் அந்தந்த வட்டாரத்தின் பழக்க வழக்கங்களும் காட்சிகளும் பேச்சுக்களும் நன்கு பதிந்திருக்கின்றன. ''மகுடபதி'' நாவலின் முகவுரையில், இந்த இயல்



கண் தெரியாத ஒருவர், அந்த நிலையிலும், செய்திப் பத்திரிகைகள் விற்றுக் கொண்டிருந்தார். கீழே பத்திரிகைகளைப் பரப்பி வைத்துவிட்டுப் பக்கத்தில் உண்டியல் வைத்திருப்பார். வருவோர்; பத்திரிகையை எடுத்துக் கொண்டு அதற்கான காசை மட்டும் உண்டியலில் போட்டுவிட்டுப் போவார்கள். ஒருவர் மட்டும் கண்ணிழந்தவருக்காகப் பரிதாபப் பட்டுக் காசு மட்டும் போட்டுவிட்டு, பத்திரிகையை எடுத்துக் கொள்ளாமல் போவார். இது விற்பவருக்கும் தெரியும். பல நாட்கள் இது மாதிரியே நடந்து கொண்டிருந்தது. ஒரு நாள் விற்பவர், அவரை அழைத்தார். ''நீங்கள்தானே தினமும் இருபது பைசா போட்டுவிட்டுப் பத்திரிகை எடுத்துக் கொள்ளாமல் போவது?'' என்று கேட்டார்.

''ஆமாம்'' என்றார் இரக்க மனம் உள்ளவர்.

''நாளை முதல் பத்து பைசா கூடப் போடுங்கள். பத்திரிகைகள் விலை ஏறிவிட்டது!'' என்றார் விற்பனையாளர்.

-முத்து



ஃ நான்கு கால் பிராணிகளில் ஒட்டகத்துக்கு மட்டுமே நீரில் நீந்தத் தெரியாது.
ஃ ஆந்தையின் இறக்கைகள் பறக்கும்பொழுது சத்தம் கேட்காதபடி அமைந்துள்ளன.
ஃ மனிதனுடைய தலை மயிர் ஒரு வருடத்தில் பதிறைறு அங்குலம் நீளம் வளர்கிறது.
ஃ கடல் நீரைக் கொண்டு 'ஐஸ்' செய்தால் ஐஸ் உப்பாக இருக்காது. உறையும் பொழுது நீர் மட்டுமே ஐஸாக மாறும். உப்பு தனியாகப் பிரிந்து விடும்.
ஃ உட்கொள்ளும் உணவை இரைப்பையை நோக்கித் தள்ளும் விதத்திலேயே உடலுக்குள் தசைகள் அமைந்துள்ளதால் நாம் தலை கீழாக நின்றுகூடச் சாப்பிட முடியும்.
ஃ ஆண்டுக்கு ஆறு முறை எலி குட்டிப் போடும். ஒவ்வொரு முறையும் 8 முதல் 10 குட்டிகள் போடும்.
— கே. வெங்கட்ராமன்

பைச் சுட்டிக் காட்டியிருக்கிறார் டி. கே. சி.:

''கல்கி'' ஆசிரியருக்குச் சொந்த ஊர் மாயவரம் பக்கத்திலுள்ள கிராமம். நானும் அங்கே போய்த்தான் இருக்கிறேன். ''மகுடபதி''யை வாசித்த பிறகு, ஆசிரியர் பிறந்து வளர்ந்து சுகதுக்கங்களை அநுபவித்த இடம் கோயமுத்தூர் ஜில்லாதான் என்று சொல்லத் தோன்றுகிறது.

ஆசிரியர் ஏதோ சொற்ப காலந்தான் கவுண்டர்கள் நாடாகிய கொங்கு நாட்டில் வாழ்ந்திருக்கிறார். ஆனாலும், அங்குள்ள மக்களோடு இதயம் கலந்தவராக வாழ்ந்திருக்கிறார். மக்களோடு மாத்திரமல்ல; கொங்கு நாட்டு நிலத்திலும் புழுதியாடத் திளைத்திருக்கிறார். இந்த அபூர்வமான இதயப் பண்பு காரணமாக, கதையில் வரும் பாத்திரங்களும், மரங்களும் செடிகளும், வீடுகளும், கொங்கு நாட்டு மண்ணிலிருந்தே முளைத்துச் செழித்து வளர்கின்றன. எந்த விதத்திலும், பாத்திரங்களையும் களங்களையும் கொங்கு நாட்டை விட்டுப் பெயர்த்து எடுக்க முடியாது.

பெயர்களையும் அப்படியேதான் பெயர்த்து எடுக்க முடியாது — மருதாசலக் கவுண்டர், கள்ளிப்பட்டி கார்க்கோடக் கவுண்டர், சிங்கமேடு தங்கசாமிக் கவுண்டர் முதலியன.

திடீரென ஆரம்பித்த ''துணைக் கல்கி'' இதழ்களில் வெளியிடுவதற்காக அவசரமாய்த் திட்டமிட்ட தொடர் கதை ''மகுடபதி''. அதன் பாத்திரங்களுக்கு வேண்டிய மற்றப் பெயர்களை எல்லாம் எளிதாகவே கல்கி யோசித்துத் தீர்மானித்து விட்டார். கதாநாயகிக்கு மட்டும் பொருத்தமான கொங்கு நாட்டுப் பெயர் ஒன்றை அவரால் தீர்மானிக்க முடியவில்லை. அதற்காக வளைய வளைய நடந்து யோசித்தும் பயன்படாமல் போன நிலையில், தமது மனைவியின் யோசனையை நாடினார். 'அந்த அம்மாள் திருச்செங்கோடு ஆசிரமத்தில் தாம் பேசிப் பழகிய பெண்களின் பெயர்களை ஞாபகப்படுத்திக்கொண்டு அவற்றிலிருந்து ஒன்றைத் தெரிவித்தார், 'பலே' 'பலே!' என்று உற்சாகத்துடன் அந்தப் பெயரை ஏற்றுக் கொண்டார் கல்கி. தமது உற்சாகத்தைப் பின்னர் கதாநாயகன் மகுடபதியின் தனி மொழி மூலம் வியப்புடன் வெளியிட்டார். ''செந்திரு! என்ன அழகான, அபூர்வமான பெயர்!''

கல்கி படைத்த அல்லது பயன்படுத்திய பெயர்களில் வெகுவாகப் பிரபலம் அடைந்தவை சில உண்டு. தொடர் கதையாயும் திரைப் படமாயும் ''தியாக பூமி'' வந்ததை அடுத்து, அந்தப் பெயரை இட்டு விளம்பரம் செய்யப்பட்ட சேலையை ஆயிரக்கணக்கான பெண்கள் வாங்கி அணிந்தார்கள். அதை விடச் சிறப்பாக இன்னொன்று.அந்த நாவலில் வந்த சிறுமி சாருவின் பெயரை, ஆயிரக் கணக்கான பெற்றோர்கள் தமது குழந்தைகளுக்கு இட்டார்கள்.

கல்கியின் சமூகக் கதைகளில் வரும் பெயர்களைப் பெற்றோர்கள் சூட்டுவதில் அவ்வளவாய் வியப்பில்லைதான். ஆனால் அவருடைய சரித்திரக் கதைகளில் உள்ள அசாதாரணப் பெயர்களைச் சூட்டுவது வியப்புக்கு உரியதே. ''பொன்னியின் செல்வன்'' நாவலை வியந்து படித்து அதைக் கல்கியின் மிகச் சிறந்த படைப்பாகக் கருதும் ''சுப்ர பாலன்'' என்ற இ. சு. பாலசுப்பிரமணியம், அதில் வரும் பெயர் ஒன்றைத் தமது மகளுக்கு இட்டிருக்கிறார் — அதன் இரண்டாம் பாகத் தொடக்கத்தில் 'கவிநயச் சொற்களில் அறிமுகமாகும் பூங்குழலி.

ஏற்கனவே சொன்னபடி, வானதியின் பெயரைத் தமது பதிப்பகத்துக்குச் சூட்டிய திருநாவுக்கரசு, அதே அதிர்ஷ்டப் பெயரைத் தமது ஐந்தாவது குழந்தைக்கும் சூட்டியுள்ளார். வானதி நிறுவனத்தின் தொடக்க கால நூல்கள் சிலவற்றின் பதிப்புரையில் ''கல்கி - தாசன்'' என ஒப்பம் இட்டும், தமது விசுவாசத்தைத் திருநாவுக்கரசு வெளியிட்டார்.




அரும்பு அம்புகள்
அமரர்
கல்கி
இது வரை வெளிவராத
நாவல்
18-4-76 சித்திரை சிறப்பிதழில் ஆரம்பம்

அழுக்கினை அறவே ஒழித்திட ஒரு புதிய வழி



புதிய ரம்யா

ஆழ்ந்து சுத்தமாக்கும் டிடர்ஜன்ட்



விஞ்ஞான முறையில் தயாரிக்கப்படும் புதிய ரம்யா, துணிகளிலுள்ள அழுக்கை விரைவில் நீக்குகிறது.

இரண்டு ஆண்டுகால ஆராய்ச்சிக்கும், சோதனைக்கும் பிறகே, இதை நாங்கள் உறுதியாகக் கூறுகிறோம். புதிய ரம்யா விலுள்ள சர்பேக்டன்ட் துணிகளில் எங்கெங்கு அழுக்கு படிந்திருந்தாலும் அதனை அறவே ஒழித்து, துணிகளை மிகச் சுத்தமாகவும், மிருதுவாகவும் மாற்றுகிறது.



வில்லைகளாகவும், மிருதுவான பைகளிலும் கிடைக்கும்.

அழுக்குத் துணி வெளுக்க —பளீரென ஒளி வீச்

அல்ட்ராமரீன் & பிக்மண்ட்ஸ் லிமிடெட், ராணிப்பேட்டை, தமிழ்நாடு.

SAA/UPL/1875

இன்னொரு "கல்கிதாசன்", நயமணி கல்கிதாசன், இலங்கையின் தலைநகரில், பாரதி இளைஞர் சங்கத்தின் தலைவராய் இருந்து, பாரதியையும் கல்கியையும் சேர்த்துப் போற்றி வந்தார். அந்தத் தீவில் மட்டுமே தெரிந்தவராய் இருந்த கல்கிதாசன், 1956-ல் பகீரதன் அங்கே பிரயாணம் செய்து விட்டுக் கல்கிப் பத்திரிகையில் எழுதிய தொடர் கட்டுரையின் மூலம், எங்கும் தெரிந்தவரானார்.

அதே ஆண்டில், மற்றும் ஒரு "கல்கிதாசன்", "பர்மா நாடு" என்ற ரங்கூன் பத்திரிகையில் கட்டுரைகள் எழுதினார். இந்தப் புனைபெயரின்மூலம் தம்மைக் கல்கியின் சீடராய்ப் புலப்படுத்திக் கொண்டவர், இப்போது சிறந்த நகைச்சுவை எழுத்தாளராய் விளங்கும் பி. எஸ். ரங்கநாதன். "கல்கிதாசன்" என்பதுடன், முன்பு கல்கி பூண்டிருந்து விட்டு விட்ட குறுமுனிவரின் பெயரையும், "அகஸ்தியன்" என்பதாக வைத்துக் கொண்டவர் இவர். மற்றும், பி.எஸ். ஆர்., ரசகுண்டு, பாலாஜி, 141 என்ற புனைபெயர்களும் கொண்டவர்.

செங்கற்பட்டு சேவா சங்கத்தின் தொண்டர் என்ற முறையில், முதலில் இவர் கல்கியுடன் தொடர்பு கொண்டவர். 1954 ஆகஸ்டில், செங்கற்பட்டு வழக்குரைஞர் சீனிவாச ஐயரின் அழைப்பிற்கிணங்க, அவருடைய ஆத்தூர் விவசாயப் பண்ணையைக் கல்கி சுற்றிப் பார்த்த போது, ரங்கநாதனும் உடன் சென்றார். "பொன் விளையும் பூமி" என்ற தலைப்புடன், அந்தப் பண்ணையில் கல்கி அடைந்த வியப்பான அனுபவங்கள் பற்றி, அவர் எழுதிய கட்டுரை, கல்கிப் பத்திரிகையில் வெளியாயிற்று. அதுவே அச்சில் வெளியான அவருடைய முதல் கட்டுரை. அதற்காக வந்த சன்மானப் பணத்தை, அப்போது கல்கி திரட்டிக் கொண்டிருந்த காந்தி மண்டப நிதிக்குத் திருப்பி அனுப்பினார். தாம் எழுதுவது எல்லாமே கல்கிக்குக் காணிக்கையாகும் என்று சொல்லும் பி.எஸ். ஆர்., கல்கியின் மகளுடைய பெயரைத் தமது குமாரிக்கு வைத்து, அதன் மூலமும் அவருடைய நினைவைப் போற்றியுள்ளார்.

கல்கியின் பெயர் சூடிய அல்லது தொடர்பு கொண்ட கழகங்கள் சில உண்டு. அவற்றில் மூன்றை மட்டும் இங்கே கவனிப்போம்.

கல்கி ஃபைன் ஆர்ட்ஸ் கிளப் — சென்னையில் அமைந்த இந்தக் கழகம், மற்ற நாடகங்களுடன், கல்கியின் கதைகள் சிலவற்றையும் நாடகமாக்கி, வெவ்வேறு ஊர்களில் நடத்தியுள்ளது. கூத்தபிரான் நாடகமாக்கிய "வீணை பவானி" வெகுவான பாராட்டுக்கு உரித்தாயிற்று. இதன் நடிகர்களில் ஒருவர், இப்போது வெள்ளித் திரையில் நட்சத்திரப் புகழ் கொண்டுள்ள ஜெய்சங்கர்.

கல்கி அன்பர் சங்கம் — கல்கியின் அளாவலுக்கு உட்பட்ட இரா. சுராஜ் தோற்றுவித்து, விக்கிரமன் போன்ற எழுத்தாளர்களின் கூட்டுறவுடன் நடந்த இலக்கியக் கழகம். இதன் ஆதரவில் பல இலக்கியக் கூட்டங்களும் கவியரங்குகளும் சென்னையின் வெவ்வேறு பகுதிகளில் நடைபெற்றன.

கல்கி கலை மன்றம் — இலங்கை வாழ் தமிழர்களில், கல்கி அன்பர்கள் பலருடைய ஒத்துழைப்புடன், ரா. மு. நாகலிங்கம் நிறுவி நடத்திய சங்கம். அதன் ஆதரவில், அத்தீவின் பெரிய ஊர்களில் அடுத்தடுத்து இலக்கிய விழாக்கள் நடைபெற்றன. 1956 இறுதியில் கண்டி நகரிலே, ஈழகேசரி ஆசிரியர் இராஜ அரியரத்தினத்தின் தலைமையில் நடைபெற்ற விழாவில், கல்கி நிறுவனத்தின் சார்பில் பகீரதன் கலந்து கொண்டார்; அதைப் பற்றி அவர், முன் குறிப்பிட்ட கட்டுரைத் தொடரில் ஒரு தனி அத்தியாயமே எழுதினார். தமிழ்மொழிக்கும், தமிழ் மக்களுக்கும் — குறிப்பாக ஈழத்தில் வாழும் தமிழர்களுக்கு — கல்கி செய்த பணிகளைப் போற்றுவதற்கென்றே தோன்றிய மன்றம் அது.

எங்கிலுமே பொன்னியின் புதல்வருக்குப் புகழ்தான் என்றாலும், மரகதத் தீவில் அவர் அடைந்தது மாணிக்கப் புகழ்!

(தொடரும்)



இப்படியும் ஒரு ராஜிநாமாக் கடிதம்!

அமெரிக்காவில் ஒரு பள்ளி ஆசிரியர் இவ்வாறு தம் ராஜிநாமாக் கடிதத்தை எழுதினார்:

"ஆசிரியர் தலைமை ஆசிரியருக்குப் பயப்படுகிறார்; தலைமை ஆசிரியர் இன்ஸ்பெக்டரைக் கண்டு நடுங்குகிறார்; இன்ஸ்பெக்டர்கள் அரசாங்கக் கல்வி இலாகாவைக் கண்டு பயப்படுகிறார்கள்; அரசாங்கக் கல்வி இலாகா அரசாங்கத்தைக் கண்டு அஞ்சுகிறது; அரசாங்கம் வாக்காளர்களைக் கண்டு பயப்படுகிறது; வாக்காளர்கள் தங்கள் குழந்தைகளிடம் பயப்படுகிறார்கள்!

"ஆனால் இந்தக் குழந்தைகளோ யாரைக் கண்டும் பயப்படுவது கிடையாது! எனவே என் வேலையை ராஜிநாமாச் செய்கிறேன்!"

ஆதாரம்: 'அமெரிக்கன் ரிவ்யூ'
தகவல்: கோ. கிருஷ்ணசாமி

"ஏன் ராதா வீட்டுக்கு வருவதற்கு இவ்வளவு நேரமாகி விட்டது? மணி ஏழு அடித்தாயிற்று, கவனித்தாயா?'' என்று மகளைப் பார்த்துக் கேட்டாள் கல்யாணி. வாளிப்பும் கட்டுமாகப் பெங்களூர் சூரியகாந்தியின் பூரிப்புடனும் கவர்ச்சியுடனும் நின்ற மகளைப் பார்த்து அவளுக்கு உள்ளூற ஒரு கவலையும் வண்டலாய் உறுத்திற்று.

''பஸ் ஏறி வர நாழி ஆயிட்டுதம்மா. கூட்டத்திலே ஏறி நிற்க முடியவில்லே. வேனுமின்னே மேலே விழுந்து நெருக்கறுங்க. எப்படி வருகிறது?''

''பஸ் கூட்டம் எப்போதும் ஓயாது. அதைப் பார்த்து வர முடியுமா? உன்னே ராம்நகர் கடை வீதியிலே பார்த்தேன்'' என்று சொல்லிவிட்டு ராதாவை நிமிர்ந்து பார்த்தாள் கல்யாணி. ராதா தலையைக் குனிந்து கொண்டாள். வயிற்றில் சில்லென்று ஏதோ துண்டமிட்டது. அம்மா அவளைக் கவனித்து விட்டுத்தான் கேட்கிறாள். வெறும் விசாரணை இல்லை அது.

''தற்செயலாய் அவரை அங்கே பார்த்தேன். கூட வந்து ஒரு ஐஸ்கிரீமாவது சாப்பிடணும் என்று ஒரே பிடிவாதம். என்னால் தட்டிச் சொல்ல முடியவில்லே. சினிமாவுக்குக் கூடக் கூப்பிட்டார். நான் உன்னைக் கேட்கணும் என்று சொல்லி விட்டேன்.''

''கல்யாணம் என்று ஆகிவிடட்டும். அப்புறம் நீங்கள் சேர்ந்து எங்கே வேணுமானாலும் போகலாம். அதுவரைக்கும் தெருவில் பார்க்கிறது, பேசுவது எல்லாம் எனக்குச் சரியாகத் தோன்றவில்லே. ஆமாம். உலகம் தெரிய ஒரு முறை சறுக்கினால் அப்புறம் ஒரே சறுக்கல்தான்.''

அம்மாவின் முகத்தில் இரத்தம் புழுங்குகிறது. அப்பாவின் பொறுப்பும் சேர்ந்து அவள் தலையில் விழுந்து விட்டது. மகளுக்கு வீட்டில் காவல் போடலாம். வெளியிலே போகும்போது, படிக்கப் போகும்போது, எப்படிக் கவனிக்க முடியும்?

நிலே வாசற்படி மேல் சாய்ந்தபடி சுவரை நகத்தால் கீறிக்கொண்டே நின்றாள் ராதா. அவளால் பதில் சொல்ல முடியவில்லே. ராஜன் அவளுக்குப் பதில் சொல்லவில்லேயே இன்னும்? நல்ல வேலே கிடைக்கட்டும் என்று காத்திருக்கிறாரா? அவளுடைய படிப்பு முடிந்து அவளும் ஒரு வேலேயில் அமர வேண்டும் என்று எதிர்பார்க்கிறாரா?

அவளுக்குத் தெரியவில்லே.

அவளுக்கு விதம் விதமாய்ச் சந்தேகம் எழும். ராஜனின் வாழ்க்கையில் இன்னொரு பெண் இருக்கிறாளா? வெளியிட முடியாத குடும்பச் சிக்கல் ஏதும் இருக்குமோ? அல்லது இந்தச் சிநேகிதமும் இழையலும் ஓர் இளம் பெண்ணின் உறவைப் பொறுப்பேற்காமல் ரசிக்கும் சாகஸம்தானே?

அன்று இருவரும் சிந்தாமணி மார்க்கெட்டில் ஏதேதோ சாமான்கள் வாங்கிக் கொண்டிருந்தபோது, ராதா அவனிடம் கேட்டாள்: ''நாம் இரண்டு பேரும் வீட்டுக்குச் சேர்ந்து சாமான்கள் வாங்குவது எப்போது?''

ராஜனின் கையில் ஒரு வர்ணத் துண்டுக் காகிதம் பூவாய்த் திரிந்தது. அவன் அவளைப் பார்க்கவில்லே. தன்னோடு, தன் கைப்பூவோடு பேசிக் கொண்டிருந்தது போலத் தோன்றிற்று. கண்களில் ஏதோ ஒரு யோசனை அலேந்து தவித்தது.

''உனக்கு நான் பதில் சொல்லும் வேளை இன்னும் வரவில்லே ராதா! சமயம் வரும் போது கட்டாயம் சொல்வேன்.''

''அந்த வேளை எப்போது வரும்? இன்னும் எத்தனை நாட்கள்?''

''அது இன்னும் எனக்கே தெரியவில்லே.''

அந்தப் பதில் அவள் நெஞ்சில் கல் கனமாய் இறங்கிற்று. அம்மா இந்தப் பேச்சை என்ன விதமாய்ப் புரிந்து கொள்வாள்? அவளை என்ன சொல்லிச் சமாதானப்படுத்துவது?



மழை தரும் மேகம்

எஸ். லக்ஷ்மி சுப்பிரமணியம்

கொஞ்ச நாட்களாய் ராஜனைக் கண்ணில் காணவில்லை. ஆபீஸ் வாசலிலோ, ரெயின்போ தியேட்டர் அருகிலோ, சூபர் மார்க்கெட்டிலோ வாரத்துக்கு இரு முறையாவது அவன் அவள் கண்ணில் தட்டுப்பட்டு விடுவான். இரண்டு வாரங்களாக அவன் அவள் பார்வையில் படவேயில்லை.

முன்பின் சோடையின்றி இறங்கும் மழையைப் போல, அந்தக் கடிதம் திடீரென்று சென்னையிலிருந்து வந்தது. ராதா அவனைப் பற்றி அலுவலகத்தில் விசாரித்தபோது, ''இரண்டு மாதம் மெடிகல் லீவு'' என்று சொன்ன, விளக்கமில்லாத பதில் அப்போது தான் அவளுக்குப் புரிந்தது.

சென்னை அடையாற்றிலிருந்து வந்திருந்தது அந்தக் கடிதம். ''நெருங்கிய நண்பர்கள், உறவினர்களுக்குத் தெரிவிப்பது எங்கள் கடமை. உங்கள் விலாசத்தை ராஜன் கொடுத்திருந்ததால் இந்தக் கடிதத்தை உங்களுக்கு எழுதுகிறோம். இரண்டு ஆண்டுகளுக்கு முன் ராஜன் புற்றுநோய் அடையாளங்களுடன் வந்தபோது, இங்கே வைத்தியம் செய்து அனுப்பினோம். சாதாரணமாக அந்த வைத்தியத்தோடு அந்த நோய் மறைந்து விடுவதுண்டு. துரதிர்ஷ்டவசமாக இப்போது அது கிளைத்து முற்றிப் போயிருக்கிறது. அடிக்கடி வந்து 'செக்-அப்' செய்து கொண்டிருந்தால் இந்த நிலையை அவர் தவிர்த்திருக்கலாம்....''

அவளால் மேலே படிக்க முடியவில்லை. பார்வையைத் திடீரென்று கண்ணீர் மறைத்தது. அவளுடைய பயம் வெறும் உணர்ச்சியளவில் நின்று விடவில்லை. அம்மா தடுத்தும் கேளாமல் சென்னைக்குப் புறப்பட்டு வந்தாள். ராஜன் படுக்கையில் துவண்ட புழுவாய்ப் படுத்திருந்தான்.

''உன்னுடைய கேள்விக்குப் பதில் கிடைத்து விட்டதா ராதா? என்னுடைய தயக்கத்தின் காரணம் இப்போது புரிகிறதா?''

காத்திருந்து இவ்வளவு நாட்களுக்குப் பின் இந்த விதமாய் ஒரு பதிலா? அவன் அவளிடம் ஒருநாள் வரும் என்று சொன்ன வேளை இது தானா? அவள் கண்கள் திகிலில் சுழன்றன.

''எனக்கு வாழ்க்கையில் இனிமேல் எதுவுமே மிச்சம் இல்லை ராஜன்!'' சொல்லும் போதே அவள் குரல் உடைந்து போயிற்று. நிற்க முடியாமல் கால்கள்விட்டுக் கொண்டன. தளர்ந்து போய்க் கட்டிலில் அவன் காலடியில் உட்கார்ந்தாள். சுக்கலாய் நொறுங்கி விட்ட கனவுகள்.

''அப்படிச் சொல்லாதே ராதா. நீ வெறுமனே அழகு சிந்திக் கலைந்து போகும் மேகமாக ஆகிவிடக் கூடாது. மழை தரும் மேகமாய் இருக்க வேண்டும். ஒருவர் வாழ்க்கையைக் குளிர்விக்க மண்ணில் அதனால் பசுமை படர்ந்து தழைக்க அது பயன்பட வேண்டும். அந்தப் பாக்கியம் ராஜனுக்கு இல்லாவிட்டால் போகிறது. அந்தச் சக்தி ராதையின் வாழ்க்கையில் வறண்டு விடக் கூடாது.''

ராஜன் அவள் வாழ்க்கையில் புலன் உருவாய்த் தங்க





இதுவல்லவா உழைப்பு!

'உஜ்ஜெயினி' சிறைச்சாலையில் ஆயுள் தண்டனைக் கைதியாக இருந்துவரும் 'மங்கிலால்' என்பவருக்கு 'சோப்' செய்யும் தொழிலுக்காக ஸ்டேட் பாங்க் 10 ஆயிரம் ரூபாய் கடன் கொடுத்தது சென்ற ஆண்டு! இந்தக் கைதி இதை மூலதனமாகக் கொண்டு சோப் உற்பத்தி செய்து (சிறையிலேயே) ஒரே வருடத்தில் கடன் 10 ஆயிரத்தையும் திருப்பித் தந்து, 2,600 ரூபாய் சேமித்தும் வைத்திருக்கிறார்!

- சம்பத்குமாரி

ஆதாரம்: ''டைம்ஸ் ஆஃப் இந்தியா''

வில்லை. நினைவுகளின் நிழல்கள்தாம் மிச்சம். அவள் உணருவதற்கு முன்பே அவளுடைய இதய மலர் அகாலத்தில் மலர்ந்து மூடிக் கொண்டு விட்டது. இனி அவளுடைய வாழ்க்கையில் பசுமையா? ராஜன் விரும்பிய விதமாய் அவள் மழை தரும் மேகமாய்ச் செறிந்து நிற்கவா? எப்படி முடியும்?

நாட்கள் நழுவிக் கொண்டிருந்தன. மண்ணில் கல்வி இழுத்துச் செல்லும் புழுவாய் நகர்ந்தன நாட்கள். குழந்தையின் மெல்லடியாய், நிதானமாய்ச் சென்ற நாட்கள். தடவடியாய்ச் சிட்டுக் குருவியின் வேகமாய்ப் பறந்த நாட்கள்.

அவள் அதிகம் வெளியே போவதில்லை. இருட்டுவதற்கு முன் வீடு திரும்பி விடுகிறாள். அவசியம் இல்லையெனில் பேசுவதில்லை. கொட்டிப் பல் தெரியச் சிரிப்பதில்லை. விடியற்காலை நதியின் மேற்பரப்பாய், தன்னுள் எதையோ அடக்கிக் கொண்டு, விம்மித் தணியும் மௌனத்தில் அடங்கி விட்டாள் அவள்.

அம்மாவுக்குத் திருப்திதானா?

பூஜை அலமாரியின் மாலையங்களைத் திரட்டியபடி, கண்களில் பனி படரக் கல்யாணி கேட்பாள்: ''என்றைக்குத்தான் மனம் தேறி நீ மறுபடியும் வாழக் கற்றுக் கொள்ளப் போகிறாய்?''

அவளிடமிருந்து பதில் இராது. சந்தனம் கரைத்து அலம்பிய கை போல, ராஜனின் நட்பு இன்னும் அவள் நெஞ்சில் மணந்து கொண்டுதான் இருக்கிறது. இன்னொருவரை ஏற்றுக் கொண்டாலும், அந்த மணத்தின் பின்னணியில் அந்த உறவு எந்த விதமாய்ப் பொருந்தும்? எப்படிப் பரிமளிக்கும்?

படிப்பு முடிந்து விட்டது. எண்ணங்களை வேறு விதமாய்ச் செலுத்த ஒரு வேலையிலும் புகுந்தாகி விட்டது. தினமும் எட்டு மணி நேரம் குனிந்த தலை நிமிராமல் உழைப்பதை விட, மனத்துக்கு அமைதி தரும், தூக்கத்துக்குப் போதை தரும் வழி ஏது?

மானேஜ்மெண்ட் பயிற்சிக்காகப் பகுதி நேரப் படிப்பாக, மாலையில் நடக்கும் வகுப்பு ஒன்றில் சேர்ந்து கொண்டாள். அங்கே மாலை வேளையில் சில பாடங்களைச் சொல்லிக் கொடுப்பதற்காக வந்து சேர்ந்தான் ஆனந்த்.

'' உங்களுக்கு ஒரு 'கெஸ்ட்-லெக்சரர்' வந்து சேர்ந்திருப்பாரே? எப்படிச் சொல்லிக் கொடுக்கிறார்?'' என்று ஒரு நாள் வீட்டுக்கு வந்தபோது அவளுடைய சித்தி கேட்டாள்.

''யாரைச் சொல்லுகிறாய்? மிஸ்டர் ஆனந்தையா?'' என்று கேட்டாள் ராதா.

''பெயரைக் கூடச் சரியாகத் தெரிந்து வைத்துக் கொண்டிருக்கிறாயே? எப்படி இருக்கிறார்?''

''எப்படிச் சொல்லிக் கொடுக்கிறார் என்று தான் கேட்டாய். இப்போது எப்படி இருக்கிறார் என்று வேறே கேட்கிறாய், அவர் சொல்லிக் கொடுப்பது நன்றாக இருக்கிறது. அவரைப் பற்றி எனக்கு எந்த அக்கறையும் இல்லை'' என்று ஒரு புத்தகத்தை எடுத்துக் கொண்டு ராதா அதில் ஆழ்ந்து போனாள்.

''ஆனந்த் என்ற அந்த லெக்சரர் பார்க்க நன்றாக இருப்பார். வயது முப்பது கூட ஆக வில்லை. ரொம்பக் கெட்டிக்காரர். காரணமாகத்தான் அவரைப் பற்றி ராதையிடம் கேட்டேன்'' என்று கல்யாணியிடம் அப்புறம் சொன்னாள் மாலினி.

''அவள் மனத்தில் பதியும்படி நீயாவது ஏதாவது எடுத்துச் சொல்லு. அவளுடைய வாழ்க்கையில் எப்படியாவது விடிவு ஏற்பட்டால் சரி. தொடக் கூடாத விஷயத்தைத் தொட்டு விட்டோமோ என்று அவளுக்கு ஒவ்வொரு நிலையிலும் கலக்கம் ஏற்படலாம். நீதான் அவளுக்குத் தெளிவு கொடுக்க வேண்டும்'' என்றாள் கல்யாணி. அவள் பார்வையில் தங்கையின் கழுத்திலிருந்த சரடு வடமாகத் திரண்டு நிறைவாகத் தெரிந்தது.

படிப்பென்று மட்டும் இல்லாமல் வேறு விதமாகவும் அவளோடு பேசுவதற்கு வருவான் ஆனந்த். அவள் பதிலை ஒரு மருண்ட குழந்தைப் பார்வையுடன் அக்கறையாகக் கவனிப்பான். சில சமயம் அவளுடைய பேச்சின் சாதுரியத்தில் அவன் முகம் சிவந்து விடும். அவனை அந்த மாதிரி சிவக்க அடிக்க ஒரு சின்ன வார்த்தைகூடப் போதும் ராதாவுக்கு. அதிலேயே ஓர் அலாதியான திருப்தியும் அவளுக்குக் கிடைக்கும்.

ராஜன் அவளிடம் பழகிய விதம் வேறு. இது வேறுதான். அவளைத் தன் வழி நடக்க வைக்கும் மேல் உணர்வு ராஜனுக்கு இருந்தது. இவனோ அவளுக்குப் பின் நின்று கவனிப்பதிலேயே திருப்தி அடைந்து போனான்.

ஒரு நாள் அவளிடம் ஆனந்த் கொடுத்த 'நோட்ஸி'ல் கூடவே ஒரு சிறு அட்டைப் பெட்டியும் இருந்தது. திறந்ததுமே 'கம்'மென்று மணம் எழுந்தது.

''என்னது ஸார் இது?''

''அவரவர் ராசிக்கு ஏற்றபடி நிறம், அபூர்வமான கல், இவைகளைத் தேர்ந்தெடுத்துக் கொள்வதைப் போலத்தான் இதுவும். உன்னுடைய ராசிக்கு ஏற்ற மணம் என்று வைத்துக் கொள்ளேன்.''

''இதில் எல்லாம் உங்களுக்கு நம்பிக்கை இருக்கிறதா?''

''இல்லாவிட்டால் உன்னிடம் கொடுப்பேனா ராதா?''



CMGS-80-203 TM

''இதனால் எல்லாம் எனக்குத் தெம்பு கிடைத்து விடாது. ஏனென்றால் வாழ்க்கையில் மணமே இல்லாமல் போய்விட்டது என்னுடைய ராசி.''

''அப்படிச் சொல்லக் கூடாது. தெம்பு வேண்டும் என்று நினைக்கும் இன்னொருவருக்கு நீ பயன்படலாம். அவருடைய வாழ்க்கைக்கு நீ மணம் கொடுக்க முன்வரலாம்.'' அவனுடைய குரல் தனிப் பரிவுடன் மெத்தென்று இறங்கிற்று. ராதை ஒரு கணம் திகைத்து நின்றாள். ராஜன் சொன்னதையே மறுபடியும் இன்னொரு குரலில் கேட்பது போலத் தோன்றியது அவளுக்கு. வாழ்க்கையில் மறுபடியும் இன்னொரு முயற்சியா? அதில் இன்னொரு ஏமாற்றம் நேர்ந்தால் அவள் அதற்குத் தயாராக இருந்தாளா?

அன்று வகுப்பில் பேசும்போது ஆனந்த் நடுநடுவில் உணர்ச்சி வசப்பட்டுப் போனான். அவர்களுக்கு அவன் சொல்லித் தரும் கடைசிப் பாடம் அது. மறுபடியும் அவன் அங்கே வந்து அவர்களிடம் பேசும் சந்தர்ப்பம் இராது.

வகுப்பு கலைந்து வெளியே வந்தபோது, ஆளுக்கொரு விதமாக அவனிடம் பேசிக் கை குலுக்கி விட்டுப் போனார்கள். ராதை பதுங்கியே நின்றாள். அவனாகவே அவள் நிற்கும் இடத்துக்கு வந்தான்.

''வகுப்பில் இல்லாவிட்டாலும் வெளியே பார்ப்போம் இல்லையா?'' என்று கேட்டாள் ராதா, ஒரு புன்னகையை வரவழைத்துக் கொண்டு.

''நிச்சயமாகச் சொல்வதற்கில்லை ராதா! நாளை மறு நாள் நான் சென்னைக்குப் போகிறேன். அங்கே இதை விடச் சற்று உயர்ந்த ஒரு வேலைக்காக 'இண்டர்வ்யூ'. அது சரியாக அமைந்து விட்டால் அப்புறம் எனக்கு இடம் சென்னையில்தான்.''

அவன் குரலில் ஒரு மென்மையான சோகம் இருந்தது. அதன் நிழல் தன் மீது விழுவதை அவள் உணர்ந்தாள். எப்படிப் பதில் சொல்வது என்று புரியாமல் நின்றாள்.

''நீ ஸ்டேஷனுக்கு வர முடியுமா? வந்து வழியனுப்பினால் எனக்கு ஒரு தெம்பாக இருக்கும். உனக்காக வரத் தோன்றாவிட்டாலும் எனக்காகவாவது வாயேன்.''

தணல் மீது குங்கிலியத்தை விசிறியது போல அவளுடைய உணர்ச்சிகள் குபீரென்று பொங்கி ஜ்வலித்து அடங்கின. ஆனால் அவள் தன்னை வெளியிட்டுக்கொள்ளவில்லை. அவனுக்குப் பிடி கொடுத்துப் பதில் சொல்லவும் இல்லை.

ராதை ஸ்டேஷனுக்குப் போயிருந்தாள். அங்கே அப்படி அவனைத் திடீரெனப் பார்ப்பது அவனுக்கு ஒரு சந்தோஷத் திகைப்பாகக்கூட இருக்கும்.

புத்தக ஸ்டாலின் முன்னால் நின்று எதையோ புரட்டிக் கொண்டிருந்தபோது முதுகை யாரோ தொடுவது புரிந்தது. திரும்பிப் பார்த்தாள். அங்கே மாலினி நின்று கொண்டிருந்தாள்.

''எங்கே வந்தாய் சித்தி?''

''நீ எதற்காக வந்தாயோ அதற்காகத்தான். உன்னை இங்கே இழுத்து வந்திருப்பது என்னவென்று எனக்குத் தெரியும்.''

ராதை கட்டை விரலால் தரையைத் தேய்த்துக்கொண்டே தலை நிமிராமல் நின்றாள்.

''ஆனந்தை எனக்கு ஐந்து வருஷங்களாகத் தெரியும். புத்திசாலியான மனிதர். மிகவும் நயமான குணம். அவரால் வாழ்க்கையில் படிந்து அமர முடியவில்லை இன்னும். ஒரு பிடிப்புக்காக அலைந்து கொண்டிருக்கிறார்.''

''ஏன் அது அவருக்குக் கிடைக்கவில்லை?''

''கிடைக்க இருந்தது. அந்தப் பெண் ஒரு விபத்தில் இறந்து போனாள். அதிலிருந்து நிச்சயமில்லாத இந்த நிலைதான். இப்படி ஒரு தவிப்புதான்.''

ராதை அதிர்ந்து போய் நின்றாள். இருட்பாய் விரிப்பில் சிவப்பும் பச்சையுமாக விளக்குகள் மின்னின. வாழ்க்கையிலும் வழி கிடைக்கச் சில சமயம் வழி காட்டி அடையாளங்கள் தேவைப்படுகின்றன.

அவளுக்குப் புரிந்தது அவனுடைய தேவை. அவன் பேச்சிலும் சிரிப்பிலும் செய்கையிலும் இழையோடிய உணர்ச்சியின் பொருள் தெரிந்தது போல் இருந்தது. வாழ்க்கையில் இப்போது ஒரு துணைவனாக வரக் காத்திருக்கவில்லை; ஒரு துணைக்காகத்தான் காத்திருக்கிறான். அவனைப் புரிந்து கொண்டு அவனுடைய உணர்ச்சிகளைப் பங்கிட்டுக் கொள்வதற்கு அவனுடைய மகிழ்ச்சியோ, துயரமோ அவனை அழுத்தி விடாமல் கைகொடுத்துத் தூக்குவதற்கு.

அவளால் முடியுமா? அவளுக்கும் அதில் ஆறுதல் கிடைக்குமா? கிடைக்கலாம். அம்மாதிரி நினைவின் ஸ்புடத்தில், துயரத்தைத் தழுவிக் கொள்வதிலும் ஒரு தனி போதை. சோக சுகம் இருக்கக் கூடும். அவளும் அவனைப் போலத்தானே?

''நீ மழை தரும் மேகமாக இருந்து, ஒருவர் வாழ்க்கையைக் குளிர்வித்து அந்த மண்ணில் செழுமையும், பசுமையும் தோற்றுவித்து...''

ராஜனின் குரல் கேட்பது போல் இருந்தது.

தூரத்தில் ஆனந்த் போர்ட்டரின் பின்னால் நடந்து வருவது தெரிந்தது. அவனைப் பார்த்ததும் அவளுக்குத் தன் உணர்ச்சிகளை மறைக்கத் தெரியாது.

ரயிலில் ஏறி உட்கார்ந்த பின், ஜன்னல் மீது வைத்த கைகளை மெல்லத் தொட்டபடி அவன் அவளிடம் கேட்கப் போகிறான்:

''ராது! எனக்குச் சென்னையில் அந்த வேலை கிடைத்து, நான் அங்கேயே இடம் மாறிப் போக நேர்ந்து விட்டால்...''

அவனுக்குப் பதில் சொல்லத் தயாராகத்தான் இருந்தாள் ராதை.


13 அறிவின் விஜய ஒரு
இரவு கிராமத்தில் தங்கி காலையில் மறுபடி தங்கள் பிரயாணத்தைத் தொடருகிறார்கள் மாதவனும் சாருவும்.
இந்த மலைப் பகுதியில் தான் உன் தகப்பனார் இருக்கிறார் சாரு. நாம் விரைவில் அவரைச் சந்திக்கப் போகிறோம்.
அது சீக்கிரமாக இருக்கட்டும் மாதவன். நாம் நெடுநாள் நெடுந்தூரம் பிரயாணம் செய்துவிட்டோம்.
சில மைல்களுக்குப் பிறகு...
அதோ தெரிகிறதே அவை என்ன மாதவன்?
ஒரு பாழடைந்த நகரம், இடிபாடுகள். இந்தப் பகுதி மக்களை அங்கு போகப் பயப்படுவார்கள் - பேய் உலவும் இடம் என்று. உன் அப்பா அங்குதான் இருக்கிறார்.
பேய் உலவும் என்றதால் பீதியடைந்தாலும் தந்தையைக் காணும் ஆவலில் சாரு அங்கு போகிறாள்.
என் வரவை அறிவிக்கும் சங்கேத ஒலியில் சமிக்ஞை செய்யுமாறு கூறி இருக்கிறார் உன் அப்பா. நான் ஒலி எழுப்பட்டுமா?
இருங்கள் மாதவன். ஏதோ ஒரு சத்தம்... மோட்டார் வருவது போலில்லை?
லக்ஷ்மணனும் அவன் கூட்டாளியுமல்லவா?
ஐயோ! அப்படியானால் அவ்விருவரும் இவ்வளவு தூரமும் நம்மைப் பின் தொடர்ந்தா வந்திருக்கிறார்கள்?
விஷ்ணு பிரசாத் நீங்கள் இங்கு ஒளிந்திருப்பது எங்களுக்குத் தெரியும். உங்கள் மகள் சாரு எங்களிடம் கைதியாக இருக்கிறாள். அவளுக்கு ஏதும் ஆபத்து நிகழக் கூடாது என்றால் நீங்கள் மறைவிடத்திலிருந்து வெளிப்பட்டு விடுங்கள். இதோ இந்த பிரீஃப் கேஸில் ஒரு கோடி ரூபாய் உள்ளது. எங்களுடன் ஒத்துழைத்தால் அத்தனையும் உங்களுக்குத்தான். தாமதம் உங்கள் மகளின் பத்திரத்துக்குப் பாதகமாகும்.
நாங்கள் பொய் சொல்லவில்லை. இதோ உங்கள் மகளின் உடைகளைப் பார்த்துக் கொள்ளுங்கள்.
மாதவனும் நாம் அந்த ஏரியில் மூழ்கி இறந்துவிட்டதாக எண்ணி இருக்கிறார்கள். என் அப்பாவை வெளிவரச் செய்ய என் உடைகளைப் பயன்படுத்திப் பார்க்கிறார்கள்.

கோடி

கதை: கௌசிகன் சித்திரம்: ம. செல்வன்



வெறி!

வி. சரோஜா



பாண்டி அன்றுதான் வெளியே வந்திருந்தான்.

சென்ற இரண்டு ஆண்டுகளாக ஜெயில் தோட்டத்துக்கு நீர் பாய்ச்சியாகிவிட்டது. சிறைப் பறவையாகக் கூழ் குடித்தாகிவிட்டது. கூண்டின் கதவை நேற்று திறந்துவிட்டார்கள். ஆனந்தமாக வெளியே வர மனம் இடம் கொடுக்கவில்லை. செய்யாத குற்றத்துக்கு அனுபவித்த தண்டனை நெஞ்சை அழுத்தியது. இயந்திரம்போல் பஸ் நிலையத்தில் தன் சொந்த ஊருக்கு ஒரு டிக்கெட் எடுத்துக் கொண்டு பஸ்ஸில் ஏறி உட்கார்ந்தான். கமலி எப்படி இருக்கிறளோ ? செல்வா நன்ருக வளர்ந்திருப்பாள் இல்லையா ? அவர்களையும் அழைத்துக் கொண்டு அந்த ஊரை விட்டு எவ்வளவு தூரம் போகமுடியுமோ, போய்விட வேண்டும். அங்கே யார் முகத்திலும் அவன் விழிக்கவே விரும்பவில்லை.

பஸ் நிலையத்தில் இறங்கியவன் பார்வையில் பட்டது — பல வண்ணங்களில் அச்சடிக்கப் பட்ட பெரிய போஸ்டர் ஒன்று. வள்ளல் வையாபுரி தன் தாயின் நினைவு நாள் நிமித்தம் இரண்டாயிரம் ஏழைகளுக்குப் புத்தாடை வழங்குகிருர். அதில் குறிப்பிடப்பட்டிருந்த தேதி அன்றே !

பாண்டி தன் பற்களை நற நறவென்று கடித்துக் கொண்டான். வையாபுரிக்குத் தன் தாயின் மேல் அத்தனை பாசமா? பெண்களையெல்லாம் தன் தாயாகப் பாவித்துத்தான் புத்தாடை தருகிருரு? செய்வது அத்தனையும் பித்தலாட்டம், ஊருக்குள்தான் எப்படி ஒரு நல்ல பெயர் ?

இதே வையாபுரியின் வெளித் தோற்றத்தில் மயங்கிப் பகட்டான பேச்சில் சொக்கிப் பாண்டி மாடாக உழைத்திருக்கிருன். தன் குடும்பத்தைப் பற்றிக் கவலைப்படாமல், வீட்டுச் சிந்தனை கொஞ்சமும் இல்லாமல், இரவு பகல் பாராமல் தன் உடலைத் தேய்த்திருக்கிருன். டிரைவர் வராத நாள் எல்லாம் கார் டிரைவர் அவன்தான். மாடுகள் கறப்பது முதல் படுக்கை தட்டிப் போடுவது வரை எல்லாம் அவன் பணிதான். வையாபுரி கைநிறையக் காசு கொடுத்தார்.

வையாபுரிக்கு ஒரே பெண். வயது பன்னிரண்டு இருக்கும். அவளுக்குப் பாட்டு சொல்லித் தர ஒருத்தி — வயது கிட்டத்தட்ட இருபது இருக்கும் — தினமும் வீட்டுக்கு வந்தாள். இயற்கை தன் வண்ணத்தைக் காட்ட, ஏழை — பணக்காரர் என்ற பாகுபாடு பார்ப்பதில்லை. பெரிய குடும்பத்தைச் சேர்ந்த அந்தப் பெண் பட்டுப் போல் மேனியுடன் எழிலுருவமாகத் திகழ்ந்தாள். மாலை ஆறு மணி முதல் ஏழு மணி வரையில் படிப்பு.

அன்று வையாபுரியின் தோட்டத்து வீட்டில் பாண்டி மட்டும் இருந்தான். பெரிய பங்களாவில் சீரமைப்பு வேலை நடப்பதால் தாற்காலிகமாக அங்கு வந்திருந்தார்கள். எஜமானி அம்மாள் தன் பெண்ணுடன் வெளியே போனவள் வீடு திரும்பவில்லை. தவசிப் பிள்ளை சினிமாப் பார்க்கப் போய்விட்டான். மாடி அறையில் வையாபுரி ஏதோ படித்துக் கொண்டிருந்தார்.

பாட்டு சொல்லிக் கொடுக்கும் பெண் குடையும் கையுமாக நடந்து வந்தாள்.

'' சின்னம்மா இல்லீங்களே !'' என்ருன் பாண்டி.

'' இதோ வந்துவிடுவாள்... நீங்கள் உள்ளே போய் உட்காருங்கள்!'' என்ற குரல் வையாபுரியினுடையது. ஓசைப் படாமல் பாண்டிக்குப் பின்னுல் வந்து நின்றிருக்கிருர்.

அந்தப் பெண் திரும்பி மாடிப் படி ஏறப் போன வையாபுரியைத் தயங்கியபடி பார்த்துவிட்டு முன் அறையில் போய் உட்கார்ந்தாள். வையாபுரி மாடிப் படியில் இருந்தபடியே திரும்பினுர்.

''பாண்டி ! நம் சின்ன வண்டியை எடுத்துக் கொண்டு நேராக ஆபீசுக்குப் போ ! அக்கௌண்டெண்ட் நாயுடு அங்கே இருப்பார். அழைத்து வா! நானும் டெலிபோனில் கூப்பிட்டுச் சொல்லிவிடுகிறேன்!'' என்ருர். அவர் தந்த சாவியை வாங்கிக் கொண்டு பாண்டி புறப்பட்டான்.

வண்டியை எடுத்துக் கொண்டு ஒரு பர்லாங் போன பாண்டிக்கு ஓர் எண்ணம் தோன்றியது.

'பாட்டு வாத்தியாரம்மா வந்து காத்துக் கிட்டிருக்காங்களே!... அம்மாவும் சின்னம்மாவும் எங்கே போயிருக்காங்கன்னு தெரிஞ்சா வரப்ப அவங்களையும் அழைத்துவரலாமே' என எண்ணினான் பாண்டி. வையாபுரியிடம் விவரம் கேட்க வண்டியை வீட்டுப் பக்கம் திருப்பினான்.

பங்களா வாசலில் காரை நிறுத்திக் காம்பௌண்ட் கதவைத் திறந்து தோட்டத்து வீட்டுப் பக்கம் வந்த பாண்டி அவசரம் அவசரமாக உள்ளே நுழைந்தான். அங்கே... வையாபுரி...

முன்னறையில் சோபாக்கள் கலைந்து கிடந்தன. அதற்கு அடுத்த அறையில் ஏதோ சத்தம். ஜன்னல் வழியாகப் பாண்டி எட்டிப் பார்த்தான்.

வேங்கையிடம் சிக்கிய புள்ளிமான் போல் அவள் துடித்தாள். அவள் மேலாடை அலங்கோலமாகக் கிழிந்து கிடந்தது. சேலையின் தலைப்பு தரையில் கிடந்தது.

''ஐயா !'' என்று அலறினான் பாண்டி வெளியில் இருந்தபடியே.

மின்சாரத்தால் தூக்கி எறியப்பட்டவர் போல் சட்டென்று பின்னால் நகர்ந்தார் வையாபுரி. பாண்டியின் மேல் ஏற்பட்ட ஆத்திரத்தையும் ஏமாற்றத்தையும் எப்படியோ அடக்கிக் கொண்டார். அந்தப் பெண் தனக்குச் சாதகமாகக் கிடைத்த அந்த ஒரிரு நிமிஷங்களை வீணாக்கவில்லை. தன் புடவைத் தலைப்பால் உடலை இறுகப் போர்த்தியபடி அறைக் கதவுகளை அசுர வேகத்தில் திறந்து கொண்டு, பாண்டியை ஏறிட்டுப் பார்க்கக் கூசியவளாய் அவள் வெளியே ஓடினாள்.

எதுவுமே பேசாமல் வையாபுரியைப் பார்த்தபடி நின்றான் பாண்டி.

வையாபுரி தலையைக் குனிந்து கொண்டார். ஏதோ நினைத்துக் கொண்டவர் போல் சட்டென்று குனிந்து பாண்டியின் கால்களில் விழப் போனார். பாண்டி திடுக்கிட்டுப்போய்ப் பின்னுக்கு நகர்ந்தான். ''என்னங்க ஐயா இதெல்லாம்?'' என்றான் தடுமாறிப்போய்.



''தப்பு நடந்து போச்சு பாண்டி!... என்னமோ என்னையும் அறியாமல் ஒரு வெறியில் அப்படி நடந்து கொண்டு விட்டேன். என் மானம் மரியாதை எல்லாமே உன் கையில் தான் இருக்கு. இது மட்டும் வெளியிலே தெரிஞ்சா தூக்கு மாட்டிக்கிறதைத் தவிர எனக்கு வேறே வழி இல்லே...'' எனப் பரிதாபமாகக் கெஞ்சினார்.

பாண்டிக்கு என்னவோ போல் இருந்தது. எதிர்பாராத புது அனுபவம் இது. லட்சாதிபதி — அவன் தெய்வமாகப் போற்றி வந்த அவன் எஜமான் — அவன் முன் கைகளை நீட்டிக் கொண்டு கெஞ்சுகிறார்.

''நான் ஏனுங்க இதையெல்லாம் வெளியே சொல்லப் போறேன்... ஆனால் ஐயா இப்படிச் செய்வீங்கன்னு நான்...''

''...நானே கூடக் கற்பனை செய்து பார்க்கவில்லை...''

''அந்தப் பொண்ணு அவர்கள் வீட்டில் போய்...''

''ஒன்றும் சொல்லாது. சொன்னாலும் என்னிடம் வந்து கேட்க அவர்களுக்குத் துணிவு பிறக்காது.'' — இப்போது வையாபுரி பேசவில்லை. அவர் பணம் பேசியது.

''அப்படியானால் என் தலையே போனாலும் இதை வெளியே சொல்ல மாட்டேன். இது சத்தியம். ஆனால் நீங்க மட்டும்...''

''இனிமேல் சொப்பனத்தில் கூட இப்படி நடக்க நினைக்க மாட்டேன்'' என்றார் வையாபுரி. பேச்சுடன் நிற்காமல் கறுப்பு நிறத் தோலால் ஆன அவருடைய மணிபர்ஸை அவன் கைகளில் திணித்தார்.

''இதில் எத்தனை பணம் இருக்கிறதென்று எனக்குத் தெரியாது. உனக்கே உனக்கு இது. இதைக் கொடுத்து உனக்கு வாய்ப் பூட்டு போடுவதாக நினைக்காதே. இந்தப் பர்ஸ் என்னிடம் இருபது வருடங்களாக இருக்கிறது. ராசியான பர்ஸ். தினமும் இதை நான் உபயோகிக்கிறேன். இனி இது என்னிடம் இருக்காது. இதைப் பார்க்காத ஒவ்வொரு நாளும் எனக்கு அதன் ஞாபகம் வரும். இந்தச் சம்பவமும் நினைவுக்கு வரும். நான் எச்சரிக்கையுடன் இருப்பேன்!'' என்றார்.

''இதெல்லாம் வேண்டாம் ஐயா!'' எனப் பிடிவாதமாக மறுத்தான் பாண்டி.

வையாபுரி வற்புறுத்தினார். கைகளில் திணித்தார். பர்ஸுடன் தன் வீட்டுக்குத் திரும்பிய பாண்டி யாரிடமும் ஏதும் கூறாமல், பர்ஸைத் தன் பெட்டி அடியில் பத்திரப்படுத்தினான்.

மறுநாள் காலை பாண்டி போலீஸ்காரர் முகத்தில்தான் விழித்தான். தன்னுடைய பணப் பை முந்திய இரவு காணாமற் போய் விட்டதாகவும் பாண்டியைத் தவிர அந்தச் சமயம் வீட்டில் யாரும் இல்லை என்றும் வையாபுரி புகார் செய்திருந்தார். போலீஸ்காரர்கள் பையைக் கண்டுபிடித்து எடுத்து விட்டார்கள்.

பாண்டிக்கு ஆத்திரம் வந்தது. முதல் நாள் செய்த சத்தியத்தை மறந்து நடந்ததைச் சொன்னான். சப்-இன்ஸ்பெக்டர் பிரம்பால் முழங்காலுக்குக் கீழே இரண்டு கொடுத்

தார். ''ராஸ்கல்! திருடியதும் இல்லாம ஒரு நல்ல மனிதர் மேல் பொல்லாப்பு வேறே சொல்கிறாயா? அதற்காகவாவது நீ கம்பி எண்ணத்தான் வேண்டும்!'' என்றார். ஏழையின் சொல் மாஜிஸ்டிரேட்டின் காதிலும் விழவில்லை. பாண்டி இருபத்து நான்கு மாதங்கள்—எழுநூற்றி முப்பது பகல்களும் இரவுகளும் கம்பி எண்ணத்தான் செய்தான்.

அந்தப் பெரிய மனிதன்தான் இன்று ஏழைகளுக்குத் தானம் செய்கிறான். தாய்க்குலம் கண்ணீர் துடைக்கத் தன் தங்கக் கரம் நீட்டும் வள்ளலாம்! விளம்பரத்தில் அப்படித்தான் போட்டிருந்தார்கள். அவன் மேல் தப்பில்லை. கையேந்தும் மனிதர்கள் இருக்கும்வரையில்தான் கொடுப்பவனுக்கு மதிப்பு. மானம் கெட்ட ஜன்மங்கள்! எலும்புத் துண்டுக்கு ஆசைப்படும் கேவலமான மனிதர்கள்!—பாண்டி காரித் துப்பினான்.

தன் தலையையும் முகத்தையும் மறைத்தாற்போல் கட்டிக்கொண்டு பாண்டி அந்தப் பக்கம் நடந்தான். யாருமே அங்கே அவனை நினைவு வைத்துக் கொண்டு இருக்கமாட்டார்கள். அறிமுகம் ஆனவர்கள் கூடச் சுலபமாக அடையாளம் கண்டு கொள்ள முடியாத அளவு முகம் மாறியிருந்தது. பங்களாவின் முன் வாசலை அடைத்து விட்டார்கள். பங்களாவை ஒட்டிய சிறு சந்தின் வழியாக மக்கள் முண்டி அடித்துக் கொண்டு போய்க் கொண்டிருந்தார்கள். வையாபுரி வீட்டுக் கூர்க்காவும் அவர் ஸ்தாபனங்களில் வேலை பார்த்த சிப்பந்திகளும் தங்களால் ஆன மட்டும் கூட்டத்தைக் கட்டுப்படுத்த முயன்று கொண்டிருந்தனர். அப்படியும் பெண்கள் கூட்டம் மோதியது. சந்துக்குள் இடம் பிடிக்க ஒரே கூப்பாடு.

இந்த வைபவம் நடக்க விடக் கூடாது. வையாபுரியின் முகத்தில் கரியைப் பூச வேண்டும். பாண்டி யோசித்தான். அவனுக்கு ஏறியிருந்த வெறியில் ஒரே யோசனைதான் தோன்றியது. ஓர் ஓரமாக நின்றவன் தன்னால் எவ்வளவு தூரம் முடியுமோ அத்தனை உயர்ந்த சுருதியில், ''ஐயோ! ஐயோ! நல்ல பாம்பு. நல்ல பாம்பு காலில் போட்டுவிட்டு ஓடுகிறது. அதோ! அதோ!'' எனக் கூவினான்.

அவ்வளவுதான். சந்தில் இருந்தவர்கள் வெளியே வரத் துடிக்க, வெளியே நின்றவர்கள் இதுதான் சமயம் என உள்ளே பாய—ஒரே கலாட்டா. பெண்களின் கூச்சல். குழந்தைகள் அலறல்.... ஒருவர் மேல் ஒருவர் விழுந்து கீழே கிடந்தவர்களைக் கவனியாமல் மேலே ஏறிச் சிலர் நடக்க — ஒரே ஓலம்.

பாண்டி கடகடவென்று சிரித்தபடி தன் வீடு நோக்கி நடந்தான்.

வீட்டு வாசலில் ஆயா மட்டும் உட்கார்ந்திருந்தாள். பாண்டியைப் பார்த்துப் பரபரப்புடன் எழுந்தாள்.

''கமலி, செல்லா எங்கே?'' என்று கேட்டான் பாண்டி.

''ஐயா வீட்டிலே புதுத் துணி தராங்க இல்லியா? ஐயாவே கூப்பிட்டு அனுப்பிச்சாங்க...'' என்று அவள் சமாதானம் சொல்லுமுன் பாண்டி புயலெனத் திரும்பினான். வேகமாக ஓடினான்.

எத்தனை மானக்கேடான காரியம்? அந்த அற்பன் முன் இவர்கள் கையேந்தி நிற்பதா? அவர்கள் வரட்டும். அவர்கள் மட்டும் அவன் கைகளில் அகப்படட்டும். என்ன செய்யப் போகிறான் என்று அவனே நிச்சயம் செய்யவில்லை.

வையாபுரியின் வீட்டைச் சுற்றிப் போலீஸ் மயம். அவன் உருவாக்கி விட்டுப் போன நெரிசலில் பலருக்குக் காயம்; சிலர் மாண்டே போனார்கள். மாண்டவர் உடல்கள் வரிசையாகக் கிடத்தப்பட்டிருந்தன. அவைகளைப் பார்த்த பாண்டி அலறினான். நெற்றியில் ஓங்கி ஓங்கி அறைந்து கொண்டான்.

அன்று வையாபுரியின் வெறியிலிருந்து அவனால் பாட்டு வாத்தியாரம்மாளை மீட்க முடிந்தது. ஆனால் அவனுக்கு ஏற்பட்ட வெறியின் விளைவோ? ஈடு செய்ய முடியாதது!



NP சூயிங் கம்கள், பபுள் கம்கள்

படைப்பதிலே முன்னோடிகள்



காலம் எப்படித்தான் பறந்தோடுகிறது. சூயிங் கம்களையும் பபுள் கம்களையும் நாங்கள் தயாரிக்கத் தொடங்கி 35 ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டது. தொடங்கியபோது நாங்கள் தன்னந்தனி—காரணம், இத்-துறையிலேமுதன் முதலில் இறங்கினோம்—முன்னோடியாக. துள்ளியாடிய நேற்றையக் கன்றுகள் ஓங்கி வளர்ந்துள்ளனர் இன்று. அவர்கள் நாவிலே விளையாடிய நயம், இன்று அவர்களின் குழந்தைகளின் நாவிலே விளையாடுகிறது; NP சூயிங் கம்களின், பபுள் கம்களின் சுவை, படைத்த எங்கள் உள்ளம் பரவசம் அடைகிறது. மென்று மகிழும் இன்பத்தை 35 ஆண்டுகளுக்கு மேலாகப் பல ஆயிரம் நாவுகளிலே ஊறவைத்த பூரிப்பு இது. இந்த 35 ஆண்டுகளிலே நாங்களும் வளர்ந்துள்ளோம்-தரத்திலே, அனுபவத்திலே, பல ரகங்களைப் படைப்பதிலே—தலைமை பெற்றுள்ளோம். இன்று எங்கள் இனிப்புக்களின் வரிசை மிகப் பெரிது.

க்ராக்கீஸ் சூயிங் கம்கள்	— பெப்பர்மிண்ட், அன்னாசி, ஆரஞ்சு, டுட்டி ஃப்ருட்டி, சுபாரி சுவையான வகைகள்.
பபுள் கம்கள்	— டபுள் பபுள் கம், 007 பபுள் கம் மற்றும் உருண்டை வடிவ பால் கம்கள் பரவசமூட்டும் பழச் சுவைகளிலே.
பான்பைட்	— இணையில்லாச் சுவையுள்ள க்ரீம் மிட்டாய்கள்.

NP—ஒன்றுதான் ISI தர முத்திரை பதிந்த சூயிங் கம்கள், பபுள் கம்கள்.

IS:6747



சுவைத்து மகிழ ருசிமிக்க வகைகள்

தி நேஷனல் பிராடக்ட்ஸ், பெங்களூர்.

Dattaram NP-3L TAMIL

மணியான பணி!



இவ்வாண்டு சென்னை பல்கலைக் கழகத்தில் கல்வி நிலைவுச் சொற்பொழிவு நிகழ்த்தியவர் கோவை பி. எஸ். ஜி. கலைக் கல்லூரியின் தமிழ்ப் பேராசிரியர் ம. ரா. பொ. குருசாமி அவர்கள். (படம்) டாக்டர் மு. வரதராசனார் அவர்களின் எழுத்தாற்றலைப் பல கோணங்களிலும் திறனாய்வு செய்தார்.

'பல அறக்கட்டளைச் சொற்பொழிவுகளுக்குத் தலைமை தாங்கிய டாக்டர் மு. வ. அவர்களைப் பற்றியே இன்று அறக்கட்டளைச் சொற்பொழிவு நடத்துகிறோம்' என்று பேராசிரியர் ந. சஞ்சீவி தொடக்கவுரையில் கூறிய போது சபையோர் அனைவரது உள்ளமும் நெகிழ்ந்து விட்டது.

திரு குருசாமி டாக்டர் மு. வ. வின் மாணவர்; அதன் பிறகும் அவருடன் நெருங்கிப் பழகியவர். எனவே ஆசிரியர் மு. வ. அவர்களைப் பற்றி முதல் நாள் பேசத் தொடங்கிய போதே அவர் கண்களில் நீர் மல்க உணர்ச்சி வசப்பட்டுப் போனார்.

சாதாரண குமாஸ்தாவாக வாழ்க்கையைத் தொடங்கி, தமிழ் கற்றுப் புலவராகி, கல்லூரித் தமிழ் விரிவுரையாளராகி, பிறகு பேராசிரியராகிச் சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறைத் தலைவராகி, அதன் பின்னர் மதுரைப் பல்கலைக் கழகத் துணைவேந்தராகி, கருத்துக் கருவூலங்களென விளங்கும் பல தமிழ் நூல்களுக்கு ஆசிரியராகிப் பெருவாழ்வு வாழ்ந்த பெருமகன் டாக்டர் மு. வ. அவர்களை அறிந்த யார்தான் அவரை நினைக்கும் தோறும் கலங்காமல் இருக்க முடியும்?

டாக்டர் மு. வ.வைப் பற்றிப் பேசிய திரு குருசாமி அவரை உலகியல், உளவியல், ஆன்மிக இயல் என்று மூன்றாகப் பிரித்துக் கொண்டு ''மு. வ. — முப்பால்'' என்று தலைப்புத் தந்தார்.

''நெஞ்சில் ஒரு முள்'' என்ற ஒரு நாவலின் மூலம் டாக்டரின் நல்லியல்புகளைப் பாத்திரங்களின் வாயிலாகவே எடுத்துச் சொன்னது பாராட்டுக்கு உரியதாக இருந்தது. ''மண் குடிசை'' என்ற மு. வ. வின் கடைசி நாவலும் அவரது மனத்தியல்புகளை எடுத்து விளக்கப் பெரிதும் பயன்பட்டது. மாணவர்களுக்குப் பாடம் சொல்லும்போது அவர்களுக்குத் தாம் சொல்லுவது விளங்குகிறதா என்று கவனிப்பார், மு. வ. ஒரு சமயம், செய்யுள் இலக்கணமான யாப்பெருங்கலக் காரிகையை ஒரு மணி நேரத்தில் உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்குத் தெள்ளத் தெளிய விளக்கினார்..

இப்படி ஓர் ஆசிரியர் இருந்தால் 'தமிழ் இலக்கியங்களைக் கற்பது கடினம்' என்று கூறுபவர்களே இருக்க மாட்டார்கள்.

முதல் இரண்டு நாள் சொற்பொழிவுகளில் மு.வ.வின் உலகியல், உளவியல் கருத்துக்களை அவரது நாவல்களிலிருந்தே மேற்கோள்கள் காட்டி விளக்கிய திரு ம. ரா. பொ. மூன்றும் நாள் மு. வ. வின் ஆன்மிகக் கருத்துக்களை விளக்கினார். இறை வழிபாட்டைப் பெரிதும் மதித்த மு. வ. ஆரவாரமான பூசனைகளை அடியோடு வெறுத்தார். பகுத்தறிவைப் பெரிதும் போற்றிய மு. வ. பகுத்தறிவுக்கும் அப்பாற்பட்ட இறைவனை முழு மனத்தோடு போற்றினார். மனித வாழ்க்கையின் முதலும் முடிவும் கடவுளின் கையில் இருக்கிறது என்பதைப் பூரணமாக நம்பினார்.

இறை வழிபாட்டில் ஆடம்பரமான பூசனையை ஏற்காத மு.வ. மிக உயர்ந்த நிலையைக் குறிக்கும் பூசனையை மேற்கொண்டிருந்தார். ''நெஞ்சகமே கோவில், நினைவே சுகந்தம், அன்பே மஞ்சன நீர், பூசை கொள்ள வாராய் பராபரமே'' என்ற தாயுமான சுவாமிகளின் அருள் வாக்கை இறை வழிபாட்டுக்கு உகந்த உபதேசமாகக் கொண்டிருந்தார்.

இந்தக் கல்வி நிலைவுச் சொற்பொழிவுக்குத் தலைமை வகித்த திரு ம. பொ. சி.யின் முடிவுரை அற்புதமாக இருந்தது. டாக்டர் மு. வ. தம் எழுத்துப் பணியை முதன் முதலில் தொடங்கியது திரு ம. பொ. சி. அவர்கள் நடத்தி வரும் ''தமிழரசு'' பத்திரிகையில் தான்.

டாக்டர் மு. வ. அவர்களின் எழுத்தில், சம்பவக் கோவைகளையும், சொற் சிலம்பங்களையும், சொல்லடுக்குகளையும் காண முடியாது; ஆனால் சொல்லாழத்தையும், சிந்திக்க வைக்கும் சீரிய சிந்தனைக் கருவூலங்களையும் பரவலாகக் காணலாம். அவரது கதாபாத்திரங்கள் அனைவரும், வாழ்க்கை நெறிகளைச் சொல்லாலும் செயலாலும் விளங்க வைப்பார்கள். டாக்டர் மு. வ.வைச் சிறந்த சிந்தனையாளர் என்றும் சிந்தனையாளருள் சிறந்தவர் என்றும் இருவிதமாயும் கூறலாம்.

டாக்டர் மு. வ. அவர்களைப் பற்றியும், அவரது படைப்பிலக்கியங்கள் பற்றியும் குருசாமி ஆற்றியிருக்கும் திறனாய்வுப் பணி மணியான பணி!

—சோமலெ



''சினிமா என்பது ஒரு கலையா அல்லது வியாபாரமா?'' என்று கேட்டபோது ஒரு படாதிபதி சொன்னது இது:

''வெற்றி அடைந்தால் அது வியாபாரம்; தோல்வி அடைந்தால் அது கலை.''

உமன்ஸ் எரா - சரஸ்வதி பதிக

இதென்ன? இவரும் மயக்கம் போட்டு விழுகிறாரே!' என்று பயந்த ரோஸ்னின் உரக்கக் கூவினாள், ''நல்லவேளை, 'நாங்கள் பார்த்தோமோ பிழைத்தானோ? இல்லாவிட்டால் ஒன்றுக்கொன்று ஆகியிருக்கும்!'' என்றாள்.

'பிழைத்தானோ?' என்ற சொல் வேகமாக வேலை செய்ததனாலோ, என்னவோ, அநூப் தலையை ஓர் உதறல் உதறி, ''இப்பொழுது எப்படி இருக்கிறாள்?'' என்று கேட்டான்.

''தெரியாது. டாக்டர் அவளைக் காப்பாற்ற முயன்று கொண்டிருக்கிறார்!''

இதைக் கேட்டதுதான் தாமதம், கூட்டத்தைக் கிழித்துக் கொண்டு அவன் ரூபா இருந்த அறைக்கு ஓடினான். உள்ளே போக முயன்றவனை நர்ஸ் தடுத்து நிறுத்திவிட்டாள். அவன் 'ரூபா' என்று கதறிக் கொண்டே பலவந்தமாக உள்ளே புக முயன்றான். அவன் கூவலைக் கேட்ட ஸிஸ்டர் தெரெஸாவும், டாக்டர் பக்ஷியும் வெளியே வந்தார்கள். அவர்களைப் பார்த்ததும் பிரமை பிடித்தாற் போல் அவன் நின்று விட்டான். ஸிஸ்டர் தெரெஸாவுக்கு அந்த நேரம் அவன் அங்கே வந்தது சிறிதும் பிடிக்கவில்லை.

அவள் முக பாவத்தைக் கண்டே அநூப் இதைப் புரிந்து கொண்டான். ஸிஸ்டர் தெரெஸாவைக் கேளாமல் டாக்டர் பக்ஷியைப் பார்த்து, ''ரூபா, இப்பொழுது எப்படி இருக்கிறாள்?'' என்று கேட்டான்.

'' அபாய நிலையைத் தாண்டிவிட்டதாகத் தோன்றுகிறது!''

'அவளை நான் பார்க்கலாமா?''

''கூடாது. அவளுக்கு ஓய்வு தேவை. யாரும் தொந்தரவு கொடுக்கக் கூடாது'' என்று கடுமையான குரலில் டாக்டர் பக்ஷி கூறினார்.

அவர் சொன்னதைக் கேட்டும் கேளாதவன் போல் அநூப் அங்கேயே நின்றான். உங்களுக்குக் காதில் விழவில்லையா? 'ஷி ஈஸ் நாட் டு பி டிஸ்டர்ப்ட்'!'' என்று டாக்டர் கூறியதையே கூறி விளக்கினாள் ஸிஸ்டர் தெரெஸா.

'' ஸிஸ்டர்! ஒரே ஒரு முறை....'' அநூப் இழுத்தான்.

''நோ. அவளை இந்த நிலைக்கு ஆளாக்கியவரே நீங்கள்தான். உங்களுக்கு இது நன்றாகத் தெரியும்.''

''இருந்தாலும்...''

''இருந்தாலும் இருந்தாலும் இங்கே யாரும் கேட்டுக் கொண்டிருக்கத் தயாராயில்லை.



உங்களுக்கு அவள்மீது உண்மையான அன்பு இருந்தால், இந்தக் கணமே இங்கு விட்டுப் போய் விடுங்கள்! உங்கள் பெயரைக் கேட்டாலே போதும். அவள் உயிரை விட்டுவிடுவாள்!'' என்றாள் ஸிஸ்டர் தெரெஸா, நெஞ்சில் சிறிதும் ஈவு இரக்கம் இன்றி. பிறகு ரூபாவின் அறைக்குள் நுழைந்துவிட்டாள். போகும் பொழுது நர்ஸுக்கு ஏதோ சமிக்ஞை செய்தாள். அடுத்த கணம் வாசற்படியில் தொங்கிக் கொண்டிருந்த திரை விழுந்தது.

திரை விழுந்ததைக் கண்ட அநூப்புக்குத் தன் வாழ்க்கையே கும்மிருட்டு ஆகிவிட்டது போலத் தோன்றியது. கண்களைக் கசக்கி விட்டுக்கொண்டு திரையை நோக்கினான்.

ரூபா இவ்வுலகை வெறுத்தாள். 'நன்' ஆகிவிடுவது என்ற முடிவுக்கு வந்தாள். ஸிம்லாவிலிருந்து நூற்றுக்கணக்கான மைல்களைக் கடந்து தென் இந்தியாவில் உள்ள ஒரு சிறு நகரத்தில் அவள் பயிற்சி பெறப் போவது என்று தீர்மானமாயிற்று. விடுவிக்க முடியாத வாழ்க்கைச் சிக்கல்களிலிருந்து விடுபெற வேண்டுமானால் இதுவே சரியான வழி என்று ஸிஸ்டர் தெரெஸாவும் ஆலோசனை கூறியிருந்தாள். அதன் பேரிலேயே அவள் அந்த முடிவுக்கு வந்திருந்தாள்.

அன்று அவள் புறப்படுவதாயிருந்தது. பல ஆண்டுகளாகப் பழகிய தொடர்பு, தன் காதல் நினைவுகள், வாழ்க்கைத் தோழமைகள் எல்லாவற்றையும் விட்டுவிட்டு அவள் வெகு தொலைவுக்குப் போய்க் கொண்டிருந்தாள். மக்களது துயரங்களையும் துன்பங்களையும் புரிந்து கொள்வதற்காக அவள் தன் துன்பங்களையும் துயரங்களையும் மறக்கவேண்டியிருந்தது. இப்படி ஒரு யோசனையில் திளைத்து அவள் தன் மனத்துக்கு ஒரு துணிவையும் ஆறுதலையும் தேடிக் கொண்டாள்.

புறப்படுவதற்கு முன்னால் வழிபாடு நடத்துவதற்காக அவள் சர்ச்சுக்குச் சென்றாள். தான் மேற்கொண்டிருக்கும் புதிய சாதனையில் தனக்கு வெற்றி கிட்ட வேண்டும் என்று ஆண்டவனிடம் வேண்டுகோள் விடுத்தாள்.


தன் வழிபாட்டை முடித்துக் கொண்டு வெளியே வந்தவள் கால்கா செல்லும் மினி பஸ் நிற்கும் இடத்துக்கு வந்தாள். மிஷினரியைச் சேர்ந்த வேறு சிலரும் அதில் அமர்ந்திருந்தனர்.



தமிழாக்கம்: ரா. வீழிநாதன்

மதர் சுபீரியர், ஸிஸ்டர் தெரெஸா, தனது தோழிகள் எல்லோரிடமும் பிரியாவிடை பெற்றுக் கொண்ட ரூபா கடைசி முறையாகக் கல்லூரிக் கட்டடத்தின் மீது தன் பார்வையை ஓட்டினாள். அவளுடைய வாழ்க்கையின் எத்தனை ஆண்டுகள் இங்கே இன்பமாகக் கழிந்தன? நினைத்துப் பார்த்தபொழுது அவள் விழிகளில் நீர் திரையிட்டது.





தலைகீழ்ப் பாடம்

நாற்பத்தேழாவது நாளாக அந்த ஓவியக் கண்காட்சி நடந்து கொண்டிருந்தது: ஒரு தவறை மட்டும் யாரும் கவனிக்கவே இல்லை. அது: ஓர் ஓவியம் இத்தனை நாட்களாகத் தலைகீழாகத் தொங்க விடப்பட்டிருந்ததுதான்! நியூயார்க்கில் நடந்த அந்த மாடர்ன் ஆர்ட் ஓவியக் கண்காட்சியில், குறிப்பிட்ட ஓவியரே வந்து திருத்தியபோதுதான் படம் நேராக மாட்டப்பட்டது. அடுத்த மூன்று நாட்களுக்குள் கண்காட்சியும் முடிந்து விட்டது. - பியூட்டிஃபுல்-முத்து

பஸ்ஸில் உட்காருவதற்கு முன்னால் அவள் ஸிஸ்டர் தெரெஸாவுக்கு நன்றி கூறினாள். அப்பொழுது அவளால் தன் உணர்ச்சிகளை அடக்கிக் கொள்ள முடியாமற் போகவே, நெகிழ்ந்து போய் ஸிஸ்டர் தெரெஸாவை ஆரத் தழுவிக் கொண்டு விசிக்கலானாள். ஸிஸ்டர் தெரெஸாவினாலும் பெருகி வந்த தன் கண்ணீருக்கு அணை போட முடியவில்லை. இருவருடைய கண்ணீரும் சங்கமித்து அந்தச் சூழ்நிலையையே கசிந்து உருகச் செய்தன.

இதே நேரத்தில் கார் வரும் ஒலி ஒன்று எல்லோருடைய கவனத்தையும் கவர்ந்தது. ரூபாவும் ஸிஸ்டர் தெரெஸாவும் அணைப்பிலிருந்து விலகிக் காரைப் பார்த்தனர்.

காரிலிருந்து இறங்கிய அநூப்பைக் கண்டதும் அங்கு கூடியிருந்த அனைவரும் கலகலத்து விட்டனர். ரூபாவின் இதயத் துடிப்போ பன்மடங்கு வலுத்துவிட்டது. அவள் அநூப்பைக் கண்டதும் பதறிப் போனாள். அந்தப் பதற்றத்திலிருந்து விடுபட அவள் ஸிஸ்டர் தெரெஸாவை நோக்கினாள். அவளுமே கதி கலங்கி நின்று கொண்டிருந்தாள்.

அநூப்போடு அவன் நண்பன் பிரபுவும் வந்திருந்தான். இந்தப் புதிய நிலையை எப்படிச் சமாளிப்பது, எப்படி எதிர்கொள்வது? ரூபாவினால் சட்டென்று தன் யோசனைக்கு முடிவு காண முடியவில்லை. ஆயினும் சடுதியில் ஒரு முடிவுக்கு வந்தாள். அவளை ஏற்றிச் செல்லக் காத்திருந்த பஸ்ஸை நோக்கி நடந்தாள். அநூப் பாய்ந்து வந்து அவள் வழியை மறித்துக் கொண்டான். ''எங்கே போகிறாய்?'' என்றான் அதட்டாத குறையாக.

''இங்கிருந்து வெகு தொலைவுக்கு!''

''இந்தத் திடீர் முடிவு எதற்காக?''

''வெகு காலம் முன்பே செய்திருக்க வேண்டிய முடிவு இது!'' குரலில் உறுதி ஏற்றிக் கூறினாள் ரூபா.

''என்றாலும் இந்த முடிவை நீ மாற்றிக் கொண்டே ஆகவேண்டும்!''

''முடியாத காரியத்தைப் பற்றிப் பேசிப் பயன்?''

''முடியாத காரியம் என்று பசப்பிப் பயன் இல்லை. நீ இந்த முடிவை மாற்றிக்கொண்டு தான் ஆகவேண்டும், எனக்காக! என் காதல் மீது ஆணை!'' என்றான் அநூப்.

ரூபா அநூப்பைப் பார்த்தாள். அநூப்பும் அவளைப் பார்த்தான். இருவருடைய பார்வைகளும் மோதி ஆழம் காண முடியாத உள்ளத்தின் அடித்தளம்வரையில் சென்றன.

''நான் நான்கு நாட்களாக விடாமல் இங்கு வந்து கொண்டிருக்கிறேன் என்பது உனக்குத் தெரியுமா? தெரிய நியாயம் இல்லை. ஏனென்றால் உன்னுடைய ஸிஸ்டர் தெரெஸா நம்மைச் சந்திக்கவே விடவில்லை. என் வேண்டுகோள்களையும் கெஞ்சுதல்களையும் நிராகரித்து விட்டாள். ஒருவேளை நமது காதலுக்குப் பகையாகி விட்டாளோ என்னவோ? ஒரு காலத்தில் நம் காதல் வேர்விட நீர் ஊற்றி வந்தவள், இன்று அதை வேரோடு கெல்லி எறியத் துணிந்து விட்டாள்!''

''அவரைக் குறை கூறுகிறீர்கள். நான்தான் அவரைத் தடுத்து விட்டேன்!''

''ஏன் ரூபா?''

''நாம் இருவரும் சுலபமாக, சிக்கலின்றி விலகிவிட வேண்டும் என்பதற்காக.''

''இதுதான் உன் கடைசி முடிவா?'' கேட்கும்போது அநூப்பின் குரல் கனத்தது.

''ஆமாம். நான் 'நன்'னாக — கன்னிகாப் பெண்ணாகப் போவது என்று முடிவு செய்து விட்டேன்!''

''அப்படியா? அப்பொழுது என் முடிவையும் கேட்டுக்கொள்!'' என்று கூறிய வண்ணம் அநூப் அவளை நெருங்கி வந்தான். ''நானும் உன்னை என்னுடையவளாக்கிக் கொண்ட பிறகே மறுகாரியம் என்று முடிவு செய்து விட்டேன். அதுவும் இன்றைக்கே, இப்போதே!''

''உங்களுக்கு என்ன வந்து விட்டது?''

''வெறி வந்து விட்டது. அந்த வெறியில் உனக்காக நான் வாழ்க்கைத் தளைகள் அத்தனையையும் அறுத்தெறிந்துவிட்டு வந்து விட்டேன். என் அக்காளையேகூடத் துறந்து விட்டேன்! நீதான் எனக்கு அனைத்தும். நீ இல்லாமல் நான் இல்லை.''

''நீங்கள் செய்வது துளிக்கூட நன்றாயில்லை!'' ரூபா குரல் நடுங்கக் கூறிவிட்டுத் திரும்பிக் கூடியிருந்தோரைப் பார்த்தாள். அத்தனை பேருடைய பார்வையும் அவள் மீதே லயித்திருந்தன.

ஸிஸ்டர் தெரெஸா துணிந்து அவர்களுக்கு அருகில் வந்தாள். ரூபா சட்டென்று ஸிஸ்டர் தெரெஸாவின் கையைப் பற்றிக் கொண்டு பஸ்ஸின் நுழைவாயிலை நோக்கி நடந்தாள். அநூப் அவள் கையைப் பற்றி இழுத்து, உரத்த குரலில் கிரீச்சிட்டு, ''நில், ரூபா! இன்று உலகமே எதிர்த்து நின்றாலும் அதனுடன் பொருதியே தீருவது என்ற முடிவோடு வந்திருக்கிறேன்! யார் சொன்னாலும் என் காதில் ஏறாது!'' என்றான்.

''நான் ஆதரவற்ற ஓர் அபலை! என் இயலாமையோடு விளையாடாதீர்கள், அநூப்!''

''ஆம், அநூப்! இனி அவள் பாதையில் முள்ளைப் பரப்பாதே! அவளை அவள் இஷ்டத்துக்கு விட்டுவிடு!'' ஸிஸ்டர் தெரெஸா அவனைச் சமாதானப்படுத்த முயன்றாள்.

''நான் முள்ளைப் பரப்பவில்லை; மலரைப் பரப்ப வந்திருக்கிறேன், ஸிஸ்டர்! இவளைத் திருமணம் செய்து கொள்ளப் போகிறேன்!''

''ஆனால் அது நடக்காத காரியம். சமுதாய தர்மம் இவனுக்கு எதிரியாகிவிடும்!''

''ஆண்டவன் உண்மையான அன்புக்கு ஒருநாளும் பகைவனாக மாட்டான். அன்பே

தென்னிந்திய பஜனை சமாஜம்

(ரிஜிஸ்டர்டு)

"வேத பவன்"

50, லேக் அவின்யூ, கல்கத்தா - 26

▫▫▫

'ஸ்ரீ ராமநவமி மஹோத்ஸவம்'

7-4-1976 முதல் 10-4-1976 வரை

கல்கத்தா,
ராஜா பஸந்தராய் ரோடிலுள்ள
ஸ்ரீ. தியாகராஜா ஹாலில்

உபந்யாசங்கள், விசேஷ கச்சேரிகள், பஜனைகள் நடைபெறும். பக்தர்கள் அனைவரும் ஸ்ரீ ராமநவமி வைபவத்தில் கலந்து கொண்டு ஸ்ரீ ராமபிரானது அருளுக்குப் பாத்திரராகுமாறு கோருவதுடன், தங்களால் இயன்ற பொருளுதவியை இத் தெய்வீகக் கைங்கரியத்துக்குக் கொடுத்துதவுமாறு கோரப்படுகிறார்கள்.



மணமகன்: R. இலக்குமி நாராயணன்
மணமகள்: செல்வம் என்கிற
M. V. ராஜலட்சுமி (Niece of late Dr. Srihari) இவர்கள் திருமணம் 11-2-76 அன்று திருச்சானூரில் சிறப்பாக நடைபெற்றது.

வாழ்க மணமக்கள்

தெய்வம். தெய்வமே அன்பு. கேள்விப்பட்டதில்லையா?''

''வழி விடுங்கள்! என்னை இப்படித் தடுக்க உங்களுக்கு உரிமை கிடையாது. விருப்பமில்லாத என்னை வற்புறுத்த நீங்கள் யார்?'' என்று ரூபா கடுஞ் சொற்களைக் கொப்பளித்தாள்.

ரூபாவின் போக்கில் பெரும் மாற்றத்தைக் கண்டான் அநூப். இவள் இப்படி எப்படி மாறினாள்? இந்த விரக்தியும் வெறுப்பும் இவளை எப்படிப் பிடித்தன? அவனால் நினைத்துப் பார்க்கவே முடியவில்லை. அவன் மனம் மிகவும் புண்பட்டுப் போயிற்று. திரும்பிப் பார்த்தான். அங்கு கூடியிருந்தவர்கள் அனைவரும் அவனை நெருங்கி வந்து கொண்டிருந்தார்கள். எதற்காக? பெண்ணிடம் இரக்கம் காட்டுவதற்காக; அவனிடமிருந்து அவளை விடுவிப்பதற்காக. ஆனாலும் அவன் துணிவை இழக்கவில்லை. ஓர் உத்வேகத்தோடு முன்னேறி ரூபாவின் தோள்களின் மீது கை வைத்தான். அவள் எரிந்து விழுந்தாள். அவன் பிடி தளரவில்லை; இறுகிற்று.

''ரூபா! 'விருப்பமில்லாத என்னை வற்புறுத்த நீங்கள் யார்?' என்று கேட்டாயே! உன்மீது எனக்கு உரிமை இல்லை என்று நீ கூறுவது உண்மையானால் இத்தனை பேருக்கும் எதிரே நீ என்னைக் காதலிக்கவில்லை என்று கை அடித்துக் கூறு!'' என்றவன் அவளுடைய விழிகளோடு தன் விழிகளை மோத விட்டுத் தொடர்ந்தான்: ''ஆண்டவன், ஆண்டவன் என்கிறாயே, அந்த ஆண்டவனை இன்று சாட்சிக்கு அழைத்து, இந்தப் பள்ளத்தாக்கிலே உருவாகி, இந்த அருவி நீரிலே குளித்து வளர்ந்த நம் காதல் பொய் என்று மறுத்து விடு. உன் உள்ளத் துடிப்பிலே என் நினைவுகளுக்கு நீ சிறிதும் இடம் தரவில்லை என்று ஆணையிட்டுக் கூறிவிடு! இத்தனை பேருக்கும் எதிரில் நீ மறுத்தால் நான் உன்னை மறந்துவிட முயல்கிறேன்!''

''இல்லை, அநூப்! நான் உங்களுக்குத் தகுந்தவள் அல்ல!'' உள்ளம் துடிக்க, இதயம் வெடிக்கக் கூறிய ரூபா, அந்தக் கும்பலிலிருந்து விலகி ஓட முயன்றாள். காயமுற்ற பறவை இறக்கைப் படபடக்கத் துடிக்குமே, அப்படித் துடிதுடித்துக் கொண்டு ஓட முயன்ற அவளை அநூப் மீண்டும் பிடித்துக் கொண்டான். ''உன்னைப் பற்றி எனக்கு எல்லாம் தெரியும், ரூபா! எல்லை மீறிய அன்பே உன்னை இப்படிப் பேச வைக்கிறது!'' என்றான்.

பிறகு தன் முழு பலத்தையும் பயன்படுத்தி அவளைத் தன் காருக்கு இழுத்தான். அவள் அவனுடைய இழுப்புக்கு வராமற் போகவே, அப்படியே அலக்காகத் தூக்கி அவளைத் தன் காருக்குள் போட்டுக் கொண்டான். அதைக் கண்ட ஸிஸ்டர் தெரெஸாவும், கல்லூரியைச் சேர்ந்த மற்றவர்களும் விக்கித்துப் போயினர். ஸிஸ்டர் தெரெஸா உதவிக்குக் குரல் கொடுத்தவாறே காரை நோக்கி விரைந்தாள். ஆனால் கல்லூரி மாணவிகள் யாருமே அவள் உதவிக்கு வரவில்லை. அவர்களுடைய உதடுகளில் மகிழ்ச்சி தாண்டவமாடியது. உண்மை அன்புக்குக் குறுக்கே நிற்க அவர்களுக்கு என்ன, பைத்தியமா?

நெருக்கடி நிலைமைப் பிரகடனம் இன்றியே....!



இத்தாலியில் ஒரு கட்டட நிபுணரிடம் வேலை பார்க்கும் ஊழியர் விசித்திரமான வழக்குப் போட்டிருக்கிறார்.

''நான் செய்யும் மிகக் குறைந்த வேலைக்கு மிக அதிகமாகச் சம்பளம் கொடுக்கிறார்கள். எனக்கு இன்னும் வேலை கொடுக்க வேண்டும்'' என்பது தான் அவர் போட்டுள்ள வழக்கு. வி.ந. ஸ்ரீதரன்

ஸிஸ்டர் தெரெஸா அதைக் கண்டு கோபமுற்றாள். அவள் கோபம் தங்களை என்ன செய்துவிடும் என்பது போல் அவர்கள் நிற்கவே, அவள் காரை நோக்கி முன்னேறினாள்.

இதற்கு முன்பே கார் ஸ்டார்ட் ஆகியிருந்தது. ஸிஸ்டர் தெரெஸா உரக்க ரூபாவுக்குக் குரல் கொடுத்தாள். ஆனால் பிரபு அவளைத் தடுத்து, ''பயப்படாதீர்கள், ஸிஸ்டர்! அநூப் நல்ல பையன்! சாதுப் பையன்! உங்கள் மகளைப் பூப்போல் வைத்துக் கொள்வான்!'' என்றான்:

''ஓ... யூ ஷட் அப்!'' என்று சீறியவாறு காரைப் பார்த்தாள். அது வேகம் பிடித்திருந்தது. அவள் கையைப் பிசைந்துகொண்டு நின்றாள். பிரபு பாய்ந்து ஓடும் காரில் ஏறிக் கொண்டான். ஸிஸ்டர் தெரெஸா ஏமாற்றத்தோடு கல்லூரி மாணவிகளைப் பார்த்தாள். அவர்கள் மகிழ்ச்சியோடு கை அசைத்து ரூபாவுக்கு விடை அளித்துக் கொண்டிருந்தார்கள். அவர்களோடு மதர் கபீரியலும் சேர்ந்து கொண்டிருந்தாள்!

அந்தக் கும்பலிலிருந்து விலகிச் சிறிது தொலைவில் தேவதாரு மரத் தோப்பில் ஒரு மரத்தின் அடியில் சாரதாவும் க்ஷமாவும் நின்றுகொண்டு இந்த வேடிக்கையைப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். அவர்களுடைய இமையோரங்களில் நம்பிக்கையும் மகிழ்ச்சியும் போட்டி போட்டுக் கொண்டு நீரோட்டம் மிகுந்த முத்தெனத் தோன்றின.

''சரி! மாப்பிள்ளை வந்தானா?'' என்று கேட்டாள் சாரதா.

''உனக்கு மருமகள் வந்தாளா?'' என்று திருப்பிக் கேட்டாள் க்ஷமா.

இப்படி ஒருவரை யொருவர் கேட்கும் பொழுதே இருவருடைய கண்களும் நீரை உதிர்த்தன. இதுதான் ஆனந்தபாஷ்பமோ?

எத்தனையோ ஆண்டுகளுக்குப் பின் அன்று சாரதா அழுதாள். அவளுடைய உணர்ச்சிகள் அனைத்தும் கரைந்து விட்டன. அன்று அவள் தனது கொள்கைகள் அனைத்தையும் தகர்த்தெறிந்துவிட்டு அநூப்பை அன்பால் வெற்றிகொள்ள வந்திருந்தாள். ஆனால் அநூப் அவளை முந்திக்கொண்டு தன் அன்புக்கு வெற்றி தேடிக்கொண்டு விட்டான்!

(முற்றும்)

ஒரு நாள்



காலை ஆறு அல்லது ஆறரை மணிக்கு மேல் தூங்கினால் தொழில் வர்த்தகத் துறைகளில் ஈடுபட்டுள்ள ஓர் ஆசாமிக்குக் கட்டுப்படியாகாது. ஒவ்வொரு நிமிஷத்தையும் உபயோகமாகவும், ஆக்கபூர்வமாகவும் செலவழிக்க வேண்டும் என்பதை நான் என் தந்தை, ஸ்ரீ டி. டி. கிருஷ்ணமாச்சாரி அவர்களிடம் கற்றுக் கொண்டிருக்கிறேன்.

டி.டி.வாசு.

எழுந்து ஸ்நானம் செய்தவுடன் ஆலய வழிபாடு உண்டு. இதற்காக நான் வெளியே போக வேண்டிய அவசியம் இல்லை. என் வர்த்தகக் காரியாலயங்களும், இருப்பிடமும் இருக்கும் காம்பவுண்டுக்குள்ளேயே, இரண்டுக்கும் இடையே சமீப காலமாகச் சில ஆலயங்களை உருவாக்கி அவைகளில் முறையான பூஜை ஏற்பாடுகளும் செய்திருக்கிறேன். அபிஷேகம், அர்ச்சனை எல்லாம் உண்டு.

தியானத்தை முடித்துக் கொண்டு என் அறைக்குள் வந்து அமர்ந்து ஒரு கப் ஹார்லிக்ஸ் மாத்திரம் சாப்பிடுகிறேன். காலை ஆகாரம் அவ்வளவுதான். உடனே என் கண்கள் பத்திரிகைகளைத் தேடுகின்றன.

ஒரு தொழிலதிபர் என்ற முறையில் இல்லை! ஒரு மாஜி பத்திரிகை உதவி ஆசிரியர் என்ற முறையில் !

சென்னை லயோலா கல்லூரியில் படிப்பை முடித்து வெளிவந்தவுடனேயே 'நீங்களும் திரைப்படங்களும்' (You and the movies) என்ற பெயருடன் ஒரு திரை உலக சம்பந்தமான பத்திரிகையை ஆரம்பித்து நடத்தத் தொடங்கினேன். அதை விரிவுபடுத்தவும் திட்டம் போட்டேன். ஆனால் அது ஏனோ ஒத்து வரவில்லை. பேசாமல் தில்லிக்குக் கிளம்பிப் போய் 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகையின் தில்லிப் பதிப்பு நிறுவனத்தில் உதவி ஆசிரியராகச் சேர்ந்துவிட்டேன். சில ஆண்டுகளில் அந்தப் பணியையும் நன்றாகச் செய்யக் கற்றுக் கொண்டேன்.

அப்போது என் தந்தையும் தில்லியில்தான் இருந்தார். ஆனால் நான், ஸ்ரீ டி. டி. கே.யின் மகன் என்று கடைசி ஆறு மாதங்களுக்கு முன்னால் வரை யாருக்கும் தெரியாது. என் உறவினர் ஒருவர் வீட்டில் தங்கியிருந்தேன்.

பத்திரிகையை மடித்து வைத்தும் மனத்தில் ஒரு கனமான சிந்தனை ஓட ஆரம்பிக்கிறது. அது என் தொழிற்சாலை ஒன்றின் திட்டம் சம்பந்தப்பட்டது. அதற்கு ஒரு சிக்கலை விலக்கி முடிவு காண வேண்டும். அவசர விஷயம்!

வராந்தாவிலுள்ள, ஜிக் — ஸா பஸில் (Jig Saw Puzzle) மேஜையின் பக்கத்தில் போய் அமர்கிறேன். மாளிகை ஒன்றின் படத்தை இரண்டாயிரம் துண்டுகளாக வெட்டியிருக்கிறது. அவற்றைச் சரியாக இணைத்துப் படத்தை முழுமையாக அமைக்க வேண்டும். இதைச் செய்யும்போது உற்சாகம் தோன்றும். அது மனத்தில் உள்ள 'டென்ஷனை'க் குறைத்துப் பிரச்னைகளை அமைதியாக அலசிப் பார்க்க உதவும்.

காலை ஒன்பது மணிக்குக் காரியாலயத்துக்குக் கிளம்புகிறேன். ஒரு நிமிட நடை ! அவ்வளவுதான்!

காரியாலயத்தில் பாதி நேரத்துக்கு மேலாகப் பொதுஜனத் தொடர்புப் பணியிலேயே கழிந்து விடுகிறது.

மாதத்தில் பாதி நாள் வெளியூர்களில் பிரயாணம் செய்து கொண்டிருப்பவனாதலால் பாக்கி நாட்களில் நேரில் சந்திக்க வருபவர்கள் எண்ணிக்கை அதிகமாகத்தான் இருக்கும்.

ஏறத்தாழ நான்கு மணி நேரம் ஓடினதே தெரியவில்லை. நான் பகல் சாப்பாட்டுக்காக எழுந்திருக்கும்போது மணி ஒன்று. வீட்டுக்கு வருகிறேன்.

அயல்நாடுகளுக்கு அடிக்கடி போகிறவன் ஆனாலும் ஆகார விஷயத்தில் நான் சைவம்.

சாப்பாட்டை முடித்துக் கொண்டு சற்று ஓய்வு எடுத்துக் கொள்கிறேன். பிற்பகல் இரண்டரை மணிக்கு மீண்டும் காரியாலயத்துக்குக் கிளம்புகிறேன்.

வழியிலேயே ஒரு விஷயம் நினைவுக்கு வருகிறது. முதல் நாள், என் சொந்த வாசகசாலையில் சில புத்தகங்கள், பார்வைக்குப் பிறகு அதன் அதன் இடத்துக்குப் போகாமல் மேஜையின் மீதே கிடக்கின்றன. அவற்றைச் சரியாக வைத்துவிட்டுப் போகலாம் என்ற எண்ணத்தில், சட்டைப் பையிலிருந்து அந்த வாசகசாலையின் சாவியைக் கையில் எடுத்துக் கொள்ளுகிறேன்.

இந்த வாசகசாலை அறையும் என் காரியாலயத்தை ஒட்டியே இருக்கிறது. என் தகப்ப

படம்: ஜிக் - ஸா புதிர் மேஜைக்கருகே ஸ்ரீ டி. டி. வாசு குடும்பம். குடும்பத்தலைவி ஸ்விட்ஸர்லாந்து நாட்டில் பிறந்து வளர்ந்தவர்.



சென்னை அசோக் லேலண்ட் தொழிலகத்தில் சமீபத்தில் நடந்த ஒரு பயிற்சி வகுப்பில் கொடுக்கப் பட்ட கேள்வித்தாள்:

உத்தரவுகளை நிறைவேற்ற முடியுமா?

நேரம்: மூன்று நிமிடங்கள்.

1. எதையும் செய்வதற்கு முன்னால் எல்லாவற் றையும் நன்றாகப் படியுங்கள்.
2. இந்தத் தாளின் வலது மேல் கோடியில் உங்கள் பெயரை எழுதுங்கள்.
3. முந்தின வாக்கியத்தில் உள்ள 'பெயரை' என்ற வார்த்தையைச் சுற்றி ஒரு வட்டம் போடுங்கள்.
4. இந்தத் தாளின் இடது மேல் கோடியில் ஐந்து சதுரங்களைப் போடுங்கள்.
5. அந்த ஒவ்வொரு சதுரத்திலும் x குறியிடுங்கள்.
6. ஒவ்வொரு சதுரத்தைச் சுற்றிலும் வட்டம் போடுங்கள்.
7. இந்தக் கேள்வித் தாளின் தலைப்புக்குக் கீழே உங்கள் கையெழுத்தைப் போடுங்கள்.
8. அந்தத் தலைப்புக்குப் பக்கத்தில் Yes, Yes, Yes என்று எழுதுங்கள்.
9. இந்தத் தாளின் வலது கீழ்க் கோடியில் x குறியிடுங்கள்.
10. அப்படிப் போட்ட குறியை மூடினாற்போல் ஒரு முக்கோணம் வரையுங்கள்.
11. இந்தத் தாளின் பின்புறத்தில் 70ஐ முப்பதால் பெருக்கி விடையை எழுதுங்கள்.
12. நாலாவது வாக்கியத்தில் உள்ள 'தாளின்' என்ற வார்த்தையைச் சுற்றி ஒரு வட்டம் போடுங்கள்.
13. இந்த உத்தரவுக்கு வந்து விட்டீர்களானால் உங்கள் பெயரை உரத்த குரலில் சொல் லுங்கள்.
14. எல்லா உத்தரவுகளையும் சரியாகப் பின்பற்றி நிறைவேற்றியதாகக் கருதினால், ''நான் நிறை வேற்றிவிட்டேன்'' என்று உரத்த குரலில் சொல்லுங்கள்.
15. தாளின் பின்பக்கத்தில் பெருக்கியுள்ள தொகை யோடு 107ஐயும் 278ஐயும் தனித்தனியாகக் கூட்டுங்கள்.
16. அந்தக் கணக்கு விடையைச் சுற்றி வட்டம் போடுங்கள்.
17. ஒன்றிலிருந்து பத்துவரை சராசரி நேர இடை வெளியில் எண்ணுங்கள்.
18. இவ்வளவு தூரம் நீங்கள் சீக்கிரமாக முடித்து விட்டால் ''உத்தரவுகளை, நிறைவேற்றுவதில் நானே முதல்'' என்று சத்தமாகச் சொல் லுங்கள்.
19. எல்லாவற்றையும் கவனமாகப் படித்துவிட் டீர்கள் அல்லவா? இப்போது முதல் இரண்டு உத்தரவுகளை மட்டும் நிறைவேற்றுங்கள்!

அனுப்பியவர்: பயிற்சியில் பங்கு கொண்ட ரா. முத்துசாமி.

பயிற்சி நடத்தியவர்: திரு ஆர். தேவராஜன், வேலை வாய்ப்பு, பயிற்சி, மற்றும் பாதுகாப்பு அதிகாரி, டன்லப், அம்பத்தூர்.

ஞர், விவேகானந்தா கல்லூரிக்கு வாரி வழங் கிய புத்தகச் செல்வங்கள் போக மிஞ்சியதை நான் தொகுத்துத் தனியாக அந்த அறையில் என் தகப்பனாரின் ருசிக்கிணங்கப் பராமரித்து வைத்திருக்கிறேன்.

அன்றைய அலுவல்களை முடித்துக்கொண்டு ஒரு கப் காப்பி சாப்பிட்டுவிட்டுக் காரியா லயத்திலிருந்து டென்னிஸ் ஆட ஐந்து மணி சுமாருக்குக் கிளம்புகிறேன். வாரத்தில் மூன்று நாட்களாவது குறைந்தபட்சம் ஆடு வேன். ஆட்டம் முடிந்து நண்பர்களுடன் அளவளாவிவிட்டு வீடு திரும்பும்போது மணி ஏழு. கர்நாடக சங்கீதம் சொல்லிக் கொடுக் கும் ஆசிரியர் வந்து காத்திருக்கிறார். ஆம்! எனக்குத்தான்.

வாரத்தில் இரண்டு , அல்லது மூன்று நாட்கள் கர்நாடக இசை பயிலுகிறேன். அரை மணி நேரம். குருப் பெயர்ச்சியை முன் விட்டு, வாசுதேவாச்சாரியாரின் பிம்பளாஸ் ராக கீர்த்தனையில் ஒரு பகுதியை எனக்குச் சொல்லிக் கொடுத்துவிட்டு அவர் ஏழே முக்கால் மணிக்கு விடைபெறுகிறார்.

வாசலில் கார் வந்து நிற்கும் சத்தம் கேட் கிறது. ஏதோ குழந்தைகளின் நடன நிகழ்ச் சிக்குப் போயிருந்த என் மனைவி பாதியில் கிளம்பி வந்திருக்கிறாள்.

அந்தக் குழந்தைகளுக்கு நிகழ்ச்சி முடிவில் ஏதாவது பரிசு அளிக்க வேண்டும் என்று அவ ளுக்குத் தோன்றி இருக்கிறது. என்னையும் கலந்து கொண்டு அந்தப் பரிசை வாங்க நினைத்து இடையே கிளம்பி வந்திருக்கிறாள்.

அவளைத் திரும்ப அழைத்துக் கொண்டு போய் வழியில் பரிசுப் பொருளையும் வாங்கிக் கொடுத்து, நிகழ்ச்சி முடிந்த பின்னால் திரும்பு கிறேன்.

இரண்டு மூன்று டெலிபோன் கால்கள் வந்ததாக உதவியாளர் கூறுகிறார். அப் போது மீண்டும் டெலிபோன் மணி ஒலிக் கிறது. எடுத்துப் பேசுகிறேன். சமீபத்தில் நான் இண்டோ அமெரிக்கன் சேம்பர் ஆஃப் காமெர்ஸுக்குத் தலைவராகத் தேர்ந்தெடுக் கப்பட்டதற்காக மறுமுனையில் இருக்கும் நண்பர் பாராட்டுகிறார்.

இரவு நேர ஆகாரமும் எனக்கு 'லைட்' தான். சப்பாத்தியையோ, பூரியையோ சாப் பிட்டுவிட்டு, கையில் ஓர் ஆங்கில நவீனத்தை எடுத்துக் கொள்கிறேன். படுக்கப் போகுமுன் ஏதாவது கனமான புத்தகத்தை நான் தேர்ந் தெடுப்பதில்லை. கனமான தொழில் வர்த்தக சிந்தனைகளிலிருந்து சற்று * விடுபடத்தானே நான் விரும்புகிறேன்?

திடீரென்று இன்று சனிக்கிழமை என்ற நினைவு வருகிறது. கூடவே பெருமூச்சும் வரு கிறது. முன்பெல்லாம் ஞாயிற்றுக்கிழமை என்பதை ஒரு மகிழ்ச்சிகரமான நாளாக நினைப்பேன். அன்று தாம்பரம் போய் அங்கு வசித்து வந்த என் தந்தையைப் பார்த்துப் பேசிவிட்டு வருவேன்! இப்போது அந்த மகிழ்ச்சிக்கு இடமே இல்லை!

சிந்தனைகள் ஏதேதோ பழைய நினைவுகளில் படர்கின்றன. சற்று நேரத்தில் புத்தகம் விரல்களின் பிடிப்பிலிருந்து நழுவுவதுபோன்ற உணர்ச்சி. . . .


கேட்டு எழுதியவர்: கோமதி சுவாமிநாதன்


அன்றும் இன்றும் சிலருக்கு
அதே இளந்தளிர் மேனி!
PEARS
TRANSPARENT
SOAP
பியர்ஸ்—அசல் கிளிசரின் சோப்
கனிவான பியர்ஸ் சோப்பினால் காத்திடுவீர்
உங்கள் மேனி மெருகை. மாணிக்கப் படிகம்போல்
மிளிரும் ஒவ்வொரு வில்லையிலும் ஒரு நூற்றாண்டு
கால சோப்-உற்பத்தி அனுபவம் உள்ளிறங்கியுள்ளது.
பிஞ்சு மென்மை கொஞ்சும் பியர்ஸ்—தூய்மைக்
கொழுந்து—கண்கூடாக நீங்கள் ஊடுருவிப்
பார்க்கக்கூடிய உன்னதத் தூய்மை.
பியர்ஸ் சருமக் களை...
கன்னிப் பருவக் களை



Printed and published by V. Vaidyanathan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-600 031.
Managing Editor: T. Sadasivam. Associate Editor: K. Rajendran.

பிரவுன் & போல்ஸன் கஸ்டர்டு பவுடர் வழங்கும் தீஞ்சுவையுள்ள 'திடீர்த் தயாரிப்பு.'



கஸ்டர்டு டிலைட்

ஒவ்வொரு நாளும் உங்கள் குழந்தைகளுக்கு பாலின் நற்பண்புகளை வழங்க ஒரு சுவையான வழி. 4 மேசைக்கரண்டி **பிரவுன் & போல்ஸன்** கஸ்டர்டு பவுடருடன் சிறிது குளிர்ந்த பாலைக் கலந்து கொள்ளுங்கள். அதைக் கூழ்போல் கிளறுங்கள். பின்னர் ½ லிட்டர் பாலை சூடாக்கி, அதில் கஸ்டர்டு பவுடர் கலவையையும் 4 மேசைக்கரண்டி சர்க்கரையையும் கலந்து கொள்ளுங்கள். கலவை கெட்டியாகும் வரை கிளறுங்கள். பிறகு அதை சிறிது நெய் தடவிய தட்டில் ஊற்றுங்கள். படியும் வரை குளிரவிடுங்கள். பாதாம் பருப்பால் அலங்கரியுங்கள்.

அருமையான பொருள்களிலிருந்து மிகுந்த கவனத்தோடு பக்குவப்படுத்தப்பட்டதால், கஸ்டர்டு பவுடர்களிலேயே மிகச் **சிறந்தது பிரவுன் & போல்ஸன்.**

வெரைட்டி கஸ்டர்டு பவுடர் பேக்
6 நறுமணச்சுவையான சுவைகளில் கிடைக்கிறது.



முட்டை கலவாதது.

கார்ன் பிராடக்ட்ஸ் கோ. (இந்தியா) பிரை. லிட்.
ஸ்ரீநிவாஸ் ஹவுஸ், எச். சோமானி மார்க், பம்பாய் 400 001.

OBM/5470 TM

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka
இலங்கையில் விலை 75 சதம் (தபால் செலவு தனி)
மலேசியாவில் விலை (விமானப் பதிப்பு) 60 மலேசிய காசு